
www.tamilarangam.net

டிச. 30 - ஜன. 12 1996
இதழ் 98
விலை 7.00

சரிநிகர்
SARINIHAR


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி









## பிரகாசமான இருட்டும் இருண்டு கொண்டு போகும் பிரகாசமும்!



வரலாற்றைப் புரிந்துகொண்டவர்களால்தான் அதை மாற்றி எழுதவும் முடியும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாகரையிலும் பொருளாதாரத் தடை?

கொளுத்தும் வெயில் சுட்டெரிக்கிறது. வரண்ட நாவுகள் நீண்ட வரிசையில் ஒவ்வொரு சோதனைச் சாவடிகள் முன்னாலும் குழந்தைகளும் ஆண்களும் பெண்களும் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னரே நகர முடிகிறது.

நகருக்குள்ளும் நகருக்கு அண்மையிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகவே உள்ளது. வயோதிபர்கள் குழந்தைகள் பாடசாலை மாணவர்கள் அரச உத்தியோகஸ்தர்கள் எல்லோருமே கடுமையான சோதனையின் பின்னரே நகருக்குள் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

மட்டக்களப்பு வாவியிற் நீர்மட்டம் வெகுவாக குறைந்து கொண்டே செல்கிறது. நகருக்குள் குடிநீர் விநியோகம், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது. வட்டிப்பளை, வவுனதீவு,, போரதீவு, வாகரை பிரதேச மக்கள் குடிதண்ணீருக்காக அலைவதாகவும் தெரியவருகிறது.

கடும்வெய்யிலில் வவுனதீவு, மன்முனை, வாகரை பிரதேசங்களில் வயிற்றுப் போக்கு, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதாகவும் தெரியவருகிறது.

அப்பிரதேசங்களில் வைத்தியசாலைகள் இயங்காமை, மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு. நீண்டகாலமாகவே கிணறுகளுக்கு குளோரின் போடாமை, மலத்தியன் தெளிக்காமை போன்றவற்றுடன், சுத்தமான குடிநீர் இன்மையும், கடும் வரட்சியும் நகர வைத்தியசாலைக்கு செல்வதற்காக பஸ்போக்குவரத்து இன்மையுமே தொற்று நோய் பரவலுக்கான தீவிர காரணிகளாகும். உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை மேலும் மோசமாகலாமென தெரியவருகிறது.

இதைவிட பலமாதங்களாக உணவுப்பொருட்கள் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த வாகரைக்கு 22ம்திகதி புதன்கிழமை மூன்று லொறிகளில் ஐ.சீ.ஆர்.சி. யுடன் உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 25,000க்கு மேற்பட்ட மக்கள் வதியும் இப்பிரதேச மக்களுக்கு சென்ற ஜனவரிக்குப் பின்னர் அரச நிவாரண உணவுப் பொருட்கள் எதுவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. நீண்ட நாட்களாக வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் இக்கிராமமக்களுக்கு இவ்வுணவுப் பொருட்கள் எவ்வகையில் உதவும் என்பது கேள்விக்குறியே?

குடாநாட்டைப் போன்றே வாகரைப் பிரதேசமும் அரச படைகளால் பொருளாதாரத் தடைக்குள்ளாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசங்களுக்கு தனியார் எவரும் ஒரு குறிப்பிட்டளவுக்கு மேல் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாது.

அதைவிட இப்பிரதேசங்களுக்கான போக்குவரத்துச்சேவை, தபால்சேவை என்பவையும் முற்றாகத் தடைப்பட்ட நிலையிலேயே உள்ளன. எம்.எஸ்.எப். நடத்தி வந்த சுகாதார சேவையும் முற்றாகத்தடைப்பட்ட இப்பிரதேசத்தில் இருந்த ஒரேயொரு பொதுவைத்தியசாலையும் ஷெல் வீச்சுக்களினால் சேதமடைந்த நிலையிலேயே உள்ளது.

கரடிக்குளம் முகாமிலிருந்து வாகரையை நோக்கி காலைநேரமின்றி தினமும் ஷெல் வீச்சுக்கள் இடம் பெறுவதாக அங்கிருந்து கால்நடையாக வருவோர் தெரிவிக்கிறார்கள்.

இச்ஷெல்வீச்சுக்களினால் நூற்றுக்கணக்கானவர்களின் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அங்கிருந்தவர்கள் கதிரவெளி பனிச்சங்கேனி பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதே போல் வாழைச்சேனைக்கு அருகிலுள்ள நாசிவன்தீவு கிராமமும் இப்பிரதேசத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. இப்பிரதேசத்துக்கான ஒரேயொரு படகுச்சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பேய்த்தாளை முகாமிலிருந்து தினமும் நாசிவன் தீவை நோக்கி ஷெல்வீச்சுக்களும் நடைபெறுகிறது.

– குருஷேத்திரன்

## மின்தடை: உயரதிகாரிகளே பொறுப்பு!

தற்போதைய மின்சார நெருக்கடிக்கு மின்சாரசபை உயரதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும் என மின்சார சபை அதிகாரிகளும், ஊழியர்களும் தெரிவித்துள்ளனர்.

மின்சார கேள்வி அதிகரிக்கின்றமை பற்றியும், ஏற்பட்டு வரும் நீர் நெருக்கடி பற்றியும் கடந்த நவம்பர் மாதத்திலிருந்தே பொறியியலாளர்களாலும் மாற்றுப் பத்திரிகைகளாலும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அவற்றைக் கணக்கில் எடுக்காது லெஸ்லி ஹேரத்தும் (தலைவர்), ரணவிராஜவும் (செயலாளர்) எதிர்ப் பிரச்சாரம் செய்தனர். இதனால் அவர்கள் எந்த மாற்று நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தால் இந் நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்த மாத இறுதிக்கு முதல் பருவ மழை பெய்யாதுவிடின் நீர் மின் உற்பத்திக்கு உதவும் 15 நீர்த் தேக்கங்கள் வற்றி உற்பத்தி செய்யப்படும் 1393.45 மெகா வாட்ஸில் 1137.45 மெகா வாட்ஸ் இழக்கப்பட்டு இதனால் ஒரு நாளைக்கு மின்வெட்டு 18 மணித்தியாலம் நீடிக்கப்படுவது என்பது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பசுபிக் சமுத்திரத்தில் ஜப்பானைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட காற்றுநிலையும் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள உயரமுக்கமும் இலங்கைக்குப் பருவ மழை கிடைப்பதற்குத் தடையாக உள்ளது.

ஜுன் மாத முதல் வாரமளவில் மழையை எதிர்பார்க்க முடியாதென வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

நெருக்கடியைத் தீர்ப்பதற்காக 40 மெகாவாட்ஸ் மின் கொள்ளளவை உற்பத்தி செய்யக்கூடிய பாரிய ஜெனரேட்டர் ஜேர்மன் நிறுவனமொன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதனை களனிப் பாலத்தின் மேல் கொண்டு செல்ல வீதி அபிவிருத்தித் திணைக்களம் எதிர்ப்புக் காட்டியது. களனி கங்கையினூடு கொண்டு செல்லப்படவிருந்த முயற்சியும் தோல்வி அடைந்துள்ளது. இதன் உற்பத்தி 1997 ஜுலை மாதமே ஆரம்பிக்கப்படும்.

இந்நிலைமையின் கீழ் அடுத்த மாத முதல் வாரத்தில் கூட மழை கிடைக்காவிடின் 18 மணித்தியால மின்வெட்டு தவிர்க்க முடியாததாயிருக்கும்.

றாவய 19960526

## மூதூர்: கள்ளமாடும் காவாலித்தனமும்!

மூதூர்ப் பிரதேச சபையைச் சேர்ந்த சகல ஊழியர்களும் கடந்த 28ம் திகதி தொடக்கம் வேலைக்குச் செல்ல மறுத்து வருகிறார்கள். கள்ளமாடு அறுத்ததாக எஸ். தங்கராசா, ஆர் தங்கராசா, முனியாண்டி ஆகியோரை பொலிசார் முறையற்ற வகையில் தாக்கியதாகவும், அவர்கள் கள்ளமாடு வெட்டவில்லை, மாடு வெட்டும் தொழுவத்தை கழுவச் சென்றவர்களே எனக்கூறித்தடுக்க முயன்ற பொது சுகாதாரப் பரிசோதகர் பீ. முனீர் என்பவரையும் பொலிஸார் அவமானப்படுத்தியதாகவும் கூறி பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும் வரையும் வேலைக்குச் செல்லப் போவதில்லை என உத்தியோகத்தர் முதல் தொழிலாளர் வரை இச்செய்தி எழுதும் வேளை வரை வேலைக்குச் செல்லாமல் இருக்கிறார்கள்.

சிவில் உடையில் சென்ற பொலிசார் 28ம்திகதி மாலை இறைச்சிக்கடைக் காரரான ஜமால்டீன் என்பவர் ஒரு மாட்டை அறுத்துக்கொண்டிருப்பதை கண்டிருக்கிறார்கள். ஜமால்டீனை இழுத்து வந்த பொலிஸார் வழமை போல சற்றுத் தள்ளி மாடு வெட்டும் தொழுவத்தை கழுவிக் கொண்டிருந்த தொழிலாளர் மூவரையும் தாக்கினார்களாம். தொழிலாளர்களோ வழமைபோல பணியைச்செய்யவந்தவர்கள். இவர்களுக்கும் மாடு வெட்டியவர்களுக்கும் தொடர்பு கிடையாது என்கிறார் பிரதேச சபைத்தலைவர் ஜனாப் எம்.ஏ.எம் ரபீக்.

தொழிலாளர்கள் நசுக்கப்படும் செய்தி பொது சுகாதாரப் பரிசோதகருக்கு எட்டியதும் உடனடியாக விரைந்து சென்று தொழிலாளர்கள் தொழுவம்கழுவ வந்தவர்களே என வலியுறுத்திய போதும் அவருக்கும் அடி விழுந்ததாம்.

இதனைத் தொடர்ந்து மாடு வெட்டியவர், பிரதேச சபைத் தொழிலாளர்கள் பொது சுகாதாரப் பரிசோதகர் அனைவரும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாக கூறும் பிரதேச சபைத் தலைவர் தான் போய் அவர்களை மீட்டு வந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாக கூறினார்.

தொழிலாளர்கள் மூவரும் மூதூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஊழியர்கள் வேலைக்கு செல்ல மறுத்ததனால் நிலைமை சிக்கலாகியுள்ளது. வேலைகள் ஸ்தம்பித்து போயுள்ளன. தெருவில் குப்பைக்கூழங்கள் நிறைந்துள்ளன. இறைச்சிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நான் இந்த சம்பவத்தை உரிய இடங்களுக்கு கொண்டு சென்றுள்ளேன். முடிவு வரும்வரையில் ஊழியர்களை வேலைக்கு திரும்பும்படி கேட்கமுடியாது என்ற கருத்து தலைவரின் பேச்சில் ஒலிக்கிறது.

*-விவேகி-*

## மறைந்த கப்பல்!

அரச கூட்டுத்தாபனமொன்றுக்கு 25 மெட்ரிக் தொன் அலுமினியத்தூள் ஏற்றி வந்த 'எம்.வி. மதீனா' எனும் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வெளியே மர்மமான முறையில் காணாமல் போயுள்ளது.

கடந்த 6ம் திகதி தூத்துக்குடியிலிருந்து கொழும்பு வந்த இக்கப்பலில் பிற அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு மிளகாயும் வந்துள்ளது. இவை இறக்கப்பட்ட பின் ஏற்பட்ட சிறு தீ விபத்தின் காரணமாக துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்படுமாறு கோரப்பட்ட தாகவும், அவ்வாறு இடம்பெற்ற பின்னரே காணாமல் போயுள்ளதென்றும் தெரியவருகிறது. குறித்த அலுமினியம் வெடிமருந்துகளின் செயற்திறனை இரட்டிப்பாக்கக் கூடியதென்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. மேலும், இக்கப்பல் எந்த நாட்டிலும் பதிவு செய்யப்படவில்லை என்றும் அறிய முடிகின்றது.

குறித்த அலுமினியப் பொருள் கிடைக்காததால் நஷ்டமடைந்திருக்கும் கூட்டுத்தாபனம் கப்பல் ஏஜன்டுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளது.

– லங்காதீப –

## மலிவு விலையில் மின்சார சபை!

மதிப்பீட்டு பெறுமானம் ரூபா 50 கோடியாகவும் விற்பனைப் பெறுமதி ரூபா 1000 கோடியாகவும் உள்ள இலங்கை மின்சார சபையின் கேள்விப் பத்திரங்கள் கடந்த வாரம் முன்வைக்கப்பட்ட போது அதியுயர் கேள்வியாக இருந்தது ரூபா 120 கோடி மட்டுமேயாகும்.

நாட்டின் மின் வளங்களையும் தனியார்மயப்படுத்தும் நோக்குடன் விற்கப்படவிருக்கும் இலங்கை மின்சார சபை தொடர்பாக அரசாங்கம் எதிர்பார்த்ததையும் விட இக்கேள்வித் தொகை மிகக் குறைவாகும். அரசுக்கு பணம் தேவையெனின் இலங்கை மின்சாரச் சபையின் சேகரிக்கப்பட்ட சொத்து க்களின் பெறுமதியில் (ரூ.1000 கொடி) ரூ.120 கோடியை எடுத்துக் கொண்டு எஞ்சிய சொத்துக்களை விற்காமல் இருப்பது சிறந்தது என இலங்கை மின்சார சபை செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை, அரசின் பணத் தேவை, இலங்கை முதலீ டுகளில் பலருக்கு தரகுப்பணம் தரவேண்டி யிருப்பது, மற்றும் உலக வங்கியின் வழிகாட்டலின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்கள் தெற்காசியாவில் மின் நிலையங்களை அமைப்பதால் அதற்குப் போட்டியாக இருப்பது போன்ற காரணங்களே மிகக் குறைந்த விலையில் இச்சபையை விற்பதற்கு காரணமாகவுள்ளது என தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அரசின் சொத்துக்களை குறைந்த விலையில் விற்றுள்ளனர் என கடந்த அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிய இவ்வரசாங்கம் இலங்கை மின்சார சபையை குறைந்த விலையில் விற்பதன் மூலம் அதே தவறையே செய்கிறது எனலாம். இ.மி.சபையை விற்பனை செய்வதற்கு என மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இதன் படி அவுஸ்திரேலியாவின் எஸ்.என்.ஈ.சி எனும் சர்வதேச நிறுவனமும், அதனோடு இணைந்த இன்டிகிறல் எனர்ஜி நிறுவனமுமே ரூ.120 கோடியை முன்வைத்தவையாகும். அமெரிக்காவின் ஏ.ஈ.எஸ். டிரான்ஸ்பவர் நிறுவனமும் அதனோடு இணைந்த பிலிப்பைன்ஸின் மெரல்கோ எஞ்சினியரிங் சேர்விஸ் நிறுவனமும், நேர்ர்வேஜியன் பவர் டிஸ்ட்ரிபியுஷன் உடன் இணைந்த டிமோ நிறுவனமும் குறைந்த விலைகளை கோரிய ஏனைய நிறுவனங்களாகும்.

## அவர்களுக்கு என்ன நடந்தது?

யாழ்நகரில் கைது செய்யப்பட்டு கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படும் அறுபது தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்றும் அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் கேட்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் கடந்த ஏப்பிரல் மாதம் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று (ஏப்பிரல் 29, 1996) 60 இளைஞர்கள் வெற்றுடம்புடன் திருமலைக்குக் கப்பலில் கொண்டு வரப்பட்டு, கப்பல் இறங்கு துறையிலிருந்து பிளான்டன் பொயின்ற் என்ற இடத்திலுள்ள இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள் என்றும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்றும், இவர்களது வயது 15 அளவில் இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. இதன் பின் இவர்கள் இரண்டு பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு கொழும்பு நோக்கிக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது என்றும், இவர்களுக்கு என்ன நடந்தது? எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

அக்கடிதத்தில் அவர் மேலும் ஒரு சம்பவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1996 மே 18ம் திகதி தெகிவளைச் சந்தியில் இரண்டு சிறைச்சாலைத் திணைக்களத்துக்குச் சொந்தமான கறுப்பு மரியா வாகனங்களில் அடைக்கப்பட்ட நிலையில் வெற்றுடம்புடன் கூடிய கறுப்பு நிற இளைஞர்கள் இரத்மலானைப் பக்கமிருந்து கொழும்பு நோக்கி கொண்டு செல்லப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் நடந்த நேரம் பி.ப.5.35. இந்த வாகனத்தில் சிலர் நின்றிருந்தார்கள். ஏனையோர் அமர்ந்திருந்தார்கள். இந்த இளைஞர்கள் அனேகமாகத் தமிழர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவர்கள் யார்? இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தாம் அறிய அக்கறையோடு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடவே வெலிக்கடை, மகஸின்சிறையில் பெப்ரவரி 19ம் திகதி நடைபெற்ற தமிழ்க் கைதிகள் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணை முடிவுகளுக்கும் என்ன நடந்தது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இக்கடிதம் மே 27ம் திகதி குமார் பொன்னம்பலம் அவர்களால் ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### திருத்தம்

*சரிநிகர் பெப்ரவரி 7-21 மார்ச் 1996 இதழின் 7ம் பக்கத்தில் "ஊழல் பெருச்சாளியின் புகலிடம்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையை சரிநிகர் முற்றாக வாபஸ்பெற்றுக் கொள்கிறது.*

*அக்கட்டுரையில் திரு. செபமாலை அவர்கள் குறித்து வெளிவந்த செய்திகள் தொடர்பாக அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய மன வேதனைகளுக்காக சரிநிகர் மனம் வருந்துகின்றது.*

*ஆசிரியர்*

www.tamilarangam.net



# பிரகாசமான இருட்டும் இருண்டு வரும் பிரகாசமும்!

அமைச்சர் அனுரத்த ரத்வத்தைக்கு இப்போது நடந்து கொண்டிருக்கும் 'திசை' எதுவோ தெரியவில்லை. ஆனால் நாட்டின் எல்லாத் திசையிலும் அவர் பெயர் அடிபட்டுக் கொண்டுதான் இருக்கிறது. **"Any Publicity is Publicity"** என்பார்கள்.

அமைச்சருக்கு இப்போது உருவாகிவரும் பிரபல்யமும் - அது எப்படியிருந்த போதும் இதுவரை இரண்டாம் மட்ட அரசியல் தலைவர்கட்கும் ஏற்பட்டிருக்காத பிரபல்யம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருபுறம் 'சூரியக்கதிர்' நடவடிக்கை மூலம், பாதுகாப்பு பிரதி அமைச்சர் என்ற முறையில் அவர் சாதித்துள்ள 'சாதனைகளால்' ஏற்பட்டுள்ள பிரபல்யம். மறுபுறம் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் என்ற அடிப்படையில் அவர் செய்து வரும் அற்புதங்களின் காரணமாக எழுகின்ற பிரபல்யம்.

'சூரியக்கதிர்' நடவடிக்கை மூலமாக அனுருத்த அவர்கள் பிரகாசிக்கின்ற பிரகாசத்தின் பருமன் காரணமாக பார்ப்பவர்கள் கண்கள் கூசிப்போய் விடுகின்றதால், வடக்கில் என்ன நடக்கிறது என்றே தெரியமுடியாத இருட்டை அவர் பரவ விட்டுள்ளார். அரசாங்கத்தின் மேல்மட்டங்களில் அமைச்சர் பிரபல்யம் பெற்றுவருவதை கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான முயற்சியாக நடந்து வருவதாக சொல்லப்பட்ட போதும், ரிவிரச நடவடிக்கைகள் மூலமாக அவர் பிரபல்யம் பெறுவதை அவ்வளவாக கட்டுப்படுத்தி விட முடியவில்லை என்றே தோன்றுகிறது.

வடக்கில் யுத்த மூலம் கைப்பற்றிய பிரதேசங்களில் இராணுவ நிலைகளை வலுப்படுத்த அங்குள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க, சிவில் நிர்வாகத்தை மீளமைக்க, மின்சார நிலையங்களைப் புதுப்பிக்க என்று அவர் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை பத்திரிகைகளும் பிற தொடர்பு சாதனங்களும் வெளியிட்டு வருகின்றன. அங்கு என்ன நடக்கின்றது என்பதை அவர் தீர்மானிக்கின்றார். அங்கு நடப்பவற்றில் எவற்றை வெளியே சொல்ல வேண்டும் என்பதை அவர் தீர்மானிக்கின்றார்; அங்கு எவையெல்லாம் நடக்கவில்லை என்பதை அவர் சொல்கிறார்; அங்கு யார்யார் போகவேண்டும் யார்யார் போகக்கூடாது என்பதையும் அவரே தீர்மானிக்கின்றார். ஆக மொத்தத்தில் அங்கு எல்லாம் அவர் மயமாகவே உள்ளன.

வடக்கு புலிகளிடமிருந்து விடுவிக்கப் பட்டு விட்டது; அங்குள்ள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறார்கள் என்பதையெல்லாம் அவர் மக்களுக்குத் தெரிவிக்கின்றார். ரிவிரச நடவடிக்கைகளின் பின் வடக்கைப் பார்க்க விரும்புகின்ற ஒவ்வொருவரும் அனுருத்தவின் கண்ணாடிக்குள்ளாகவே அதைப் பார்த்துக் கொள்கின்றனர்.

தணிக்கைச் சட்டமும் அமுலில் இருக்கின்றது; அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றது. எனவே அவர் சொல்வதே உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற நிலை இங்கு உருவாகி விடுகின்றது.

இதைத்தான் முன்பெல்லாம் 'இரும்புத் திரை' என்பார்கள். செய்திகள் ஒரேயொரு ஊடகத்தூடாக மட்டும் வர முடிகின்ற சூழல் நிலவுகிற போதெல்லாம் உண்மை புதைக்கப்படுகிறதும் நடந்து விடுகிறது. மக்கள் இரும்புத் திரை கட்டி புறஉலகிலிருந்து ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள் என்று ஜனநாயகவாதிகளும் சுதந்திர தொடர்பு சாதனவியலாளர்களும் கூறுவார்கள்.

ஆனால் இன்று இப்படி யாரும் சொல்வதில்லை. சொல்பவர்களும் அருகிலிருப்பவர்கட்குக் கூடக் கேட்காமல் மௌனமாகவே சொல்லி விடுகிறார்கள்.... அனுருத்த சொல்பவைகளே உண்மையாக இருக்கின்றது என்று நம்புவதில் அவர்களுக்கு அவ்வளவு அக்கறை.

இது குடாநாட்டை பயங்கரமான இருண்ட பிரதேசமாக்கி விட்டுள்ளது. சூரியக் கதிரின் தாக்கத்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதால் இதை வேண்டுமானால் பிரகாசமான இருட்டு என்று சொல்லிக் கொள்ளலாம்.

''அது சரி, ரிவிரசவின் முன் மட்டும் அங்கெல்லாம் பிரகாசமாக இருந்ததோ'' என்ற கேள்வி இவ்விடத்தில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

அது எல்லாம் உண்மைதான். ஆனால் மக்கள் எதிர்பார்த்தது அதிகாரம் யார் கையிலாவது மாறவேண்டும் என்பதல்ல. அந்த நிலைமை மாறவேண்டும் என்பதைத்தான்.

ஐ.தே.க ஆட்சி மட்டும் என்ன திறமா என்ற கேள்விமூலமோ, அல்லது புலிகளிடம் அந்த மக்கள் பட்ட அவஸ்தையை விடவா என்பதுபோன்ற கேள்விகள் மூலமோ நியாயப்படுத்த முயல்பவர்கள் என்னதான் முனைந்தாலும் இருட்டு இருட்டுத்தான் என்பது பிரகாசமாகவே தெரிகிறது.

மறுபுறத்தில், நீர்மட்டம் வற்றிக் கொண்டிருக்கிறது என்பதால் கொஞ்சம் கொஞ்சமாக மின்வெட்டு வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இருட்டு நேரம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. ஒருவேளை கடந்த ஆறு வருடங்களாக குடாநாட்டு மக்களும் மின்சாரமில்லாமல்தானே இருந்தார்கள் மற்றவர்கள் மட்டும் இருக்கமுடியாதா? என்று அமைச்சர் கருதுகிறாரோ என்னவோ? மின்தடை அளவை அதிகரிப்பது குறித்து அவருக்கு எந்தத் தயக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் காட்டத் தான் ஐ.தே.க அரசாங்கம் இருந்துள்ளதே போதாதா என்ன? பொ.ஐ.மு ஆட்சிக் காலத்தில் தலைவலி வந்தால் கூட ஐ.தே.கவின் முன்னைய ஆட்சிதான் காரணம் என்றோ அல்லது புலிகள் தான் காரணம் என்றோ சொல்லி விடுவதுதான் எவ்வளது இலேசான காரியமாகி விட்டது.

ஆக, மொத்தத்தில் வடக்கில் பிரகாசமான இருட்டையும் தெற்கில் இருண்டு கொண்டிருக்கும் பிரகாசத்தையும் வழங்கிக் கொண்டிருக்கிறார் அமைச்சர் அவர்கள்.

அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த 'திசை' மாற்றம் நமது தமிழ்க் கட்சிகளுக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

அண்மையில் கொழும்பு கூட்டமொன்றில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வளவு காலமும் அடக்கி வைத்திருந்த அவரது ஆற்றாமையை அடக்க முடியாமல் வெளிப்படையாகவே ''இந்த அரசாங்கம் எம்மை ஏமாற்றி விட்டது. யுத்தம் முடிந்து விட்டால் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை உடைப்பில் போட்டு விடுமோ என்று எண்ண வேண்டியுள்ளது'' என்ற அர்த்தப்படப் பேசியுள்ளார்.

யாழ் குடாநாட்டை அரசுப் படைகள் கைப்பற்ற வேண்டும் புலிகள் முடக்கப்பட வேண்டும் என்பதில் தீவிர ஆர்வமுடையவையாக இருந்த தமிழ்க் கட்சிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு முடிவை அண்மையில் பாதுகாப்பு அமைச்சு எடுத்திருந்தது. அதுதான் தீவுப் பகுதியில் தாம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், ஆயுதமேந்திய தமிழ்க் கட்சிகளுக்கு அங்கு சுதந்திரமாக நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு வாய்ப்புக் கொடுப்பது அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விடும் என்று அரசாங்கம் கருதியதாகும். இதனால் அங்கு நேரடியாகவே அரச இராணுவ, பொலிஸ் பாதுகாப்பில் நிர்வாகத்தை அரசாங்கமே மேற்கொள்வது எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது மட்டுமல்ல அங்குள்ள தமிழ் மக்கள் இந்த அரசியல் கட்சிகள் யாழ் வருவதை விரும்பவில்லை என்றும் அறிவித்திருந்தது.

குடாநாட்டின் பெரும்பான்மைத் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு இது பேரதிர்ச்சியாக இருந்திருக்கும் என்பதில் வியப்பில்லை. அத்துடன், தாம் யாழ் நோக்கி போக விருப்பம் தெரிவித்த போது அரசாங்கம் ஆயுதங்கள் எதுவும் இன்றிச் சொந்த தங்குமிட மற்றும் உணவு ஒழுங்குகளை செய்து கொண்டு அங்கு போகலாம் என்று அவர்களுக்குத் தெரிவித்தது இன்னுமொரு பலத்த அடியாக அவர்களுக்கு விழுந்துள்ளது.

ரிவிரச நடவடிக்கை மூலம் குடாநாட்டை விடுவித்த அரசாங்கம் அங்கே தனது அரசியல் செல்வாக்கைப் பெருக்கவும், தெற்கில் ஏற்பட்டு வரும் அரசியல் நெருக்கடிக்கு அங்கு வரக்கூடிய ஆதரவை வைத்துப் பதில் சொல்லவும் விரும்புவது இயல்பானதே. (போதாததற்கு தமிழ்க் கட்சிகளை அனுப்பாதீர்கள், அரசிற்குச் சார்பான அணியொன்றை நாமே கட்டுவோம் என்று அரசுக்கு ஆலோசனை கூற சில அரச சார்பு தமிழ் புத்திஜீவிகளும் இருக்கிறார்கள்.) ஆனால் அரசாங்கம் பிடித்துத் தரும், நாம் போய்த் தர்பார் நடத்தலாம் என்றிருந்த அரசியல் கட்சிகளுக்கு இது புதிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில், கட்டுக் கட்டாக வோட்டுக்களைப் போடக் கிடைத்த வாய்ப்புப்போல ஒரு வாய்ப்பும் குடாநாட்டில் அடுத்த முறை தேர்தல் ஒன்று நடந்தால் கிடைக்கும் என்ற நப்பாசை தகரவே அவை அரசாங்கத்தின் மீது கடும் சீற்றம் கொண்டுள்ளன.

இந்தச் சீற்றத்தின் ஒரு வெளிப்பாடுதான் மேலே உதாரணம் காட்டப்பட்ட சுரேஸ் அவர்களின் பேச்சும்.

எந்த அரசாங்கம் தம்மை ஏமாற்றி விட்டதாக, தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து விடும் என்று தாம் அஞ்சுவதாக சுரேஸ் அவர்கள் குறிப்பிட்டார்களோ அதே அரசின் படைகளுடன் சேர்ந்து அவரது கட்சியின் போராளிகள் கிழக்கில் 'விடுதலைப்போர்' நடாத்தி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு தவறான அரசியல் வழியைக் காட்டுகிறார்கள் புலிகள் என்று கூறி அவர்களுக்கு எதிராக அரசாங்கத்துடன் கைகோர்த்து நின்று போரில் இறங்கிய இந்த இயக்கங்கள், புலிகளுக்கு மாற்றாக தமது வழியை முன்வைத்து மக்களின் உரிமைகட்காக போரிடுவதை விட இலகுவான வழியாக அதை தேர்ந்தெடுத்த இக் கட்சிகள், இப்போது யாழ் வருவது தேவையில்லை, அதைவிட அரசாங்கமே பரவாயில்லை என்று பாதுகாப்பு அமைச்சு கூறுவது போலவே தமிழ் மக்கள் நினைத்தால் கூட அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

எங்களுக்கு 'புரோக்கர்கள் தேவையில்லை' என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ?

ஆனால், இக் கட்சிகள் இக் கட்டத்திலாவது ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அதுதான் இந்த அரசு தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கக்கூடிய ஒரு அரசாகத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளதா? அல்லது அவ்வாறு அதை மாற்றும் முயற்சிகளில் இன்றைய அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா? இந்த அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு ஒரு கண்துடைப்பு நாடகமா அல்லது உரிமைகளை வழங்க எடுத்துள்ள நேர்மையான முயற்சியா? தமிழ் மக்களது உரிமைகள் அரசாங்கம் போடுகிறதை ஏற்றுக் கொள்கின்ற பிச்சைகளா? அல்லது போராடிப் பெறப்பட வேண்டியவையா? இவ்வளவு கால வரலாற்று அனுபவங்களும் எதைக் காட்டுகின்றன? புலிகளின் போராட்ட வழியும் நடைமுறையும் மோசமான தவறு அல்லது அடக்கப்பட வேண்டியது என்று இக்கட்சிகள் கருதினால், அச் செயலைச் செய்ய வேண்டிய பொறுப்பு அவர்களதா? அல்லது இந்திய இலங்கை அரசாங்கங்களதா? - இவைதான் இன்று இக் கட்சிகள் விடைகாண வேண்டிய கேள்விகள்.

உண்மை கசப்பாக இருக்கலாம். ஆனால் அதை தரிசிக்கும் திராணியுடன் இவற்றுக்கு விடை காண முற்பட்டால் ஒழிய இக் கட்சிகளின் அரசியல் வாழ்வுக்கு அதிக நாள் ஆயுளில்லை.

புத்திசாலிகள் புரிந்து கொள்வார்கள். விடாக்கண்டர்கள் அழிந்து போவார்கள் அற்ப சந்தோசங்களுக்காக.

இன்று குடாநாட்டில் உருவாகியுள்ள இருட்டு சாதாரண இருட்டல்ல. கண்ணைப் பறிக்கிற பிரகாசமான இருட்டு; மக்களது அனைத்து வளங்களையும் செயலற்றதாக ஆக்குகிற இருட்டு; உரிமைகளை யுத்த சவால்களுக்குள் மூடி மறைத்து விடக்கூடிய ஆபத்து நிறைந்த இருட்டு.

இதிலிருந்து அங்குள்ள மக்கள் மீளவும் அவர்கள் சரியான தலைமையின் கீழ் அணிதிரளவும் தேவை அர்ப்பணிப்புள்ள மக்களது அரசியல் மீதான அக்கறை.

தம்மையும், தம் மக்களையும் தமது எதிரியையும் புரிந்து கொள்ள எவரொருவர் தயாரோ அவர்தான் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும். வரலாற்றைப் புரிந்தவர்களால்தான் அதைப் புதிதாக எழுதவும் முடியும்.

நிரேஷ்பாலன்:



## மஞ்சரிக்குத் தடை

இறுதியாக புலிகளால் தடை செய்யப்பட்ட பத்திரிகை என்ற பட்டியலுள் கனடாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த மஞ்சரியும் வந்து சேர்ந்திருக்கிறது.

மஞ்சரி தடை செய்யப்பட்டது குறித்து அதன் ஆசிரியரான டி.பி.எஸ். ஜெயராஜ் ஒரு நீண்ட கட்டுரையை சண்டே ரைம்ஸ் இல் எழுதியிருக்கிறார்.

மஞ்சரியைப் புலிகள் தடை செய்தது பலருக்கும் ஆச்சரியமூட்டக் கூடும்தான் ஆனாலும் அது நடந்திருக்கிறது.

'மாத்தயா விவகாரம் குறித்த சில செய்களை வெளியிட்டதாலும், புலிகளின் நலன்களுக்குப் பாதகமான சில செய்திகளை வெளியிட்டதாலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொள்வதாகக் கூறிக்கொள்ளும் நியோ - பாசிச சர்வாதிகார அமைப்பானது அதனைச் சகித்துக் கொள்ளமாட்டாமல் மஞ்சரியைத் தடைசெய்து விட்டது' என்று குமுறியிருக்கிறார் அவர்.

புலிகள் எந்தவகையான மாற்றுக்கருத்துக்களையும் சகித்துக்கொள்வதில்லை என்பதும், அவற்றை வெளிவராமல் தடுத்து விடுவதிலேயே எப்போதும் குறியாக இருந்து வருபவர்கள் என்பதும் ஒன்றும் யாரும் அறியாத, புரியாத புதிய விடயமல்ல.

ஏற்கெனவே கனடாவில் வெளியான தாயகம் பத்திரிகை புலிகள் தொடர்பான விமர்சனங்களை வெளிப்படுத்திய போது அதன் விற்பனையைத் தடை செய்திருந்தனர் புலிகள். தேடகம் என்ற புலிகள் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்த அமைப்பினரின் தேடகம் நூல்நிலையத்தைத் தீக்கிரையாக்கினர் புலிகள். அங்கிருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களும், ஆவணங்களும் சாம்பராயிற்று. யாழ்நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது எழுந்த சாம்பற் துகள்கள் போன்றுதான் இங்கும் எல்லாம் சாம்பராயின.

இவ்வாறான சம்பவங்களின் போதெல்லாம் இவற்றைக் கண்டிக்காது மௌனம் காத்து, தனது நடுநிலைமையையும் பத்திரிகா தர்மத்தையும் காப்பாற்றிக்கொண்ட டி.பி.எஸ். ஜெயராஜின் மஞ்சரி பத்திரிகையை அவர்கள் தடை செய்தது தான் இப்போது டி.பி.எஸ். இன் கோபத்துக்குக் காரணமாயிற்று.

அவரது கோபம் நியாயமானதுதான். ஏனெனில், மேலே குறிப்பிட்டவற்றுக்கும் ஒரு படி மேலே சென்று வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து கனடாவிலுள்ள தேடகம் குழுவினருடன் சரிநிகரும் சேர்ந்து மூன்றாவது ஆண்டு நினைவுக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தபோது 'தயவு செய்து எங்களைப் பாவியாதீர்கள் - தேடகம் குழுவினருக்கு யாழ் முஸ்லிகள் வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியில் அஷ்ரஃப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை அரசாங்கத்தின் துணையுடன் இவ்வாறான கூட்டங்களை ஒழுங்கு செய்து வருவதாகவும், தேடகமும் அவ்வடிப்படையிலேயே இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருப்பதாகவும் கூறி, தேடகத்தை ஒரு அரசு சார்பு நிறுவனமாகக் காட்டி தனது 'பத்திரிகா தர்மத்தையும்' புலிகள் மீதான அபிமானத்தையும் வெளிப்படுத்தியவர் டி.பி.எஸ்.

ஆனால் தேடகத்தை அரச சார்பு நிறுவனமாகக் காட்ட முயன்ற டி.பி.எஸ். மாத்தயா கைது செய்யப்பட்ட விடயம் சம்பந்தமாக எழுதும் போது தனது பத்திரிகையில் 'மாத்தயா விவகாரம் புலிகளின் நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ளது, நீதிமன்றத்துக்கு முன்னாலுள்ள விவகாரம் குறித்து அபிப்பிராயம் சொல்வது எப்படி முறையற்றதோ அவ்வாறே இதுவும். எனவே இது குறித்து நாம் அபிப்பிராயம் சொல்லப் போவதில்லை' என எழுதிவிட்டு அதே பிரச்சினை குறித்து அதே காலப்பகுதியில் ஐலன்டில் எழுதிய கட்டுரையிலோ 'புலிகளின் நீதிமன்றம் கெங்காரு நீதிமன்றம் போன்றது. விசாரணைக்கு முன்பே தீர்ப்பு எழுதப்பட்டு விட்டது. விசாரணை விழுமியங்கள் மீறப்பட்டு விட்டன என்று எழுதியிருந்தார். இதுதான் அவரது பத்திரிகா தர்மம். பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலும் போல புலிகளுக்கு வால்காட்ட முனைய இது புலிகளுக்கு புரிந்ததாலோ என்னவோ புலிகள் வழமைபோல தங்கள் கைவரிசையைக் காட்டினார்கள். ஆனால், அப்போது கூட தன்னைப் புலிகள் தான் தாக்கினார்கள் என்று கூறத் தயங்கியது மட்டுமல்ல, புலிகளுடன் சுமுகமான உறவைப் பேணிக்கொண்டு வியாபாரத்தை நடாத்துவதில் முனைப்பாயிருந்தார்.. ஆனால், அது சாத்தியமாகவில்லை. ஆக, இப்போது புலி எதிர்ப்பு வியாபாரத்தில் இறங்கியிருக்கிறார். எவ்வாறாயினும், டி.பி.எஸ். இன் பத்திரிகா உலக நடத்தைகள் எவ்வாறு இருப்பினும் புலிகளின் இந்த நடவடிக்கை எவ்விதத்திலும் நியாயப்படுத்தப்படக்கூடியதல்ல. பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வைக்கின்ற எவருக்கும் விடுதலை பற்றிப் பேசுகிற தார்மீக உரிமை கிடையாது.


– பிசெயஸ்ஷி –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வட பகுதி கைப்பற்றப்படலும் முஸ்லீம்களின் மீள்குடியேறலும்



-ஆர்.எம். இம்தியாஸ்-

இலங்கைத் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை முன்வைப்பதற்கு மக்களிடம் தெளிவான அங்கீகாரம் பெற்ற அரசாங்கம் ஒழுங்கமைக்கப் பட்ட தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் (சூரியகதிர் 1, 2, 3) மூலம் யாழ் குடாநாட்டை மீளக் கைப்பற்றியுள்ளதாக அறிவித் துள்ளது. இதனை அடுத்து யாழ் குடாநாட்டில் இருந்து புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மிகவும் சந்தோஷத்துடன் தமது பழைய இருப்பிடங்களை நோக்கி நகர்வதாக அரசு தொடர்ச்சியாகப் பிரச்சாரப்படுத்து கிறது. யுத்தத்தால் அகதியான மக்கள் வாய்ப்பு வரும் போது தமது சொந்தப் பிரதேசங்களை நோக்கி நகர்வது ஒன்றும் புதிதான சமாச்சாரமல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்ப் புலிகளால் துரத்தப்பட்ட யாழ் குடாநாட்டு முஸ்லிம்களது நிலைமை கறாரான கவனத்தைப் பெற்று வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்கள் இரண்டாம் ஈழப் போருக்கு பிறகு தமது சொந்த இடங்களிலிருந்து 24 மணித்தியாலத்திற்குள் பாதுகாப்பு காரணம் கருதி தமிழ்ப் புலிகளால் விரட்டப் பட்டார்கள். இவ்வாறு மனிதாபிமான மற்ற முறையில் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் தென்னிலங்கைப் பகுதிகளில் அரசாங்கத்தின் திருப்திகரமான ஒத்துழைப்பின்றி மிகவும் மோசமான சூழலுக்குள் வாழ்ந்து வருகிறார்கள். தமது சொந்த இடங்களுக்கு பாதுகாப்பான சூழலில் திரும்புவதன் மூலமே தமது இன்றைய இன்னல்கள் துடைக்கப்படும் என்று புலம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் முஸ்லிகள் நம்புகிறார்கள். ஆயின், இன்றைய யாழ்ப்பாணச் சூழல் முஸ்லிகளுக்கு பாதுகாப்பான உத்தரவாதத்தை வழங்குமா என்பது முக்கியமான கேள்வியாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றே நம்பகரமான சுமூகச் சூழலை உருவாக்கும். கௌரவபூர்வமான அரசியல் தீர்வை முன்வைக்காது முன்னெடுக்கப்படும் இராணுவத் தீர்வுகள் இனப்பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டதற்கான சூழல்களை தோல்வியடையச் செய்யாது. இவ்வாறான நிலைமையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை விரைவு படுத்தி அரசியல் தீர்வு ஒழுங்குகளை பின் தள்ளச் செய்வது சாதகமான புறவியல்களை ஏற்படுத்தாது. ஆதலால், இன்றைய இராணுவ கைப்பறுதல முழுமை வாய்ந்ததொரு செயற்பாடாக கணிக்கப்பட முடியாததாகி விடும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தமிழ்ப் புலிகளால் விரட்டப்ட்ட முஸ்லிம்கள் அரசின் நம்பிக்கை வார்த்தைகளை நம்பி மீளக் குடியேறச் செல்வது ஆரோக்கியமற்றதாகவே கருதப்படுகிறது. அரசின் செயற்பாடுகளுக்கு உதவினீர்கள் என்ற காரணத்தை முன்வைத்து மீளவும் முஸ்லிகளை தமிழ்ப் புலிகள் விரட்டவும் இது காரணமாகலாம். புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விவகாரத்தில் அவர்கள் மீள யாழ்ப்பாணம் செல்வது சாத்தியமானதாக இருக்கலாம். ஆயின் முஸ்லிம்கள் விவகாரத்தில் தமிழ்ப் புலிகள் தமது தவறுகளை விமர்சனம் செய்துள்ளதாக இன்னும் தெரியவில்லை. ஆதலால் முஸ்லிம்கள் இது விடயத்தில் அவசரமாக முடிவு எடுப்பது ஆபத்துக்களையே தோற்றுவிக்கும்.

முஸ்லிம்கள் இன்றைய சிங்கள இராணுவ கைப்பற்றுதலையே நம்பகரமான சூழலாக நம்பக் கூடாது. நிலைமைகள் முரண்பாடான சூழலுக்குள் தள்ளப்படலாம். தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்காது, முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகள் எப்போதும் சாதகமானதாக அமையாது. அதே வேளையில் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் சிங்கள அரசாங்கத்திற்கு சர்வதேசரீதியில் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தலாம். முஸ்லிம்களும் மீளக்குடியேறுகிறார்கள் என்பதான காரணத்தைக் காட்டி அரசு இராணுவத்தீர்வினை நியாயப் படுத்தலாம். தமது வங்குரோத்து தரகுமுதலாளித்துவ அரசியலைக் காப்பாற்றிக் கொள்ள சர்வதேச உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு முஸ்லிம்கள் எவ் வகையிலும் உதவியாக அமைந்து விடலாகாது.

யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்கள் தமது இன்றைய மோசமான இருப்பிலிருந்து விடுபடுவதற்கு ஒரேயொரு வழி மீளக் குடியேறுதலாகும். ஆயினும் அது பாதுகாப்பான சூழலில் தான் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். பாதுகாப்பான சூழல் என்பது முழுமைவாய்ந்த அரசியல் அதிகாரப் பங்கீடு மூலம் சாத்தியமாக வேண்டும். இதுவே முழுமை வாய்ந்த பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தும். அல்லது தமிழ்ப் புலிகள் முஸ்லிம்களது மீளக் குடியேற்றத்திற்கு பகிரங்கமான அனுமதியை வழங்க வேண்டும். தமிழ்ப்புலிகளின் பகிரங்கமான அனுமதியின்றி யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்கள் மீள் குடியேறுதல் அரசியல் தற்கொலைக்கே உதவும். முஸ்லிம்களின் சுயநிர்ணயம் தமிழ்ப் புலிகளின் முடிவில் அமைந்துள்ளதா என்ற வினா இங்கு ஏற்படலாம். யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் உரிமை உடையவர்கள். ஆயினும் புறவியில் சூழல்களைப் புரிந்து கொண்டு செயற்படுவது முக்கியமானது. தமிழ்ப் புலிகளது பச்சைக்கொடி எமக்கு அவசியமில்லை என்று சிங்கள இராணுவத்தின் மனிதாபிமானத்தை தொலைக்காட்சிகளில் ரசித்துவிட்டு முன் வைக்கப்படும் , முடிவுகள் திருப்தியான நன்மைகளை வழங்கப்போவதில்லை என்பது மட்டும் உண்மையாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம் பெயர்ந்த முஸ்லிம்கள் தமது மீள் குடியேற்றம் தொடர்பாக நிதானமான முறையில் முடிவு எடுக்க வேண்டும். யாழ்ப்பாண முஸ்லிம்கள் நலன்கள் சார்பாக செயல்படும் அமைப்புகள் இது விடயத்தில் பரந்த ரீதியில் செயற்பட வேண்டும். குறுகிய கால நலன்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அதிகார நலனுக்காக மட்டும் செயற்படல் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக சிறுபான்மை சமூகங்களது அபிலாசைகளை பயங்கரவாதமாக விபரிக்கும் அரசாங்கம் சரியாக செயற்படாது. யாழ்ப்பாண முஸ்லிம்களின் நீண்ட கால நலனில் இருந்து இப்பிரச்சினையை நோக்குவதும், சகோதர சிறுபான்மை மக்களது போராட்டத்தை காட்டிக் கொடுக்காது முடிவுகளை முன்னெடுப்பதும் கட்டாயத் தேவையாகும்.

# தமிழர்களே!
# வட பகுதி முஸ்லீம்களை வரவேற்கத்தயாராகுங்கள்



ரிவிரச - 1 நடவடிக்கையின் போது போர்காரணமாகவும் போராளிகளது வற்புறுத்தல் காரணமாகவும் புலம் பெயர்ந்த வலிகாமத்து தமிழ் மக்கள் லட்சக கணக்கில் மீண்டும் வலிகாமத்துக்கு திரும்பிச் செல்கின்றனர். ரிவிரச - 2 நடவடிக்கைகளின் போது வடமராட்சி, தென்மராட்சி மக்களில் பெரும்பகுதியினர் எதுவந்தாலும் எதிர்நோக்குவது புலம் பெயர்வதில்லை என்று முடிவெடுத்ததாக தெரிகிறது. புலம் பெயர்தலை நிர்ப்பந்திக்கிற, வலியுறுத்துகிற போராளிகளின் நடவடிக்கைகள் மக்களின் விமர்சனத்திற்கு உள்ளானதாகத் தெரியவருகிறது. தற்போது திரும்பிச் செல்கிற மக்களுக்கு போராளிகள் குந்தகம் விளைவிக்கவில்லை என்கிற சேதிகளும் சில இடங்களில் திரும்பிச் செல்லும் மக்களுக்கு போராளிகள் உதவி வருவதாகவும் உறுதிப்படுத்தப்படாத சேதிகள் தெரிவிக்கின்றன.

வலிகாமம் மக்கள் புலப்பெயர்வை நிர்பந்தித்தது போராளிகள் செய்த இமாலயத் தவறு. எனினும் மேற்படி அவற்றை அவர்கள் தொடரவில்லை என்பது மகிழ்ச்சிதருகிறது. 1990களில் இடம் பெற்ற இத்தகைய இன்னொரு இமாலயத் தவறு வடபகுதி முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதாகும். இச்சம்பவம் தவறானது என பின்னர் போராளிகள் ஒத்துக்கொண்டனர். தமிழ்ப் போராளிகளால் மிகப் படுபாதக மிழைக்கப்பட்ட போதும் தமிழர்கள் மீதும், தமிழ் அரசியல் தலைமைகள் மீதும் விரோதம் பாராட்டாது தாயகம் மீள்கிற கனவுகளோடு அகதிமுகாம்களில் காத்திருக்கிற வடபகுதி முஸ்லிம் மக்களை நாம் கையெடுத்துக் கும்பிட வேண்டும். இத்தகைய மாமனிதர்களது தாயகம் மீளுகிற ஆசையை யாரும் பொருட்படுத்தாமல் இருக்கமுடியாது. ஐந்து மாதம் அகதிவாழ்வில் அல்லலுற்று அணை உடைந்த பெருவெள்ளமாக தாயகம் திரும்பும் வலிகாமத்து தமிழ் மக்கள் ஐந்து வருடங்களாக தாயகம் திரும்புகிற கனவுகளோடு காத்திருக்கும் வடபகுதி முஸ்லிம் மக்களை மறந்து விடக்கூடாது. அவர்கள் உங்களது அங்கம். அவர்களும் உங்களோடு தாயகம் திரும்ப உரித்துள்ளவர்கள். அவர்களையும் உங்களோடு அரவணைத்துச் செல்லவேண்டிய தருணமிது. வலிகாமத்து மக்களது மீள் வரவின் அங்கமாக வடபகுதி முஸ்லிம் மக்களது மீள் வரவும் இணைக்கப்பட வேண்டும். போராளிகளும் அரசும் புனர்வாழ்வு அலுவலர்களும் வட.பகுதி முஸ்லிம் மக்களது மீள் வரவை இலகுவானதாகவும் வெற்றிகரமானதாகவும் ஆக்கிடவேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தற்சமயம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மட்டுமன்றி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், முல்லைத்தீவு, வன்னி பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களது மீள் குடிவரவும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இது தமிழர்களது சகல தரப்பினரதும் வரலாற்றுக் கடமையாகும். நம்மால் கண்ணீர் சிந்தியும், நாம் வாழ வாழ்த்தியும், நமது துயரங்களில் கண்ணீர் சிந்தியும் வாழ்கிற இந்த வடபகுதி முஸ்லிம் பெரும் மக்களுக்கு நாம் நிரம்பவே பிராயச்சித்தமும் கைமாறும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தத் தருணத்தில் நாம் முக்கியமான ஒரு விடயத்தை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இந்த மக்கள் தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியலின் பகடைக் காய்களாக விரும்பவில்லை. இந்த மக்களது விருப்பத்துக்கு மாறாக இவர்களது கண்ணீரில் யாரும் அரசியல் செய்ய அனுமதிக்கப்படக்கூடாது. வடபகுதி முஸ்லிம் உரிமைகள் இயக்கம் போன்ற அரசியல் கட்சிகள் சாராத அகதி அமைப்புகள் இந்த மீள் குடியமர்வை முன்நின்று ஒழுங்கு செய்வதற்கு சகல தமிழ் முஸ்லிம் சிங்கள அமைப்பினரும் போராளிகளும் அரசும் உதவிட வேண்டும்.

ஐந்து வருட கண்ணீர் வாழ்வில் இருந்து மீட்சியை நாடி நிற்கும் இந்த மக்களில் சொந்த வீடுகள் இல்லாதவர்கள் புதிதாக உருவான குடும்பத்தினர் என்பவர்களுக்கு புதிய குடியிருப்புக்கள் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இந்த மக்களது அசையும் அசையா சொத்துக்களும் சுற்றுப் புறச் சூழலும் பொது தரிசு நிலங்களும் மீட்டுத் தரப்படுவதோடு பொம்மைவெளி, காக்கைத்தீவு பகுதிகளில் இந்த மக்களுக்காகன ஒரு பாரிய மாதிரிக் கிராமம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும்வாழ்கிற இலங்கைத் தமிழர்களது அன்பளிப்பாக வழங்கப்படவேண்டும். இத்தகைய ஒரு பணிக்காக தமிழர்களதும் புனர்வாழ்வில் ஆர்வம் காட்டுகிற வெளிநாட்டு உதவி நிறுவனங்களதும் வளங்கள் திரட்டப்படுதல் வேண்டும்.

வடபகுதி முஸ்லிம் மக்களே, இதுவே நீங்கள் தாயகம் திரும்புவதற்கான தருணம். எந்த அரசியல் அமைப்புகளதும் பகடைக்காய்களாகாமல் சுதந்திரமாக சுதந்திரர்களாக சுதந்திரத்துக்காக உங்கள் சொந்த பூமியை நோக்கி மீண்டும் செல்வதற்கு புறப்படுங்கள். நமது தவறுகளை ஏற்கெனவே மன்னித்துவிட்ட இந்த மாமனிதர்களை வரவேற்றிட வடபகுதி மக்கள் ஆயத்தமாக வேண்டிய தருணம் இதுவே...

பெற்றதாயும் பிறந்த<br>
பொன்னாடும் நற்ற வானிலும்<br>
நனிசிறந்தனவே.

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சொந்த மண்ணிலேயே வேற்றுமனிதனாய்.....

எஸ். மனோரஞ்சன்



நான் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் காண்கின்றேன். யாழ் மக்களைக் காண்கின்றேன். அவர்களுடன் உரையாடு கின்றேன். ஆனால், இது அன்றைய யாழ்ப்பாணமா? அன்றிருந்த மக்கள் தானா? இன்று நாம் கதைப்பது அன்று கதைத்தவற்றைத் தானா?

பலாலியிலிருந்து இறங்கி முதல் முதல் நான் காலடி வைத்தது நல்லூர் கோயில் மண்ணிலாகும். எம்முடன் பல அமைச்சர்கள் சமூகம் தந்திருந்தனர். அவர்களுக்காக நல்லூர் கோயிலில் பூசை நடாத்தப்பட்டது.

அங்கிருந்த ஓர் இராணுவ வீரனிடம் நான் எனது முதலாவது கோரிக்கையை விடுத்தேன்.

''நான் எனது வீட்டைப் பார்க்க முடியுமா?'' தற்போது அவ்வீட்டில் வசிக்கும் எனது உறவினர்கள் பற்றி அவருக்குக் கூறினேன். அவ்வீடு நல்லூர் கோவிலிலிருந்து 1.கி.மீ தூரத்தை விடக் குறைவான தூரத்திலேயே அமைந்திருந்தது.

**விடுவிக்கப்பட்டதா? இல்லையா?**

மூன்று இராணுவ வீரர்களுடன் வாகனத்தில் வீட்டைச் சென்று பார்க்க அனுமதி கிடைத்தது. நான் அவர்களுக்கு வீடு அமைந்திருக்கும் இடத்தைப் பற்றி தெளிவுபடுத்தினாலும் அப்பிரதேசத்தை வீரர்களால் இனங்கண்டு கொள்ள முடியவில்லை. முதலில் ''அப்பிரதேசம் இன்னும் விடுவிக்கப்படவில்லை'' என அவ்வீரர்கள் குறிப்பிட்டனர். வலிகாமம் ''விடுவிக்கப்பட்டு'' ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்ட போதிலும், நல்லூரிலிருந்து ஒருகி.மீ. தூரத்திற்கு அண்மையில் இருக்கும் பிரதேசம் விடுவிக்கப்படவில்லை என்பதை எண்ணி ஆச்சரியப்பட்டேன். பின்னர் அப்பிரதேசம் விடுவிக்கப்பட்ட பிரதேசம் தான் என அவர் ஆராய்ந்து குறிப்பிட்டார். வாகனத்தில் செல்லும் போது இராணுவ வீரர்கள் எனது வீட்டைப் பற்றி விசாரித்தனர். நான் அது தொடர்பாக தகவல்களைத் தெரிவித்தபோது அவர்க்ள் அப்பிரதேசத்தில் ஆபத்தான சண்டைகள் எதுவும் நடைபெறவில்லை என்றனர். இதனால், வீடு சேதமடைந்திருக்காது என்றும் கூறினர்.

எனினும், நான் எனது கிராமத்திற்குள் நுழையும் போதே பல வீடுகள் சேதமடைந்திருப்பதைக் கண்ணுற்றேன். இறுதியில் நான் எனது வீட்டைக் கண்டு பிடித்தேன். அங்கு கூரை இருக்கவில்லை. சுவர் வெடித் திருந்தது.

என்னுடன் இருந்த வீரர்கள் நிலத்தை நோக்கினர். எவ்வாறெனினும், நான் வீட்டுக்குள் சென்று, சிறிது நேரம் கழித்து பெருமூச்சுடன் வெளியே வந்தேன். இதன் பின்னர் அயலவர்களிடம் இவ்வீட்டில் இருந்தவர்களைப் பற்றி விசாரித்தேன். அயலில் வேறொரு வீட்டில் தங்கியிருப்பதாக அவர்கள் கூறினர்.

**பிரச்சினையில்லை, ஆயினும்!**

நான் அவர்களைக் காணத் தயாராகிக்கொண்டே வீரர்களிடம் கூறினேன். ''நான் தனியே செல்கிறேன்...'',

'' இல்லை... இல்லை... நாங்களும் வருகிறோம்.'' எந்தப்பிரச்சினையும் இல்லை. நாம் அவ்வீடுகள் அனைத்திற்கும் செல்வோம்.

''அப்படியில்லை, இராணுவம் வந்து போவதை புலிகள் அறிந்தால் அவர்களுக்கு பிரச்சினை ஏற்படும் அல்லவா?''

''இல்லை.. இல்லை... இங்கு புலிகள் வர சந்தர்ப்பம் இல்லை...'' எனக் கூறிக்கொண்டு அவர்கள் என்னைத் தொடர்ந்தனர். எனினும், நான் வீட்டுக்குச் சென்றவுடன் முரண்பட்டதாகக் கதைக்கத் தொடங்கினர்.

''ஐயா வீட்டிற்குள் சென்று கதைக்காமல் வெளியே வந்து கதைக்கச் சொல்லுங்கள்...''

''ஏன் பிரச்சினை இல்லை என்றீர்கள் தானே''

''ஆம்... ஆனாலும்... '' அவர்கள் மீண்டும் கதைக்கவில்லை. வீட்டில் இருந்தவர்கள் என்னைக் கண்டவுடன் அழத் தொடங்கினர்.என் கண்களிலிருந்து விழும் கண்ணீரையும் நிறுத்த முடியவில்லை. நாம் அங்கிருந்த 10 நிமிட காலத்தினுள் செய்த ஒரே வேலை அழுவதுதான்.எதையோ கூற அவர்கள் முற்பட்டபோதிலும், என் பக்கத்தில் நின்ற இராணுவ வீரர்களைக் கண்டவுடன் வாயை மூடிக்கொண்டனர்.எம் பேச்சு 7,8 வசனங்களுக்கு மேற்படவில்லை.

''இப்பொழுது இங்கு நிலைமை எப்படி?'' நான் கேட்டேன்.

''எல்லாம் முடிந்து விட்டது''

''கொழும்புக்கு வர எண்ணமில்லையா?''

''எங்கிருந்தாலும் ஒன்றுதான்''

நான் மீண்டும் சில கேள்விகளைக் கேட்டபோது அவர்கள் இராணுவ வீரனை மட்டும் பார்த்தனர். அவர்கள் எனக்கு ஒரு விடயத்தைக் கூறினர்.

''இப்பொழுது எங்கு பார்த்தாலும் உளவாளிகள்.''

''யாருடைய உளவாளிகள்''

''இரு பக்கத்தையும் சேர்ந்தவர்கள்''

திரும்பிச்செல்லும் போது என்னுடன் இருந்த இராணுவவீரன் இவ்வாறு குறிப்பிட்டான்.

''எனக்கும் துக்கமாக இருந்தது. ஒரு சொல்லாவது பேசவில்லையே கட்டியணைத்து. அழுதது மட்டும் தான். எப்படி இந்த மக்கள் வாழ்கிறார்கள்...?''

நான் திரும்பி நல்லூர்க கோவிலுக்கு வரும்போது அங்கு சிறிய கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அமைச்சர்கள் அக்கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தனர். அதற்கப்பால் மக்கள் கூட்டம் கூடியிருந்தது.

''அங்கிருந்த ஒரு பாடசாலை ஆசிரியரிடம் புதுச்சூழ்நிலை எப்படி இருக்கின்றது என வினவினேன்.

''இதுதான். எமக்கு யாழ்ப்பாணத்தில் மாற்றுவழி இல்லை. எமக்கிருப்பது சந்தர்ப்பம் மட்டுமே. மாற்றுவழி என அவர் குறிப்பிடுவது, இருக்கும் நிலையை விட வித்தியாசமான நிலையையாகும். எனினும், எந்தவிதமான மாற்றமுமின்றி ஒரே நி லை யி ல வேறுபட்ட சந்தர்ப்பங்கள் தான் இருக்கின்றன என குறிப்பிட்டார்.

அதைத் தவிர அரசியல் தீர்வுகள் பற்றியும் அவரிடம் விசாரித்தேன்.

''எவரும் பலாத்காரமாக அரசியல் தீர்வினை எம்மேல் திணிப்பதை நாம் விரும்பவில்லை. எனினும், அத்தீர்வுகள் என்ன என்பது எமக்கு இன்னும் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை'' என அவர் குறிப்பிட்டார்

அத்தோடு இவ் அரசாங்கம் சமாதானம் தொடர்பாக வாக்குகளைப் பெற்று யுத்தம் புரிவது நீதியானதா என அவர் என்னிடம் வினாவினார். அப்படியாயின் இந்த யுத்தம் ஆரம்பிக்க சமாதான உடன்படிக்கையை மீறியது புலிகள் தானே என வினவிய போது அதை அவர் ஏற்றுக்கொண்டார். அத்தோடு எனக்கு இன்னுமொரு வினா எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு சமாதானம் தொடர்பாக அமுக்கம் கொடுத்த பல குழுக்கள் இன்று தெற்கில் தோன்றினாலும், வடக்கில் அவ்வாறான குழுக்கள் தோன்றாமைக்கு காரணம் என்ன என நான் கேட்டேன்.

அதற்கு அவர் ''கடந்த 10 ஆண்டுகளில் யாழ் மக்கள் ஹிட்லர் ஆட்சியின் கீழ் வாழ்ந்துள்ளனர். அவ்வாறான நிலையில் சமாதானச் சக்திகள் எவ்வாறு தோற்றம் பெறமுடியும்'' என வினா எழுப்பினார்.

'ரிவிரச -1 நடவடிக்கையின் போது நீங்கள் ஏன் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றீர்கள்?'' இது எனது அடுத்த கேள்வியாகும்.

''போகும் போது மீண்டும் திரும்புவோம் என்று எங்களுக்கு பெரிய எதிர்பார்ப்பு ஒன்று இருந்தது.எவ்வாறாயினும் புலிகள் எம்மை யாழ்ப்பாணத்தில் இருக்க விடவில்லை.''

''அப்படியாயின் ஏன் ஊர் திரும்பினீர்கள்?''

''சாவகச்சேரியில் நாம் கழித்த நாட்கள் மிகவும் துன்பகரமானவை. ஒரு வீட்டில் 60, 70 பேர் தங்கியிருந்தோம். குளிக்க நீர் வசதி இல்லை. கோப்பை நீரில்முகம் கழுவினோம். இரவு நித்திரை கொண்டது வாசலிலாகும். இரவு மழை பெய்தால் எழும்பி வீட்டு வாசலில் அமர்ந்திருப்போம். மலசலகூட வசதி இல்லை. மிகவும் மோசமான வாழ்க்கை அது.

ரிவிரச - 2 தொடங்கிய போது புலிகள் வந்து எம்மை மீண்டும் போகச் சொன்னார்கள். நாம் போகவில்லை. மீண்டும் யாழ்ப்பாணத்துக்கே வந்து விட்டோம்.''

**என்ன கூறினாலும் கவனம்**

அவர் தனது நீண்ட கதையை கூறிக் கொண்டே சுற்றும் முற்றும்பார்த்தார். இராணுவ வீரர்கள் சமீபத்தில் செல்லும் போது கதையை நிறுத்தி விட்டார். அவர் கதைத்த சில சொற்கள் புலிகளுக்கு எதிரானவை, சில இராணுவத்திற்கு எதிரானவை, சில புலிகளுக்கு சார்பானவை.சில இராணுவத்திற்கு சார்பானவை. அவர்களது சொல் எதுவாயினும் வாய்திறக்கும் போதெல்லாம் வலு கவனமாயிருந்தார். எங்களுக்கு அருகில் அசுத்தமான உடையுடன் இருந்த நடுத்தர வயது மனிதன் மீது எனது கவனம் திரும்பியது. அவர் ஓர் லொறிச்சாரதி, சாவகச்சேரியில் இருந்து சாமான்களை ஏற்றுவதற்காக காங்கேசன்துறையை வந்தடைந்திருந்தார். ஆனால் கடந்த இரு தினங்களுக்கு முன்னால் புலிகள் காங்கேசன்துறை பாதையில் நாச்சிமார்கோவிலடி எனும் உணவு வழங்கும் மத்தியஸ்தானத்தில் குண்டு வைத்ததனால் அப்பாதை மூடப்பட்டு விட்டது. இன்னும் அப்பாதை திறக்கப்படாததால் மூன்று நாட்களாக அவர் பாதை திறக்கும் வரை காத்துக் கொண்டிருக்கின்றார். அவர் மிக மோசமாக புலிகளை விமர்சித்தார்.

''அவர்கள் அழிந்தால் நமக்கு பரவாயில்லை. அவர்கள் எம்மையும் அ ழி த் து க் கொ ண் ட ல் ல வா அழிகிறார்கள்?''

அவர் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லும் போது, யாழ் மக்களையும் அழைத்து செல்கிறார்கள் என்பதையே குறிப்பிட்டார்.

''முன்னர் நமக்கு எது இல்லாவிட்டாலும் வசிக்க இடம் இல்லாமல் போகாது? எனினும் அவர்கள் செய்த வேலையால் வசிப்பிடமும், உணவும், சோறும் கூட இல்லாமல் போய் விட்டது'' என்றார்.

அத்தோடு இராணுவத்தினால் உணவு மானியங்கள் தரும் சில மத்தியநிலையங்கள் புலிகளால் குண்டு வைக்கப்பட்டு அழிக்கப்படுவதால் அவர் கோபத்துக்குள்ளாகியுள்ளார்.

''நல்ல வேளை இராணுவ வீரர்கள் அவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இருக்கின்றனர். இல்லாவிட்டால், இதனால் ஏற்படும் அழிவுகள் கொஞ்சநஞ்மல்ல.

ரிவிரச -2 நடவடிக்கையின் மூலம் சிவில் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் எவை? என நான் வினவினேன்.

அவர் அறிய சாவகச்சேரியில் 12 பேர் இதுவரை இறந்துள்ளனர். அப்பன்னிரெண்டு பேரில் இருவர் வித்தியாசமான முறையில் இறந்துள்ளனர். அவர்கள் இருவரும் இளம் தம்பதியினர். சாவகச்சேரியிலிருந்து கச்சாய் வழியாக உள்ள பாதையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த இத்தம்பதியினர், இராணுவத்தின் வசம் அகப்பட்டுக்கொண்டனர். கணவனை கத்தியால் குத்தி கொன்றது இராணுவம். மனைவி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என அச்சாரதி என்னிடம் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் இராணுவ வீரர்கள் அது தொடர்பாக கவலை தெரிவித்ததோடு சம்பந்தப்பட்ட அவ்வீரர்களை அடையாளம் காண்பிக்கும்படியும் கோரியிருந்தனர். ஆனால், ஒருவரும் அது தொடர்பாக தகவல்களைத் தெரிவிக்கவில்லை. இதற்குப் பிரதான காரணம் இராணுவம் மேல் இருந்த பீதி என்றும் கூறலாம்.

மறுபக்கம் இராணுவத்தினரால் ஏற்படும் அழிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இக்குற்றம் அவர்களுக்குப் பெரிதாக தோன்றாமல் இருக்கலாம்.

இராணுவ வீரர்களில் பெரும்பாலானோர் பொறுமை, ஒழுக்கம் நிறைந்தவர்கள் என்பது சாரதியின் அபிப்பிராயமாகும். இக் குணவியல்புகளை குறைந்தது மூன்று மாதங்களுக்காவது கடைப்பிடிக்கும்படி கூற வேண்டிய தேவை அவருக்கிருந்தது. ஏனெனில், யாழ்ப்பாணத்தில் புலிகள் அக்கால இடைவெளிக்குள் அர்த்தமின்றி போய்விடுவார்கள் என்பதனாலாகும்.

**இந்துக் கல்லூரி சம்பாஷணை**

நல்லூர் கோவிலில் வேலைகளை முடித்துக் கொண்டு அடுத்ததாக நாம் சென்றது யாழ். இந்துக் கல்லூரிக்கு ஆகும்.

அப்பொழுது நேரம் மத்தியானம் 12.00மணி. நாம் அங்கு வரும் வரை காலை 9.30லிருந்து மக்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

அங்கு சிறிய கூட்டம் கூடியது. மங்கள சமரவீர அவர்கள் சிங்களத்தில் பேசியபேச்சுத் தமிழுக்கு மொழிமாற்றப்பட்டது. பேச்சின் இறுதியில் சந்தேகங்கள் இருப்பின் கேளுங்கள் என அமைச்சர் கோரிக்கை விடுத்தார். தமது சந்தேகங்களை தீர்க்கும் முகமாக 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் தமது கேள்விகளைக் கேட்கலானார். குறிப்பாக அரசின் தீர்வு யோசனைகள் தாமதமாகுவது பற்றிய கவலை அவரது பேச்சில் தொனித்தது. அமைச்சரிடமிருந்து பதில் வந்தபோதும், அவ்விளைஞன் திருப்தி அடைந்தான் என்று என்னால் கூறமுடியாது.

அதன்பின் இன்னும் பல இடங்களுக்குச் சென்றோம். இந்து ஆலயத்தில் இருந்து வெளியேறும்போது அங்கு மிக நீண்ட உணவுக்கியூ. அங்கிருந்தவர்களுக்கும் அமைச்சர்கள் பிரசுரங்களை வழங்கினர். அங்குள்ள மக்கள் அதைப் போட்டி போட்டுக் கொண்டு பெற்றுக்கொண்டனர்.

உணவு வழங்கும் இடங்களிலேயே அதிக மக்களைக் காண முடிந்தது.அவ்விடத்தில் 200க்கும் அதிகமான மக்கள் வரிசையில் நின்று உணவு பெறும் வரை காத்துக்கிடந்தனர். யாழ் பிரிமியர் பேக்கரி இன்று இராணுவ வசம்உள்ளது. இராணுவ வீரர்கள் பாண் தயாரித்து மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர். பாணின் விலை 5.50மட்டுமே. ஒருவர் இரண்டு பாண்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். அதற்கருகில் இருந்த கூட்டுறவுச் சங்கக் கடையிலும் வரையறுத்த அளவிலேயே உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுக கொண்டிருந்தன.

அமைச்சர்களை சூழ்ந்துகொண்ட மக்கள் தமக்கு உணவுப் பொருட்களை தடையின்றி வழங்கும்படி கேட்டுக் கொண்டனர்.

அமைச்சர்களும் இரண்டு கிழமைகளுக்குள் உணவு வழங்கும் நடவடிக்கைகளை எடுப்போம் என மக்களுக்கு உறுதி கூறினர். எவ்வாறாயினும் பெரும்பாலானோர் உணவை விட வேறொன்றை இறைஞ்சிக் கேட்டனர். அது சமாதானம். ''சாப்பிட இல்லாவிட்டாலும் தலைக்கு மேல் ஷெல் விழாதது பெரிய காரியம்'' என வரிசையில் நின்ற ஒரு பெண் கூறினார்.

**இரண்டு துப்பாக்கிகளின் நிழலின் கீழ்**

இந்நிலை எதுவரை உறுதியாக விருக்கும் என்ற சந்தேகம் அப்பெண்ணிடம் இருந்தது தெளிவாகத் தெரிகின்றது.

அந்நிலையை இன்னும் கூடுதலாக விளங்கப்படுத்திய ஒரு நடுத்தர வயது அரச உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்தார்.

''எங்களைச் சேர்ந்த ஒருவராக எண்ணி கூறுகிறேன். இப்பொழுது நாம் இருப்பது இரண்டு துப்பாக்கிகளின் கீழ். முன்னர் இருந்தது ஒரு துப்பாக்கியாகும். அதனால் முன்னரை விட இப்பொழுது நாம் கவனமாகக் கதைக்க வேண்டும் தானே...''

இருபக்கத்தாலும் நன்மை தீமை இருப்பினும், இருவரும் தாம் நல்லவர்கள் என்று கூறுவதையே விரும்புகின்றனர் என்பதை இவர் புரிந்து வைத்திருக்கின்றார். இருசாராரினதும் உளவாளிகள் யாழ்ப்பாணத்தில் மும்முரமாக இயங்கிக் கொண்டிருப்பதே பயங்கரமான நிலையாகும்.

அத்தோடு கடந்த காலத்தில் புலிகளுக்கு உதவி செய்தவர்களை இராணுவத்தினரிடம் காட்டிக்கொடுக்கும் சிலர் உள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

ஆயினும் பல பிரதேசங்களில் உணவுப்பற்றாக்குறை அதிகமாகவே உள்ளது. பொறுப்புச் சொல்ல வேண்டிய அமைச்சர்களிடம் இது பற்றி வினவியபோது போதுமான உணவு வகைகள் பலாலியிலும், காங்கேசன்துறையிலும் இறக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதி குறைவாகவே உள்ளதால் விநியோகம் மோசமாக உள்ளது என்றனர்.

இந் நடவடிக்கை தொடர்பாக சிறந்த கட்டமைப்பு உருவாகவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது. சிவில் மக்கள், வங்கி, வைத்தியசாலை போன்றவற்றிலேயே தொழில் புரிந்தனர். பிற இடங்களில் வேலை செய்தவர்கள் இராணுவத்தினர் ஆவர்.

சில காலத்துக்கு முன் 1025 கட்டில்கள் வரை இருந்த யாழ் வைத்தியசாலையில் இன்று இருப்பது 250 கட்டில்களாகும். வைத்தியசாலையில் ஒருபகுதி உடைந்து விழுந்துள்ளது. வைத்தியசாலையில் இருந்த ஒருவர் இவ்வாறு ஆங்கிலத்தில் குறிப்பிட்டார். "Sri Lanka forces are very much matured than the Indian forces" இதனால் இங்கு மக்களின் பாதுகாப்பு ஒருவகையில் சிறந்ததாக இருந்தாலும் அவர்கள் சாவகச்சேரி தம்பதிகளின் முடிவை ஞாபகப்படுத்தினர்.

புலிகள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றுவார்கள் என அவர்கள் நம்பவில்லை எனினும், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த தடையாக இருப்பார்கள் என அவர்கள் நம்புகிறார்கள். சமீபத்தில் உணவு மத்திய நிலையங்களுள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதைக் குறிப்பிடலாம். இருப்பினும் தடைகளை சமாளித்து நிர்வாகத்தை நிலைப்படுத்துவாராயின் அது பெரிய இராணுவ வெற்றியாகும்.

**இராணுவ வீரர்கள் கதைக்கின்றனர்**

பின்னர்அமைச்சர்கள் நாகதீபத்தை வணங்கச் சென்றனர். நான் பலாலி முகாம்களில் தங்கிவிட்டேன். இராணுவ வீரர்கள் என்னுடன் கதைத்தனர். ''எங்களால் செய்ய முடிந்த உச்சத்தை நாம் செய்துவிட்டோம். இப்பொழுது அரசியல்வாதிகள் கையில் தான் அனைத்தும் உள்ளது.'' என்றனர். மேலும் ''அரசியல்வாதிகள் துரிதமாக இப்பிரதேசத்தை புனருத்தாரணம் செய்தல் வேண்டும். சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தாவிடின் நாம் வெற்றி கொண்டு கைப்பற்றிய அனைத்தும் நீரில் சென்றுவிடும்.''

ஒரு பக்கத்தில் யுத்தம் புரியவும் மறுபக்கத்தில் உணவு வழங்கவும் மருந்து வழங்கவும் இவையாவையும் எம்மால் செய்ய முடியுமா? உணவு வழங்கும் நேரம் யாராவது கூட்டத்தினரிடையே இருந்து சுட்டால் என்ன நடக்கும்? இதனாலேயே கூடிய சீக்கிரம் இச்சேவைகளை செய்ய சிவில் நிர்வாகம் தேவைப்படுகின்றது. சாதாரண இராணுவ வீரன் ஒருவன் இவ்வாறு கூறுகின்றபோது உயரதிகாரி பின்வருமாறு கூறுகின்றார்.

''இப்பொழுது பாருங்கள் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் ஏன் இங்கு வந்துள்ளனர்? அவர்களுக்கு எம்மால் நீதி கிடைக்கும் என்றதினாலேயே ஆகும். அரசாங்கம் மிகத்துரிதமாக இதை நிறைவேற்றுதல் வேண்டும்.''

சிறிது நேரம் மௌனமாய் இருந்து விட்டு அவர் இவ்வாறு கூறினார்.

''இப்பொழுது உங்களை நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தை, வீட்டை, உறவினர்களை கண்ணுற்றீர்கள். நாளைக்கும் இதே நிலைமை எனின் உங்கள் மனச்சாட்சி என்ன செய்யும்?

சத்தியமாக என் மனதில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு இருந்த கேள்வியையே அவர் கேட்டுள்ளார். அக்கேள்விக்கு ஓர் பதிலின்றி நான் வீடுதிரும்ப வேண்டிய நிலை. என் சொந்த ஊரிலேயே வேற்று மனிதனாக ஓரிரு மணித்தியாலங்கள் தங்கி திரும்ப வேண்டிய நிலை.

***நன்றி யுக்திய***
***தமிழில்: ரத்னா***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தீர்வுத்திட்டங்கள் திணிக்கப்படுவதை தவிர்ப்பது எப்படி?



மத்தியத்துவம் மூலம் அல்லது வெளி நாடுகளின் தலையீட்டால் பல ஆயுத முரண்பாடுகள் தீர்க்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை சமகால உலக நிகழ்வுகளை அவதானிக்கும்போது அறியமுடியும். அவற்றுள் கம்பூச்சியா, அங்கோலா, பாலஸ்தீனம், பொஸ்னியா என்பன குறிப்பிடத்தக்கன.

1993 இல் ஐ.நா சபையின் தலையீட்டினால் வியட்னாம் சார்பு கம்பூச்சிய அரசாங்கத்திற்கும் கம்பூச்சிய தேசிய விடுதலை முன்னணிக்குமிடையில் சமாதான உடன்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. அந்த உடன்பாட்டிற்குப் பிறகு நடைபெற்ற பொதுத்தேர்தலை அடுத்து கம்யூனிஸ்ட்டு களின் தலைமையிலான தே வி.மு உடன்பாட்டை மீறி மீண்டும் தாக்குதல்களில் ஈடுபட்டது. இதனால் சமாதானத்தை நிலை நாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் ஐ.நா. அமைதிப்படை அங்கு நிலை கொண்டிருக்கின்ற போதும் ஆயுதமோதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி ஜோர்ஜ் எட்வூர்டோவின் கட்டுப்பாட்டிலிருந்த அங்கோலா இராணுவத்திற்கும் (F.A.A) அங்கோலாவின் பூரண விடுதலைக்கான தேசிய யூனியனுக்குமிடையில் (UNITA) UNAVEM என்ற சமாதான உடன்பாடு 1989ல் ஏற்பட்டது.

ஐ.நா சபையின் தலையீட்டால் ஏற்பட்ட மேற்படி உடன்பாட்டின் அடிப்படையில் 1989 ஜனவரிக்கும் 1991 யூனுக்குமிடையில் அங்கோலாவில் நிலை கொண்டிருந்த 50 ஆயிரம் கியூப துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டன.

அவ்வுடன்பாட்டின் இரண்டாம் கட்டமாக யுத்த நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992 செப்டெம்பரில் தேர்தல் முடிவடைந்தவுடன் யுத்தநிறுத்தம் மீறப்பட்டது. தேர்தலில் UNITA வெற்றி பெறாதபடியால் UNITA பல யுத்தநிறுத்த மீறல்களைச் செய்தது. யுத்தத்தை நிறுத்த மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி 1994 நவம்பருக்கும் 1995 மார்ச்சிக்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் அர்த்தமற்ற வகையில் யுத்தம் தொடர்கிறது.

இந்நிலையில் அங்கோலாவின் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டுமாயின் இரண்டு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென ஐ.நா.சபை கேட்டுக்கொண்டுள்ளது. சமாதான உடன்பாட்டில் மூன்றாவது கட்ட மாக தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளை ஐ.நா.சபை செய்துவருகிறது. ஐ.நா.அமைதிப்படைகளும் அங்கு நிலை கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

1993 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேலுக்குமிடையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இதில் தனியே ஐ.நா.சபையின் தலையீடு மட்டுமன்றி அச்சபையினதும் அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, ரஷ்யா, பின்லாந்து போன்ற நாடுகளினதும் கூட்டுத்தலையீடு இருக்கிறது. அதன் முதற் கட்டமாக யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் கட்டமாக பாலஸ்தீனத்தில் தேர்தல் நடைபெற்றது. யசீர் அரபாத்தின் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் தேர்தலில் வெற்றி பெற்றது. தற்போது பாலஸ்தீனர்களை பாலஸ்தீன மண்ணில் மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் புனர்வாழ்வு புனர்நிர்மாண நட வடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்த கட்டத்தில் பாலஸ்தீன சுயாட்சியை மேற்கொள்வது என்பது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

யூகோஸ்லாவியா பல துண்டுகளாக உடைக்கப்பட்ட பிறகு பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் சேர்பியர்களுக்குமிடையில் தொடர்ச்சியாக மிகவும் கொடுமையான யுத்தம் நடைபெற்று வந்தது. எவ்வாறு அமெரிக்காவினாலும் அதன் ஐரோப்பிய கூட்டாளி நாடுகளாலும் யூகோஸ்லாவியா துண்டாடப்பட்டதோ அதேபோன்று பொஸ்னிய ஹேர்ஸ்கோவினாவிற்கும் பொஸ்னிய சேர்பிய குடியரசுக்குமிடையில் பொஸ்னியா துண்டாடப்பட்டது. 1995 ஆம் ஆண்டு அமெரிக்காவினாலும் அதன் ஐரோப்பிய கூட்டாளி நாடுகளாலும் பொஸ்னியாவில் அமைதியை நிலைநாட்ட டேய்ரன் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதன்படி 60 ஆயிரம் நேட்டோ துருப்புகள் அங்கு அனுப்பப் பட்டுள்ளன.

அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய கூட்டாளி நாடுகளும் சேர்ந்தே உத்தேச சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பொன்றை ஆக்கி பொஸ்னியாவிற்குள் திணித்துள்ளன. அந்த அரசியலமைப்பின் கீழ் சமாதான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஐரோப்பிய பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொஸ்னியா - ஹேர்ஸ்கோவின மத்தியவங்கியின் ஆளுநர் உலக வங்கியினாலேயே பொஸ்னிய பிரஜையல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எவ்வித அரசியலமைப்பு பிரமாணங்களும் கடைப்பிடிக்கப்படாமல் அரசியலமைப்பும் வரையப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. 15 நாடுகளை சேர்ந்தவர்களைக் கொண்ட பொலிஸ் படையொன்றும் உருவாக்கப்பட்டு அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டில் ஐ.நா. சபையின் தலையீடன்றி அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கே இருப்பதை அவதானிக்க வேண்டும். இவ்வாறான அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்று எமது நாட்டு இனப்பிரச்சினைத் தீர்விற்கு எவ்வாறான மத்தியஸ்தத்தை வரவேற்பது என்பது திட்டமிடப்படவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினால் மட்டும் ஏற்பட்ட உடன்பாடுகளில் நிலவும் பலவிதமான பலவீனமான அம்சங்களை அவதானிக்க முடியும். இவ்வாறான பலவீனங்களை அங்கோலா, கம்பூச்சியா ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கும் உடன்பாடுகளில் காணமுடியும். அதேவேளை அமெரிக்க,ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டினால் பொஸ்னியாவில் நிலவும் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.



அமெரிக்க,ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டின் பின்னணியிலே பொஸ்னிய வளங்களைக் கொள்ளையடிக்கும் எண்ணமோ திட்டமோ தான் மேலோங்கியிருக்கிறது. பொஸ்னிய எண்ணெய்க்கிணறுகளும், தங்கச்சுரங்கங்களுமே அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பொஸ்னியா மீது கரிசனை கொள்ளக் காரணமாயுள்ளன. அவை அறிமுகம் செய்த அரசியலமைப்பு இதற்குச் சான்றாகும். அத்துடன் அவ்வரசியலமைப்பின் அடிப்படையில் பொஸ்னிய நிர்வாகம் ஐரோப்பிய பிரதிநிதியொருவராலும் உலகவங்கியினாலும் கட்டுப்படுத்தப்படுவதும் அவற்றின் உள்நோக்கத்தைப் பறைசாற்றுகின்றன.

அமெரிக்காவோ, ஐரோப்பிய நாடுகளோ எதிர்பார்க்குமளவிற்கு அவற்றுக்கு தீனி போட்டுக்கட்டுப்படியாகும் அளவிற்கு இலங்கையில் வளங்கள் இல்லை. எனினும் அந்த நாடுகளின் சந்தைப் பொருளாதாரம், அவற்றுக்கு ஏற்ற கலாசார விரிவாக்கம் என்பவற்றை இலங்கையில் மேற்கொள்ள முடியும்.

வெறுமனே ஐ.நா. சபை தலையீடு மட்டும் இலங்கையில் சமாதான திட்டமொன்று நடைமுறைப்படுத்த போதுமானதாகாது. இந்நிலையில் இந்தியாவின் நேரடி மறைமுக நடவடிக்கைகளால் பல குழப்பங்கள் ஏற்படலாம்.

பாலஸ்தீன மாதிரியை கருத்திற்கொண்டு ஐ.நா. சபையினதும் தனிப்பட்ட நாடுகளினதும் (தலையிட விரும்பும் நாடுகள்) கூட்டுத்தலையீட்டை இங்கு வரவழைக்கலாம். பாலஸ்தீனத்தில் நிலவும் பாதக அம்சங்களை எவ்வாறு தவிர்ப்பது என்பதைக் கருத்தில் கொண்டு பலதிட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும். பாலஸ்தீனத்தை விட இலங்கையில் ஐ.நா. சபையினதும் தனிப்பட்ட நாடுகளினதும் தலையீட்டை மிகவும் அழுத்தமுடையதாக ஏற்படுத்த வேண்டும்.

அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தலையீட்டை முற்றாகத் தள்ளி வைக்காமலோ முழு அளவிலான தலையீட்டை ஏற்படுத்தாமலோ அவற்றை பார்வையாளர்கள் என்றரீதியில் தலையிடச் செய்யலாம்.

அவ்வாறான தலையீட்டினால் ஏற்படும் சமாதான உடன்பாட்டிற்கு இணக்கப்படுத்தப்படவேண்டிய, இணக்கப்படுத்தக்கூடிய தரப்புகளை சரியாக இனங்காண வேண்டும். இலங்கை அரசின் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பின்வாங்கியிருக்கும் அதேவேளை போராட்டத்தில் பிரதான சக்தியாக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை தள்ளி வைத்துவிட்டு உடன்பாட்டை ஏற்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளை தள்ளி வைத்துவிட்டு ஏனைய ஆயுத அமைப்புகளுடனோ அல்லது தமிழர் விடுதலை கூட்டணியுடனோ அல்லது இரண்டினிடமோ அல்லது வேறு புதிய அமைப்பொன்றினிடமோ சமாதான உடன்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கக் கூடாது. விடுதலைப் புலிகளுடன் சகல தமிழ் அமைப்புக்களின் பங்களிப்புடனேயே சமாதான உடன்பாடு காணப்பட வேண்டும்.

அதேபோன்று மறுபுறத்தில் கைச்சாத்திடும் இலங்கை அரசு அதனது இராணுவத்தை கட்டுப்படுத்தக்கூடிய பேரினவாதிகளை சமாளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படி சமாதான உடன்பாடு ஏற்படின் அரசாங்கங்கள் மாறினாலும் அவ்வுடன்பாடு வலிதுடையதாக இருக்க வேண்டும்.

கம்பூச்சியாவில் பிரதான போராட்டச்சக்தியான கம்யூனிஸ்ட்டுக்களின் தேசிய முன்னணி உடன்பாட்டிற்கு இணங்காதபடியால் அங்கு தொடரும் அழிவுகளை நாம் பாடமாகக்கொள்ளல் வேண்டும். அதனாலேயே விடுதலைப் புலிகளின் பிரதான பங்களிப்பின் அவசியம் உணரப்படுகின்றது. அதேபோன்று பாலஸ்தீனத்தில் சிறிய சக்தியான ஹமாஸ் அமைப்பு சமாதான உடன்பாட்டிற்கு இணங்காதபடியால் பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான உடன்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள சவால்களைப் பார்க்கின்றபோது எமது நாட்டில் எந்தவொரு சிறிய தமிழ் அமைப்பும் தள்ளிவைக்கப்படலாகாது என்பதுவும் சிந்திக்கப்பட வேண்டும்.

சமாதான உடன்பாடொன்றிற்கு ஆகக்கூடுதலான அமைப்புகளின் இணக்கத்தை பெறுவதிலாவது சிரத்தை காட்டப்பட வேண்டும்.

போராடும் சக்திகள் பலவீனமாக இருக்கும் போது மூன்றாம் தரப்பு தலையீடு அல்லது மத்தியத்துவம் சரிவராது என்றோ தேவையில்லை என்றோ யோசிக்கத் தேவையில்லை. ஏனெனில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை விட பெரிய சக்திவாய்ந்த அமைப்பல்ல அவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த முக்கிய பிரதேசங்களை இஸ்ரேல் தொடர்ந்து முற்றுகையிட்ட வண்ணமே இருந்தது. அதேவேளை போராடும் சக்திகள் பலமாக இருக்கும் போதன்றி பலவீனமா இருக்கும் போதே அழிவுகளும் மிகையாக இருக்கும் அமைதியின்மையும் அதிகரிக்கும்.

இணக்கப்பாடொன்று ஏற்பட்டு விடுமிடத்து சம்பந்தப்பட்ட தரப்பினர் நிதானமாகவும் அர்ப்பணிப்புடனும் நடந்துகொள்ள வேண்டும். கம்பூச்சியாவில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையிலான தேசிய விடுதலை முன்னணி சமாதான உடன்பாட்டிலிருந்து விலகிக்கொண்டதால் அங்கு சமாதானம் நிலை நாட்டப்பட முடியவில்லை. அவ்வியக்கத்தின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகி பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அங்கோலாவில் UNITA தேர்தலில் தோல்வியடைந்தவுடன் சமாதான உடன்பாட்டிலிருந்து விலகிக் கொண்டது. யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறியது. தேர்தல் தோல்வியால் UNITA அரசியல் இருப்பு கேள்விக்குறியாகியுள்ள போதும் நிலைமையைச் சீர்செய்ய சமாதான உடன்பாட்டிற்குமாறாக போயிருக்கத் தேவையில்லை. பாலஸ்தீனத்தில் நடைபெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் இஸ்ரேல் பிரதமர் கொலை செய்யப்பட்டது உட்பட அங்கு ஏற்படும் இடைஞ்சல்களுக்கு மத்தியில் இஸ்ரேல் உடன்பாட்டை தூக்கி எறிந்து விடவில்லை.

அங்கோலாவில் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் தேசிய அரசாங்கத்தை அமைக்க ஐ.நா. சபை முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. பாலஸ்தீனத்தில் பாலஸ்தீனியர்களை மீளக் குடியேற்றம், புனர் நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகள் தொடருகின்றன. இதனை இலங்கை அரசு ஆழமாகப் படிப்பது நன்று.

சமாதான உடன்பாடு ஏற்படுமிடத்து அதனை வலுப்படுத்த அயல் நாட்டுத்தொடர்புகளை சீர்செய்ய வேண்டும். ஈரான், ஈராக் என்பன பாலஸ்தீன இஸ்ரேல் உடன்பாட்டை மனமார ஏற்றுக்கொள்ளவில்லை அங்கீகரிக்கவில்லை. எனினும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் அவ்விருநாடுகளுடனான உறவை சரியாகக் கையாள்வதில் நிதானமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் அவற்றிடமிருந்து உடன்பாட்டிற்கு எதிராக நேரடியான அச்சுறுத்தல்கள் இல்லை. பல விட்டுக் கொடுப்புகளுக்கு மத்தியில் அமெரிக்க பங்களிப்பும் பாலஸ்தீன உடன்பாட்டிற்கு ஆதரவாகப் பெறப்படுகின்றது.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் நல்லெண்ணத்தை சம்பாதிப்பதிலும் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் தமிழ் தரப்பினர் ஆகக்கூடிய முயற்சிகளை செய்ய வேண்டும். அப்போது தான் மூன்றாம் தரப்பு ஏற்படும் சமாதான உடன்பாடு உயிர் வாழும்.

மூன்றாம் தரப்பு அல்லது வெளிநாட்டு தலையீட்டால் சமாதானத்தை நிலைநாட்ட சரியான தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய அரசியல் அமைப்பொன்று அடிப்படையாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுத் திட்டமொன்றை ஏகோபித்த முறையில் தமிழ் தரப்பினர் முன்வைக்க வேண்டும்.

அரச தரப்பில் பேரினவாத நிலைப்பாடு முற்றாக கைவிடப்பட்டு, நாட்டின் ஐக்கியம், சமாதானம் என்பன முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஒரு தெளிவான திட்டமில்லாவிட்டால் தலையிடும் சக்திகளினால் திட்டங்கள் திணிக்கப்படலாம். அந்நிலையில் மோசமாக இருந்தாலும் திணிக்கப்படும். திட்டத்தை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட லாம்.

வரும்

ராம் பிரசாத்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரலாற்றுப் படிப்பினைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறேன் ~ சேகு இஸ்ஸதீன்

*எழமுடியாது அடக்கப்பட்ட தருணங்களில் கூட நம்பிக்கையை இழந்து விட வில்லை. முஸ்லிம்களின் அரசியல் பாதையில் நீண்ட காலமாய் பயணம் செய்திருக்கிறேன். காலமாற்றத்தின் ஊடே முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவத்தை தான் பாரமெடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடுமென" நம்பிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கட்சியின் ஸ்தாபகர் எம்.எச். சேகு இஸ்ஸதீன் உடனான சந்திப்பு.*

**சந்திப்பு:**
**எம். பௌஸர்**

***ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தவர்களுள் நீங்களும் ஒருவர். அப்படி இருந்தும் ஏன் முஸ்லிம் காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டீர்கள்?***

முஸ்லிம் காங்கிரசிலிருந்து எனது நம்பிக்கை பட்டுப் போய் விட்டதினால் என்னை விலக்கும் சூழ்நிலையை நானே உருவாக்கி இருந்தேன். முஸ்லிம் சமூகத்திடம் நயவஞ்சமாக நடந்து கொள்வதற்கும் நம்பிக்கைத்துரோக உறவை வைத்துக்கொள்வதற்கும் நான் உடன்படவில்லை. அதற்காக எதையும் இழக்கவும் நான் தயாராக இருந்தேன். முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை தாங்கும் தகுதியும் பக்தியும் அஷ்ரஃபுக்கு இல்லவே இல்லை என்ற முடிவுக்கு நான் வந்ததும் முஸ்லிம் காங்கிரசிலிருந்து விடுபட விரும்பினேன். கட்சியின் கொள்கையை தனது சொந்த இலாபங்களுக்காக சமரசம் செய்து கொண்ட அஷ்ரஃப் நான் விமர்சித்தேன். கட்சியின் கொள்கைக்கு மாற்றமாக அஷ்ரஃப் நடந்ததை பத்திரிகை அறிக்கையொன்றில் வெளிப்படுத்தினேன். அதற்காய் நான் இடைநிறுத்தம் செய்யப்பட்டேன்.

தனக்கு இல்லாத பரிசுத்தத்தை தனக்கு உள்ளதாகக் காட்டிக்கொள்வதற்காக அல்லாஹ்வின் மீதும் அவனுடைய புனித குர்ஆன் மீதும் அவனுடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் துணிந்து என் விடயத்தில் பொய்ச் சத்தியம் செய்த அஷ்ரஃபை அல்லாஹ்வின் சோதனைக்கே விட்டு விட்டு நான் இருந்து விட்டேன். ''தெய்வம் நின்று கொல்லும்'' என்றார்கள் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

***முஸ்லிம் கட்சியின் ஸ்தாபிதத்திற்கான அடிப்படைத் தேவைகள் என்னவென இனம் காண்கிறீர்கள்?***

"கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமென்பார்கள்" ஆனால் இதுவோ ஒரு சமூகம் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினை. எவ்வளவோ பாரிய பிரச்சினையல்லவா இது? சுய பூசைக்கு முக்கியத்துவம் கொடுத்து பதவிகளுக்காக, கொள்கைகளை சமரசம் செய்து இனவாதத்தை மூலதனமாக்கி, மத உணர்வுகளுக்கு தீனி போட்டு அரசியல் வியாபாரம் செய்பவர்களிடமிருந்து ஒரு சமூகத்தின் தற்காலத்தையும் அதன் சந்ததிகளின் எதிர்காலத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அதனை அறிந்தவர்களிடமே விடப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரசிலிருந்து என்னை விலக்கும் சூழ்நிலையை நான் உருவாக்கியதும் இதற்காகத்தான். பாமரத்தனமான நம்பிக்கையினால் பாரதூரமான மக்களாணை தவறாகக் கொடுக்கப்பட்டுள்ள இந்த நிலையில் திருத்த முடியாத தவறுகள் செய்யப்பட்டு விடக்கூடும் என்ற சமூகப் பிரஞ்ஞையின் தொழிற்பாடுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியின் ஸ்தாபிதத்தின் அடிப்படைக் காரணமாகும். ஒரு காலகட்டத்தின் அரசியல் அதிர்ச்சியினால் சமநிலை கெட்டுப்போயுள்ள முஸ்லிம் சமூகத்தை தெளியவைத்து முறையான அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இணக்கமான அரசியல் கூட்டு வாழ்வை நோக்கி வழிநடாத்திச் செல்வதுதான் அடிப்படைத் தேவையாகும். இதை இப்போது எந்தக் கட்சியும் செய்வில்லை

***முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி கோட்பாட்டை ஆழமாக வலியுறுத்திய நீங்கள் இப்போது முஸ்லிம்களுக்கு மற்றொரு அரசியல் கட்சியை பதிவு செய்திருப்பது மு ன்பா டை ய நடவடிக்கை இல்லையா?***

முஸ்லிம்களுக்கு ஒரு கட்சி அவசியம் என்பதில் எனக்கு இரண்டு கொள்கை கிடையாது!


தனது சொந்த நலத்திற்கும் குடும்ப நலத்திற்கும் அடுத்தபடியாக சமூகநலத்தை வைத்துக் கொண்டிருக்கும் தலைமைத்துவத்தைக் கொண்ட ஒரு கட்சியை முஸ்லிம்களுக்கான ஒரு கட்சியென எப்படி ஏற்றுக்கொள்வது? முஸ்லிம்களுக்கான முஸ்லிம்களால் ஆன - முஸ்லிம்களின் கட்சி யென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை எந்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினராவது துணிந்து கூற முடியுமா?

முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியலில் எம்.பி.ப் பதவியை விலை பேசிய அஷ்ரஃப் - சாணக அமரதுங்க உடன்படிக்கைக்கும் முஸ்லிம்களுக்கும் எவ்வளவு தூரம்? சென்ற நோன்புப் பெருநாளன்றே இஸ்லாத்திற்கு வந்ததாக அஷ்ரஃபினால் சொல்லப்பட்ட "அசித்த பெரேரா'' சாணக அமரதுங்கவின் ஸியோனிச சம்பந்தமுடைய கட்சியின் தலைவர்களில் ஒருவரில்லையா? அவர் முஸ்லிம் காங்கிரசின் எம். பியல்லவா?

பொதுத்தேர்தல் முடிந்ததும் முஸ்லிம் காங்கிரஸை ஒரு தேசியக்கட்சியாக ஆக்கவேண்டுமென்று அஷ்ரஃப் கூறி இருந்தது ஞாபகம் இல்லையா? முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் கட்சியாக இருக்கிறது என்றோ இருக்கத்தான் வேண்டுமென்றோ அஷ்ரஃப் கூட விரும்பவில்லையே - இந்த வகையில் பார்க்கப்போனால் இலங்கையில் முழுக்க முழுக்க முஸ்லிம்களுக்கென்று உள்ள ஒரே ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சிதான். அதனால் முஸ்லிம்களுக்கு தனிக்கட்சி என்ற கோட்பாடு தவறப்படவில்லையல்லவா?

இருந்தாலும் இன்று முஸ்லிம்கட்சி மாற்றுக் கட்சியாகத்தான் வளர்ந்து வருகிறது. வரலாற்றுப் பாடங்களில் நம்பிக்கை வைத்தால் எதிர்காலத்தில் முஸ்லிம் கட்சி முஸ்லிம் சமூகத்தின் முழு அரசியல் பாதுகாவலனாக ஆகிவிடும். பொறுத்திருந்து பார்ப்போம்.

***முஸ்லிம்கள் பற்றி எதுவுமே குறிப்பிடாத இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்தும் - இந்திய அரசு நடாத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவராகவுமிருந்தீர்களே அது குறித்து உங்கள் பதிலென்ன?***



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நாம் எங்குமே ஆதரித்துப் பேசியதில்லை. முஸ்லிம்களைப் பற்றி இந்திய - இலங்கை ஒப்பந்தம் அசட்டை செய்ததனால்தான் நாம் அதை ஆதரிக்கவில்லை. வடகிழக்கு மாகாண சபையில் போட்டியிட வேண்டுமென்பது நான் எடுத்த முடிவுதான். வடக்கு - கிழக்கு மாகாண சபைத்தேர்தல் மேடைகள் எங்களுக்கு தேவைப் பட்டிருந்தன. அத்தேர்தல் மேடைகளை அதற்கு மூன்று மாதங்களுக்கு பின் வந்த பொதுத் தேர்தலுக்காக முஸ்லிம்களை தயார்படுத்துவதற்கான தளமாக நாங்கள் எண்ணி இருந்தோம்.

பொதுத்தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளையிட்டு பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதும், உலகறியச் செய்வதும் எங்கள் நோக்கமாகவிருந்தன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஏற்பட்டிருந்த இடைவெளியை நிரப்புவதற்கு பாராளுமன்றத்தில் எமக்கு பலம் தேவைப்பட்டது. அந்நோக்கத்திற்கு வடகிழக்கு மாகாண சபைத்தேர்தல் மேடைகள் எங்களுக்கு மிகவும் பிரயோசனம் செய்தன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சி தலைவராக நான் இருந்து வந்த ஒரு தற்செயல் நிகழ்ச்சி, வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை முற்றாகத் திட்டமிட்டது நானாக இருந்தாலும் நான் அதில் போட்டியிடவில்லை. வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் நான் ஆற்றிய பங்கை கௌரவிக்கும் முகமாகவும், வடகிழக்கு மாகாண சபையில் சிந்தாந்த ரீதியாக பயிற்றப்பட்ட இயக்க தோழர்களுக்கு நிகராக செயலாற்றவுமே கட்சி என்னை நியமித்தது.

தோழர் பத்மநாபா, முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஆகியோரின் தொடர்பு தமிழ் இயக்கங்களைப் பற்றிய வெறுப்புணர்ச்சியை மீள் பரிசீலிக்க வைத்தது. வடகிழக்கு தமிழ் முஸ்லிம்களின் உறவுக்காக தோழர் பத்மநாபா என்னிடம் பேசியுள்ள விடயங்கள் மிகவும் காத்திரமானவை, அதனால் வடகிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவராக நான் அன்று செல்ல வேண்டி இருந்ததற்காய் பின்னர் வருந்தவில்லை.

***கடந்த பொதுத் தேர்தல் காலங்களின் போது நீங்கள் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து செயற்பட்டது; அஷ்ரஃபின் எதிர்க்கூடாரத்தில் இருக்கும் மனோபாவத்தின் வெளிப்பாடா? அல்லது ஐ.தே.கட்சியினர் முஸ்லிம்களுக்கு தீர்வு தருவார்கள் என நம்பியதலா?***

ஐ.தே.கட்சியுடன் என்னுடைய தொடர்புக்கு முக்கிய காரணம் முஸ்லிம் காங்கிரசின் தவறுகளை மக்களுக்கு அறிவிப்பதற்காக நான் பாதுகாப்புடன் செய்து கொண்ட ஒரு தற்காலிக ஏற்பாடுதான்.

முஸ்லிம்கட்சி அறவே வளர்ந்திராத நிலையில் பல இடங்களுக்கும் சென்று காங்கிரசின் அரசியல் தகிடுதத்தங்களைச் சொல்வதற்கு ஐ.தே.கட்சியுடனான உறவு உதவியது. ஐ.தே.கட்சிக்கு நான் தேவைப்பட்டேன். எனக்கு முஸ்லிம் காங்கிரசை தோலுரித்துக்காட்டுவது தேவைப்பட்டது.

அஷ்ரஃபின் எதிர்க் கூடாரத்தில் இருக்கும் மனோபாவத்தின் வெளிப்பாடு என்று அதைக் கூற முடியாது! ஆயினும் அஷ்ரஃப் எங்கேயாவது ஒட்டிக்கொண்டிருந்தால் அங்கு தூய்மை இருக்காது என்ற அபிப்பிராயமும் என்னிடம் இல்லை என்றும் என்னால் ஒரு பொய்யைக் கூற முடியாது!

இதைவிட ஐ.தே.கட்சியினரும் முஸ்லிம்களுக்கு தீர்வு தருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் நான் இயங்கினேன் என்றும் சொல்லமுடியாது!

***இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வு எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்?***

இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வு தமிழர்களின் சிந்தனை மாற்றத்தில்தான் இருக்கிறது. அன்றைக்கிருந்த தமிழ் - முஸ்லிம் உறவை எண்ணி என் மனது ஆதங்கப் பட்டு சலிப்பதுண்டு.

தவறுகள் நடந்துள்ளன, ஆறமுடியாத காயங்கள் அரித்துக் கொண்டிருக்கின்றன. புதிய புண்களைப் பற்றி மனது பீதிகொண்டு தவிக்கிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் தம் பகை உணர்வுகளைக் கொன்றொழித்து கசப்பனுபவங்களை குழி தோண்டிப் புதைத்து பழைய நிலைக்கு மீள முடியுமாகவிருந்தால் அதனூடாக ஏற்படும் தமிழ் மொழிப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டிலேயே அவர்களுடைய தீர்வு இருக்கிறது.

தமிழ் மொழிப் பிரதேசத்தைத் தமிழ் பேசும் மக்களிடையே பகிர்ந்து கொள்வதனால் தமிழ் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் வந்து விடும் என்றும் கொள்ளவும் முடியாது.

***ஒட்டு மொத்தமாக சிறுபான்மையினர் தொடர்பான விடயங்களில் ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே அதிக வேறுபாடில்லை எனச் சொல்லப்படுவது குறித்து...?***

அப்படித்தான் நானும் நம்புகிறேன். ஒட்டு மொத்தமாகச் சொன்னால்;

***உங்களால் வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி சொல்லக்கூடியது?***

வடமாகாண முஸ்லிம்கள் வடமாகாணத் தமிழர்களோடுதான் இருக்கவேண்டும். அதில்தான் அவர்களுக்கு நன்மையுண்டு!

***அடக்கப்பட்ட சிறுபான்மையினர் என்ற வகையில் தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது தனித்துவங்களை இழக்காது ஒன்றுபட்டு பெரும்பான்மையின ஆதிக்கத்திற்கு எதிராக குரல் எழுப்புவதற்கான சூழலை உருவாக்குவதற்கு தடையாகவுள்ள காரணிகள் எதுவென நீங்கள் இனம் காண்கிறீர்கள்?***

விடுதலைப் புலிகளின் கைகளில் மட்டும் ஆயுதம் இருப்பதுதான் முதலாவதும் முடிவானதுமான காரணமாகும்.

***தெரிவுக் குழுமுன் நேரடியாகத் தோன்றி; முஸ்லிம்களின் பிரச்சினை பற்றி விளக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தும் நீங்கள் போகாகதது தெரிவுக்குழு மீதான உங்கள் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தி நிற்கிறதா?***

அலகுபற்றிக் குறிப்பிடாமல் அதிகாரங்களைப் பற்றி மட்டும் பேச முன்மொழியப்பட்டுள்ள தீர்வு ஒற்றை சக்கரவண்டி போன்றதாகும் என்பது முஸ்லிம் கட்சியின் அபிப்பிராயமாகும். யாருக்கென்றில்லாமல் தொப்பியை சரிக்கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தலையைத் தேடும் போதுதான் பிரச்சினை முழு அளவில் வெளியாகும்.

தலையைத் தட்டி அளவுக்கு கொண்டு வருவதா? தொப்பியைப் பார்த்து அளவை மாற்றுவதா? என்ற கட்டத்திற்கு வரும் போது ''பழைய குருடி கதவைத் திறவடி'' கதைதான். இத்தீர்வுத் திட்டமும் பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரமும் ஒரு வெறும் கண்துடைப்பு. காலம் கடத்தும் ஏற்பாடு.

புலிகளை முற்றாக இலங்கை இராணுவம் அழித்துவிடுமானால் தெரிவுக் குழுவிலுள்ள தமிழ்க் கட்சிகள் தங்களை காப்பாற்றிக் கொள்வதும் கஷ்டமாகப்போய்விடும்.

முஸ்லிம் காங்கிரஸ், மங்கள முனசிங்க தெரிவுக் குழுவில் கடைசியாகச் சொன்ன சுலோகத்தை மீண்டும் சொல்லிப்பிழைக்கும் தீர்வை முன்மொழிந்த அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளே தீர்வை எதிர்க்கும் போது இதில் அதிகம் யோசிக்க என்ன இருக்கிறது?

ஆனால் ஒரு விசயத்தை இங்கு நினைத்துப்பார்க்க வேண்டும். வடகிழக்கு முஸ்லிம்கள் மட்டும் தமிழர்களோடு போராட்டத்தில் குதிப்பார்களாகவிருந்தால் இலங்கையின் வரலாறே திசை திரும்பும்.

***உங்கள் கட்சியின் எதிர்கால வேலைத் திட்டங்கள் என்ன?***

முஸ்லிம்கட்சி வடகிழக்கில் பூரண செல்வாக்குப் பெற வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வடகிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் கட்சியாக வளர வேண்டும். முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி ஜீவனோபாயம் செய்யும் அரசியல் அங்காடிகளை ஒரங்கட்டவேண்டும். வடகிழக்கின் அமைதி - பாதுகாப்பை ஸ்திரப்படுத்த உழைக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் கூட்டுறவு முறையை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும். இந்த நாட்டுக்கு முன் உதாரணமாக விளங்கக்கூடிய வகையில் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து சிறுபான்மையினருக்கு உரிமையளித்து தமிழ் மொழிப் பிரதேசம் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும்.

***இன்றைய அரசியல் சூழல் பற்றி உங்களது அபிப்பிராயம் யாது?***

சந்திரிகா நன்மை செய்ய முயன்றாலும் கெட்ட காலம் விட்டபாடாயில்லை. ரணில் சும்மா இருந்தாலும் அதிர்ஷ்டம் விரட்டாமலில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் நகல் திட்டம் தொடர்பாக வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்தில் மே 22ம் திகதியன்று தமிழர் முற்போக்குக் கழகத்தினர் ஒரு கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தார்கள். அக் கருத்தரங்கில் ஆற்றப்பட்ட உரைகளின் சுக்கக் குறிப்புகள் இவை.**

## "அதேவழிமுறை!"
### -செல்வக்குமாரன்

தத்துவப் பேரளிப்புக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் இடையே முக்கிய வேறுபாடுஉண்டு. தத்துவப் பேரளிப்பில் புவியியல் ரீதியில் ஒரு பிரதேசத்திற்கு குறித்த சில விடயங்களில் அதிகாரங்கள் பேரளிக்கப்பட்டு அப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இது தொடர்பான சட்டங்களை ஆக்குவதற்கும் ஆக்கிய சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தத்துவம் கொண்டிருப்பார்கள். அவ்வாறு நிறைவேற்றுபவர்கள் அங்குள்ள மக்களுக்கும், பொறுப்புக் கூறவேண்டிய கடமையைக் கொண்டிருப்பார்கள்.

அதிகாரம் பரவலாக்கப்படுகையிலே அரச தத்துவங்கள் புவியியல் ரீதியில் மாகாணங்கள் அல்லது பிராந்தியங்களுக்கு எடுத்துச்செல்லப் பட்டாலும் அத் தத்துவங்களைச் செயற் படுத்துபவர்கள் அங்குமக்களால் தெரிவு செய்யப்படுகிற பிரதிநிதிகளுக்கு வகைகூற வேண்டியவர்களாக இருப்பது இல்லை. மாறாக மத்திய பாராளுமன்றத்துக்கே பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பர். இதிலுள்ள முக்கியவேறுபாடு என்னவெனில், சட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படா அதைத்தட்டிக்கேட்க அங்குள்ளவர்கள் தத்துவமற்றவர்களாக இருப்பர். இந்த வேறுபாடு தத்துவபேரளிப்புக்கும் அதிகாரப்பரவலாக்கத்துக்கும் இடையே உண்டு.

தத்துவப் பேரளிப்பினூடாக ஜனநாயகம் ஸ்திரப்படுத்தப்படுகிறது; மக்களின் பங்குபற்றல் ஜனநாயகத்திற்கு இது வழிவகை செய்கிறது. மக்களுக்கு உடனடியாக பொறுப்புச் சொல்லவேண்டிய முறைமைக்கு வழி செய்கிறது. மக்களது தேவைகள், அபிலாஷைகளுக்கு பதிலளிக்கவேண்டிய பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்திற்கு இது வழிவகுக்கிறது. மேலாக சிறுபான்மை இனங்கள் இருக்கிற நாட்டில் அதன் அபிலாஷைகள், பிரதிபலிக்கப்பட, இது வழிவகுக்கும். அதாவது சிறுபான்மைஇனம்தனது தலைவிதியைதானே நிர்ணயிக்கக் கூடிய சந்தர்ப்பம் இதனால் வழங்கப்படுகிறது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் அப்பல்லினத்தன்மை மதிக்கப்பட இது உகந்ததாக இருக்கும். இதற்கு கூட்டாட்சி, அல்லது சமஷ்டி மிகவும் காத்திரமானதாக விளங்குகிறது. இப்பேரளிப்பு ஒற்றையாட்சி முறையின்கீழும் செய்யப்படலாம்.

கடந்த ஓகட்ஸ்ட்குக்கு முன்னரே நாட்டில் எத்தகைய அரசாங்க முறை திகழவேண்டும் என்பது சம்பந்தமான நகல் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டுவெளிப்படுத்தப்பட்டது. அதன்பிறகுநாட்டில் எத்தகையதேர்தல்முறை திகழவேண்டும் என்பது தொடர்பான நகல் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு முன் வைக்கப்பட்டது. அதாவது சிறுபான்மை இனப்பிச்சினையை ஒரு தனியான பிரச்சினையாக அரசாங்கம் கருதியிருப்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இலங்கை தேசியத்தில் சிறுபான்மையினமும் ஒரு அம்சம், நாட்டிற்கான அரசியலமைப்பை தயாரிக்கும் போது அது அரசமுறைமை தொடர்பானதாக இருந்தாலும்சரி, தேர்தல் முறைமை தொடர்பானதாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக அரசாங்கம் சிறுபான்மையினங்களையும் ஒன்றாகக் கருதி தீர்வை முன்வைக்க வேண்டுமென அதற்கு எண்ணத்தோன்ற வில்லை. இது ஒரு புறம்பான பிரச்சினை. இதனைப் புறம்பாக கவனிப்போம் என்ற அரசாங்கத்தின் எண்ணத்தை இது காட்டுகிறது. சிறுபான்மை இனங்கள்தேசியத்தின் ஒருபாகம் தேசத்தை ஆளுவதற்கான அரசியல் யாப்பு முன்வைக்கப்படும்போது சிறுபான்மை இனங்களும் சேர்ந்து அதனை முன் வைக்கவேண்டும் என்ற நோக்கு அரசுக்கு இருக்கவில்லை.

ஒரு சிலர் கூறக்கூடும் இப்பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வு தேவையில்லை. இதனை வேறுவழியில் தீர்க்க நாம் எத்தனித்தோம். தீர்க்கமுடியாமல் போய்விட்டது. பதிலாக மிகுந்தகுளறுபடி ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இப்போது அதனை புறம்பானதொரு பிரச்சினையாக எதிர்கொள்ளுவோம் என்று. சரி, இப்பிரச்சினையை தனியாக, புறம்பாக தீர்ப்போம் என அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் பின்னர் அவர்கள் இதனைக் கையாளவரும் பொழுது இது எல்லாப் பிச்சினைகளுடனும் சேர்ந்த ஒரு பிரச்சினை, எல்லாவற்றுடனும் சேர்ந்து கையாளப்படவேண்டும் என்று கூறப்படுகின்றது.

இந்த அரசாங்கமும் இதே வழிமுறையையே பின்பற்றுகிறது. இதனை தேசியப் பிரச்சினையாகக் கருதி தீர்க்கமுன் வருவதுமில்லை. தனித்த, புறம்பான பிரச்சினையாக கருதி தீர்ப்பதுமில்லை.

## "எதிரானவர்களின் கை ஓங்குகிறது!"
### -ரொகான் எதிரிசிங்க

13வது திருத்தச்சட்டம் பல குறைபாடுகளை உடையதாக இருந்தது. அது ஏற்படுத்தப்பட்ட பொழுது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் உறுதியோ அல்லது அதிகாரப் பகிர்வுக்கான சட்டவரைவுகளையோ அதில் இருக்கவில்லை. பல விடயங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்போதும் ஒரு நிரல் ஏற்படுத்தப்பட்டு அதன்படி அவை மீளவும் மத்திய அரசாங்கத்தின் கீழேயே கொண்டுவரப்பட்டது. உதாரணமாக உள்ளூராட்சி சபைகள் தொடர்பான அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அதன் அமைப்பு நிர்வாகம் கணக்காய்வு என்பவை எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கையிலேயே இருந்ததால் அங்கு உண்மையான அதிகார ஒப்படைப்பு இருக்கவில்லை.

இதேபோல் தேசியப்பாடசாலைகள் மத்திய அரசின்கீழும் இரண்டாம் கட்ட பாடசாலைகள் மாகாண அரசின் கீழும் இருந்தன. ஆனால், மத்திய அரசு விரும்பும் பட்சத்தில் எந்தவொரு பாடசாலையையும் தேசிய பாடசாலையாக்கிவிட்டுதனக்குக்கீழ் கொண்டு வந்துவிடமுடியும். இதேபோல் தான் வைத்திய சாலைகளும் இன்னும் பிறவும் இருந்தன.

அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட மத்திய அரசின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட சாத்தியமில்லாமல் போய்விட்டது.

ஒரு கருத்தாளம் மிக்க அதிகராம் பகிர்வு இருக்க வேண்டுமாயின் அரசியலமைப்பின் மீயுயர் தன்மை பேணப்பட்டிருக்கவேண்டும். அதாவது பாராளுமன்றத்தால் அல்லது மாகாணசபைகளால் உருவாக்கப்படுகிற ஏதாவதொரு சட்டம் அரசியலமைப்பை மீறுகிறதென கருதினால் எந்தவொரு குடிமகனும் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து மீளாய்வு செய்கிற சுதந்திரம் இருக்கவேண்டும். 13வது திருத்தில் உள்ள மிகப்பெரிய குறைபாடு இந்த சட்டமீளாய்வு இல்லாதிருப்பதாகும். உதாரணமாக மாகாண சபைக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து அதிகாரத்தை 1991இல் போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம்ஒன்றைக் கொண்டுவந்து மத்திய அரசுபறித்துக்கொண்டது. இதற்கு எந்த ஆட்சேபனையும் எழுப்ப முடியாமல் போய்விட்டது.


ஜனவரியில் இந்த அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அரசில்திட்ட நகலிலும்கூட நீதித்துறை மீளாய்வு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்நகல்திட்டம்13வது திருத்தச்சட்டத்தை விட முன்னேற்றகரமாக இருப்பினும் இன்னும்பல குறைபாடுகள்காணப்படுகின்றன.

முதலாவதாக இவ்வரசியலமைப்பு முழுமையாக நோக்கப்பட வேண்டும். அதேபோன்று நகல் திட்டமும் முழுமையாக நோக்கப்படவேண்டும். அரசியலமைப்பில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் முழுமையாக நகல் சட்டத்திற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக இந்த அரசியல் நகல் திட்டத்தில் பெரும்பான்மையினவாதம் தலைதூக்கியுள்ளது. உதாரணமாக பௌத்த மகாசங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடம் நீக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக மத்திய அரசாங்கத்தில் பிராந்தியப் பிரதிநிகளுக்கு இடமளிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே அவ்வாறான பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வில் இலங்கை அரசாங்கங்கள் மிகமிகத் தாமதமாகவும் மிக மிகக் குறைவாகவுமே கொடுக்க முன்வந்துள்ளன. இந்நகல் திட்டமும் அவ்வாறே. உதாரணமாக ஜனவரியில் வெளியிட்ட நகல்திட்டத்தில் ஓகஸ்ட் யோசனைகளை விட குறைவாகவே காணப்படுகிறது. இதற்குக்காரணம் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்களின் கை ஓங்கியிருப்பதாகவே கொள்ள முடியும்.


மனோரஞ்சன்


செல்வக்குமாரன்


ராம் மாணிக்கலிங்கம்


பாக்கியசோதி சரவணமுத்து


சுரேஷ் (பிரேமச்சந்திரன்)


ரொகான் எதிரிசிங்க

## "அரசு எம்மை ஏமாற்றிவிட்டது!"
### -சுரேஷ்

அரசாங்கத்தின் இந்நகல் திட்டத்தில் அதிகார அலகு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒற்றையாட்சியைப் பேண உள்ள சரத்துக்களான 2, 76 என்பன நீக்கப்படவில்லை. மாகாண அரசை மத்திய அரசு கலைத்தால் அது தொடர்பாக நீதிமன்றத்தில் கேள்வியெழுப்ப வழிவகை செய்யப்படவில்லை. இது தவிர பிராந்திய நிர்வாகங்களில் ஆணைக்குழுக்கள் மூலம் மத்திய அரசு தலையிடக்கூடிய அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது. சிறுபான்மையினரது நலன்களைப் பாதுகாப்பதற்காக மத்தியில் என்னென்ன மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்பது பற்றி ஒரு வரி கூடக் குறிப்பிடப்படவில்லை. இவ்வாறான பல முக்கிய குறைபாடுகளை இந்நகல்திட்டம் கொண்டுள்ளது.

இது எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய எந்தவொரு அமைப்புடனும் பேச்சுவார்த்தை நடாத்தாமல் தான்தோன்றித்தனமாக இதனைக்கொண்டு வந்துள்ளது. இதை நான் தருகிறேன்; ஏற்றுக்கொள் என்ற மமதைப் போக்குடனேயே இது முன்வைக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இதனை மாற்றியமைப்பதன் மூலம் நடைமுறைக்கு கொண்டு வரமுடியும் என்ற அடிப்படையில் அந்த மாற்றங்கள் பற்றி நாம் தெரிவித்தோம்.

ஆனால், இன்றைய சூழ்நிலைகளைப்பார்க்கும் போது இது தெரிவுக்குழுவில் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையைப் பெற்று சர்வஜன வாக்கெடுப்பில் ஆதரவைப் பெற்று நடைமுறைக்கு வருமென்று எதிர்பார்ப்பது எம்மையே நாம் முட்டாளாக்கிக்கொள்கிற விடயமாகும். பா.தெ. குழுவினூடாக நிச்சயமாக தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யமுடியாது.

இப்பிரச்சினை[illegible] உருவாக்கப்பட்ட தெரிவுக்குழு கோரம் இல்லாததால் கூடவில்லை. 4பேர் இருந்தால் கோரம். பொறுப்பான பா.உறுப்பினர் 4பேர் இல்லாத நிலையில் இக்குழுவில் தீர்வை எப்படிக்கொண்டுவர முடியும்?

இதுதவிர இத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்துடன் பல முறைபேச முயற்சி செய்தோம். ஆனால், அரசு அதில் எந்த வித அக்கறையையும் காட்டவில்லை. அரசின் இன்றுள்ள முக்கியநோக்கமெல்லாம் யாழ் குடாநாட்டைப் பிடித்தாகிவிட்டது. வன்னியையும்சில சமயம் பிடித்துவிடலாம். அதன்மூலம் புலிகளை முற்றாக அழித்துவிடலாம். ஆகவே நாங்கள் கொடுப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்என்ற போக்கே தென்படுகிறது.

இந்த ஜனாதிபதியால் நாட்டில் ஒரு தீர்வைக்கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையில்தான் அதற்காக வேலைகளை செய்தோம். அன்று தென்னிலங்கைச்சிங்கள மக்களிடம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே ஒரே தீர்வு என்று கூறியவர்கள் இன்று வெறும் இராணுவத்தீர்வில் முழுமையான அக்கறையோடு செயற்படுவதைத் தான் காணக்கூடியதாக உள்ளது.

இதுதவிர எந்தவகையான தீர்வு முன் வைக்கப்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்த இந்த நாட்டில் அரசியல் வலுவுள்ள ஒருதலைமைத்துவம் உள்ளதா என்பதும்ஒரு முக்கியமான கேள்வி. நான் நம்பினேன் சந்திரிகாவினால் அதனைச் செய்யமுடியுமென்று. அதுவும்கூட இன்று ஒரு பெரிய கேள்வியாகவே உள்ளது.

ஆகவே நீங்கள் இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்யாதவிடத்து அரசாங்கம்தூக்கிப்போடும் எவற்றையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத்தள்ளப்படுவீர்கள்.

## "அவர்கள் தமது வீட்டுக்கே செல்கிறார்கள்!"
### -பாக்கியசோதி சரவணமுத்து

பேச்சுவார்த்தையின் ஆழத்தையும் புலிகளின் தன்மையையும்புரிந்து கொள்ளாமல் பேச்சில் இறங்கிய அரசு அதில்தோல்வி கண்டதைத் தொடர்ந்து யுத்தத்தில் இறங்கியது. அரசு இந்த யுத்தத்தை ஆரம்பிக்கும் போது இதனை சமாதானத்துக்கான யுத்தம் என்று கூறியது. அரசின் யுத்தம் மூலம் சமாதானம் என்ற உபாயத்தில் யுத்தக் காரணிகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இது சமாதானத்தைச் சீர்குலைக்கிறது. ரிவிரச வெற்றியின்பின்னர் உண்மையில் அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளது. ஏப்ரலில் ஒரு தலைப்பட்சமாக யுத்தம்மீறப்பட்ட போது அரசு முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் இறங்கியது. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வழங்கிய காலக்கெடு முடிந்து விட்டதால் அதனைச் சமாளிப்பதற்காக மேற்கொண்ட முயற்சியே அது.

அதன்பிறகு நகல்திட்டம்சமர்ப்பிக்கப்பட்டது. 95ஓகஸ்டிற்கும்96 ஜனவரிக்கும்இடைப்பட்ட நிகழ்வைப்பார்த்தால் 96 ஜனவரியில் அரசு ரிவிரச வெற்றியின்பின்னர் தான் ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்தது. யாழ்ப்பாணத்தில் வெற்றிக்கொடி நாட்டி தென்னிலங்கையில்பெரும் ஆதரவினைப்பெற்றிருந்த அரசு கூட கூடியளவு அதிகாரப் பரவலை வழங்கத்தயாராக இருக்கவில்லை. பதிலாக அத்திட்டம் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்களின் கோரிக்கைகளை உள்ளடக்கியிருந்தது.

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுமுற்று முழுதான இராணுவத் தீர்வாக இல்லா விட்டாலும் அதற்குத் தான் அரசு முதன்மை இடம் கொடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. ரிவிரச -2 வெற்றியின் பின்னர் இப்போது மக்கள் திரும்பி வந்து விட்டனர். இனிமேல் அரசியல் தீர்வு ஏன் என்ற வாதம் எழுப்பப்படுகிறது. தெரிவுக்குழுவோ இன்னும் சிறிது காலத்தில் தானாகவே செத்துவிடும் போல்படுகிறது. ஒற்றையாட்சி முறையை நீக்குவதற்கு பலத்த எதிர்ப்பு உண்டென்றும் எனவே தெ.குழு தோல்வியடைந்து விடும் என்றும்ஜனாதிபதிக்குத் தெரியும்.

ஆக, இன்று அதிகாரப்பகிர்விற்கான சாதகமான சூழலை எப்படி உருவாக்க முடியும்? சாதகமான சூழலை உருவாக்க வேண்டுமானால், உண்மையான தகவல்களைப்பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும். வடக்கிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தான் இது. தவிர பத்திரிகைத்தணிக்கையும்அமுலில் இருக்கிறது. சென்ற கிழமை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளருக்கு இராணுவம் அதைக் காட்டவிரும்பியதோ அதைமட்டும் காட்டியது. உண்மையில் வடகிழக்கு நிலைமையின் உண்மைத் தன்மை பற்றி தென்னிலங்கை மக்கள் அறியக் கூடியதாக இருக்கவேண்டும்.

யாழ்ப்பாண மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிச் செல்கிறார்கள். இலங்கை இராணுவத்தால் அவர்கள் விடுவிக்கப் பட்டார்கள் என்று அரசு கூறுகிறது. ஆனால், உண்மையிலேயே ஒரு மனிதாபிமானத் தேவைக்காகத் தான், தாம் தமது வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதனால்தான் அந்தமக்கள் சென்றார்கள் என்று நான் கூறுவேன்.

## "யுத்த நிறுத்தம் அவசியமில்லை!"
### -ராம் மாணிக்கலிங்கம்

போர்மீளவும்ஆரம்பிக்கும்தருணங்களில் ஒரு மந்திரம் போல யுத்தநிறுத்தம் யுத்த நி[illegible]ம்என்று ஓதுகிறோம். யுத்தநிறுத்தம் வ[illegible]கிறது. பேச்சுவார்த்தை நடக்கலாம். அ[illegible]து நடக்காதும்விடலாம். ஆனால், இந்த யுத்தநிறுத்தத்தைப்பயன்படுத்தி இருசாராரும் தம்மைப்பலப்படுத்திக்கொள்வர். இறுதியாக முன்பிருந்ததைவிட கொடூரமாக யுத்தம் வெடிக்கும். இதனை கடந்த நான்கு யுத்த நிறுத்த சந்தர்ப்பங்களில் நாங்கள் கண்டுள்ளோம். ஆகவே என்னைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தத்தின்மூலம்சமாதானம்வராது. அதனை நாம் கைவிட வேண்டும். நிரந்தர சமாதானம் வேறு. யுத்தநிறுத்தம்வேறு. நிரந்த சமாதானம் அரசியல் தீர்வின் அடிப்படையில்தான் உருவாகின்றது. இதற்கு அரசியல் தீர்வும் பேச்சுவார்த்தைகளும் அவசியம். இவ்வழிமுறைதான் இஸ்ரேலிலும், எல்சல்வடோரிலும் கடைப் பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதனைநுணுக்கமாக ஆராய்ந்தால் இரண்டு அடிப்படை விதிமுறைகளைக் காணலாம். ஒன்று பாரம்பரிய இரண்டு கட்டப் பேச்சுவார்த்தை. அதாவது முதலில் யுத்தநிறுத்தம்பற்றிப்பேசி அதுஸ்திரநிலையை அடைய, பின் அரசியல் தீர்வைப்பற்றிப்பேசுவோம். அதுவும் ஸ்திர நிலையை அடைய, பின் சுமுகமான ஒரு சூழ்நிலையின்கீழ் நீடூழி வாழ்வோம்.

மற்ற வழிமுறை ஒரு கட்டப்பேச்சுவார்த்தை வழிமுறை: இதன் அடிப்படையான கருத்து அரசியல் தீர்வின் அடிப்படையில் தான் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்பது. அதாவது இப்பிரச்சினை அரசியல் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு உருவாகினதால் அதற்கு ஒரு தீர்வுஇருந்தால் யுத்தத்துக்கான தேவை தானாகவே இல்லாது போகும் என்பதாகும்.

எனினும், யுத்தநிறுத்தக் கோரிக்கையில் உள்ளடக்கியுள்ள மனிதாபிமான உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு யுத்த நிறுத்தம் அவசியமல்ல. இதனை நாம் வேறுவழியில் செயற்படுத்தலாம். யுத்தநிறுத்தமின்றி இருசாராரும் செயற்படுத்தக் கூடிய அடிப்படைச் செயற்பாடுகள் உண்டு. யுத்தநிறுத்தம் தேவையில்லை. அதேபோல் மயிலந்தனை, கொக்கட்டிச்சோலை, குமாரபுரம், போன்ற படுகொலைகளை இராணுவத்தினர் நிறுத்தலாம்; நிறுத்தவேண்டும்.

மறுபுறத்தில் அப்பாவிச் சிங்கள மக்கள் எல்லைப் புறக்கிராமங்களில் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று புலிகளிடம் தமிழ் மக்கள் கோர வேண்டும். இதற்கு யுத்தநிறுத்தம் தேவையில்லை. இதேபோல் கொழும்பு போன்ற இடங்களில் குண்டுவெடிப்புத் தாக்குதல்களை மேற்கொள்வதும் நிறுத்தப்படவேண்டும்.

இத்தகைய தாக்குதல்கள் அரசாங்கமோ சிங்கள மக்களோ தனிநாட்டையோ சமஷ்டியையோ தர நிர்பந்தப்படுத்தியதில்லை. இவ்வாறு யுத்தத்தை படிப்படியாக நிறுத்த முயற்சிகள்மேற்கொள்ளப்படலாம். இதுதான் ஒரு கட்டப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் உபாயமாகும். இதற்கு இருசாராருக்கும் தேவை சமாதானம் மீதானவிருப்பமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## "வெலி ஓயாவுக்குப் போய் பார்க்க வேண்டும்!"
-மனோரஞ்சன்

1958இல் காலிமுகத்திடலில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்களுடைய போராட்டம் யாழ்கச்சேரியுடன் முடங்கிவிட்டது. இதன்பிறகு தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பான எண்ணப்பாடுகள் தென்னிலங்கை நோக்கி வராமல் கடல் கடந்து இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் சென்றது. இதன்பிறகு கடந்த 3,4 தசாப்தங்களாக சிங்கள மக்களுடன் அரசியல் உறவோ கருத்துப்பரிமாறல்களோ நடைபெறவில்லை. இதனால் தமிழ் மக்களுடைய உணர்வுகள் சிங்கள மக்களிடம் கொண்டு செல்லப்படவில்லை. 'சிங்கள மக்களுக்கிடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றங்கள் தமிழ் மக்களிடம் கொண்டு வரப்படவில்லை.

மாறாக தமிழ்மக்களது பிரச்சினை தொடர்பான கருத்துக்களை, சிறுபான்மையினரின் உரிமைகளை மறுத்த அரசியல்வாதிகளும், அரசாங்கங்களும் தமக்கேற்றவகையில் திரித்துக்கொடுத்தனர். சிறுபான்மையினரது கோரிக்கைகள் அனைத்தும் இந்நாட்டில்மட்டும் வாழும் சிங்கள மக்களையும் அவர்களது கலாசாரத்தையும் அழிப்பதற்கும் சிங்கள மொழியை இல்லாமல் செய்வதற்குமான கோரிக்கைகளாகவே காட்டப்பட்டன. தமிழ் மாணவர்களது கோரிக்கைகள் சிங்கள மாணவர்களது கல்வியைபறிக்கும் ஒன்றாக சிங்களப் பத்திரிகைகளில் சித்திரிக்கப்பட்டது. இவ்வாறு அவர்கள் மத்தியில் போடப்பட்ட தமிழ் எதிர்ப்புணர்வு அவர்களை ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கெதிரானவர்களாக மாற்றியுள்ளது.

தமிழ் மக்கள் இந்நாட்டிலே சிறுபான்மையினராக இருக்கலாம். ஆனால், இப்பிராந்தியத்திலும் உலகெங்கும் அவர்களது சமூகப்பரம்பல் மிக விஸ்தீரணமானது.

எனவே இந்த நாட்டிலே தங்களுடைய இனம் அழிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே 22 ஆயிரமாக இருந்த இராணுவம் ஒரு லட்சத்து 20 ஆயிரமாக வளர்க்கப்பட ஆதரவளித்தார்கள்; பங்கேற்றார்கள்.

தமிழ் மக்களுக்கு அரசியலதிகாரத்தை வழங்கினால் அவர்கள் தம்மை அழித்து விடுவார்கள் என்ற மாயையை உண்மையாக்குவது போல தமிழ் மக்களூடாக வளர்க்கப்பட்ட இயக்கம் ஜனநாயக விரோத போக்கில் செயல்பட ஆரம்பித்தது. சிங்கள மக்கள் மத்தியில் பலமிழந்து போயிருந்த இனவாதசக்திகள் இதனைக் காட்டி மக்களைப் பயமுறுத்தினார்கள்.

இந்நாட்டை ஆண்ட இரு கட்சிகளும் இந்தப் பயத்தை பாவித்து அதற்கேற்ற வகையில் தமது அரசியலைச் செய்ததன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்தின. சிங்கள மக்களிடையே உருவான இடதுசாரிக்கட்சிகளும் கூட பாராளுமன்ற அரசியலில் புகுந்தபின் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.


இவ்வாறு வளர்க்கப்பட்ட மிகப்பயங்கரமான சிங்கள இராணுவம் ஒரு கட்டத்திலே இந்நாட்டை ஆண்ட ஒரு ஜனநாயக விரோத அரசால் அதே மக்களுக்கெதிராக திருப்பி விடப்பட்ட போது தான் சிங்கள மக்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இந்த இராணுவம் தங்களைப் பாதுகாக்கின்ற இராணுவமல்ல தங்களுக்கெதிரான அரச இராணுவம் என்று இது அவர்களைச் சிந்திக்கத்தூண்டியது.

இந்நிலையில் தான் முற்போக்காளர்களும் ஒருசில இடதுசாரிக் கட்சிகளும் சிங்கள மக்களிடையே சென்று கடந்த 40 வருடங்களாக இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைப்பேச வாய்ப்புக்கிடைத்தது.

தமிழர்கள் படும் துன்பத்தைப் போல் அவர்களும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். எங்கள் வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் நிற்கும் போது நாங்கள் பயப்படுவது போல அவர்களும் பயப்படுகிறார்கள். வெலிஓயா கிராமத்திலேயே இரவில் ஆண்களைப் பாதுகாப்பு நிலைகளுக்கு அனுப்பி விட்டு சிங்கள இராணுவம் சிங்களப் பெண்களை மானபங்கப்படுத்துகிறார்கள்.

இந்த நிலையில் வெலிஓயாவில் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்படுகிறபோது அவர்கள் சிங்கள மக்கள் என்பதால் நாங்கள் அகமகிழ்கிறோம். அங்கு சென்று பார்ப்பவர்களுக்குத் தான் தெரியும், இராணுவக்கட்டமைப்பின்கீழ் அவர்கள் என்ன பாடுபடுகிறார்கள் என்று.

**-தொகுப்பு: சுப்புக்குட்டி**



யாழ்குடாநாட்டில் வலிகாமம், தென்மராட்சி, மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து அகதிகளாக தப்பியோடிய மக்கள் மீண்டும் அங்கு வசிப்பதற்குத்தயாராகியுள்ளனர். மக்கள் இவ்வாறு தமக்குச் சொந்தமான இடங்களில் வசிக்க ஊர் திரும்புகிற அதேவேளை அரசாங்கத்தின் அமைச்சர்களும், நண்பர்களும் அடிக்கடி விமானத்தில் வடக்குக்கு பயணித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் யாழுக்கு வருவது ''நாமும் போனோம் என்று காட்டிக் கொள்வதற்காகவே'' என வடக்கு சாவக்சேரி பிரதேச முகாமிலிருந்து வந்த சிங்கள படையணி உத்தியோகத்தர் ஒருவர் என்னிடம் குறிப்பிட்டார். சிலவேளைகளில் இக்கதை உண்மையாகவும் இருக்கலாம்.

ஒரு முறை மே 12ம் திகதி "Sunday Times" பத்திரிகையின் முதல் பக்கத்தில் ஜனாதிபதியின் தொடர்பூடக ஆலோசகரும் சினிமா நடிகருமான சனத் குணதிலக நல்லூர் கோயில் உற்சவத்தில் கலந்து கொள்ளும் புகைப்படம் ஒன்று பிரசுரமாகியது. மேற்கூறிய கருத்தைக் கூறிய இராணுவ உத்தியோகத்தர் பெரும்பாலான நேரங்களில் அரசாங்க நபர்களும் அரசாங்க அதிகாரிகளும் யாழுக்கு வரும் போது எம்மைப் பிரச்சினைப்படுத்தி விடுகின்றனர் எனக் கூறினார். ஏனெனில் சாதாரண மக்களது பாதுகாப்பினையும் இராணுவ சுயபாதுகாப்பினையும் பின் தள்ளிவிட்டு அரசாங்க தலைமைத்துவத்திற்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டு விடுகின்றது.

''முன்னர் கூறிய நிலப்பிரதேசங்களுக்கு சாதாரண மக்கள் இலட்சக்கணக்கானோர் கடந்த இரு நாட்களாக வருகை தந்து கொண்டிருக்கின்றனர். அத்தோடு பிரதேசங்களையும் எம்மையும் விடுவித்தமையால் வடக்கு வாழ் மக்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு மரியாதை செலுத்தியதாகவும்'' மே 18ம் திகதி சனிக்கிழமை ''தினமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டது. புதிய யுத்ததளபதி யாழ்சிவில் மக்கள் புலிகளின் நினைவுத் தூபிகளை உடைத்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர் எனத் தெரிவித்தார். இது ''தினமின''வில் இவ்வாறு வெளிவந்தது.

''.....ரிவிரச -2 நடவடிக்கை மிகவும் இலகுவாக நடந்து முடிந்தது. இராணுவப் படைமுன்னேறும் பொழுது புலிகள் தப்பியோடிவிட்டனர். இவ்வொவ்வொரு இடங்களிலும் இருந்த நினைவுத் தூபிகளை உடைத்தும் புலிகளின் படங்களை தாக்கிக்கொண்டும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

''....புலிகளுக்கு எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு இராணுவத்தினை வரவேற்ற காங்கேசன்துறை, வடமராட்சி மக்கள் ''நாம் உங்களோடுதான்'', ''எங்களை விட்டு விட்டுச் செல்லாதீர்கள்'' என கோரியதாக லெப்டினன்ட் தளுவத்தை கூறினார்.

''...சாதாரண பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாத வண்ணம் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. மக்களுக்கோ அல்லது அவர்களது சொத்துக்களுக்கோ எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை. அவர்களுக்கு சிறந்த உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.''

தினமின பத்திரிகையின் செய்தியின்படி அவை அனைத்தும் உண்மையாயிருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறோம். ஆனால் அது அவ்வாறே நடைபெற்றதா என்பதை தெரிந்துகொள்ள முடிவது சுயாதீனமாகவும் சுதந்திர கவும் பத்திரிகையாளர்கள் யாழுக ச் சென்றால் மட்டுமே. எவ்வாறாயினும் இராணுவச் செய்தி வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைப்பது என்னவெனில், கடந்த காலத்தை விட சிறந்த முறையில் வளர்ச்சியுற்றிருக்கும் இராணுவ - மக்கள் ஐக்கியம் சிலசில நிகழ்வுகளினால் பாழடைகின்றது என்பதாகும்.

இராணுவ வீரர் ஒருவர் பிறநாட்களைவிட தமக்கு தமிழ்மக்கள் பால் ஒரு வகை ஈர்ப்பு ஏற்பட்டது'' எனக் கூறுகிறார்,. அவர் மேலும் ''எனக்கு அங்கு இளம் நண்பர்கள் உள்ளனர்'' என பெருமையாகக் கூறுகின்றார். அத்துடன் அவர் ஒரு செய்தியையும் குறிப்பிட்டார்; கடந்த நாட்களில் ஒருநாள் கள்ளுத்தவறணைக்கு கள்ளுக் குடிக்கச் சென்ற மூன்று பொலிஸ் வீரர்களும் இராணுவ வீரர்களும் குடித்த கள் நஞ்சூட்டப்பட்ட



**உண்மை, அங்கு போனாலல்லவா தெரியும்!**

தனால் இறந்துள்ளனர். அவர் கூறியதன்படி கள்ளில் சயனைட் கலக்கப்பட்டுள்ளது. இது புலிகளால் செய்யப்பட்ட காரியம் எனக்கருதப்படுகின்றது. அத்துடன் கள்பரிமாறிய நபர் காணாமல் போயுள்ளதால், அந்நபர் ஓர் புலி உறுப்பினராய் இருக்கவேண்டும் எனவும் கருதப்படுகிறது.

''பாதுகாப்புப்படையினருக்கும் சாதாரண மக்களுக்கும் இடையில் உள்ள அந்நியோன்னியத்தைக் கலைக்க புலிகள் தந்திரத்துடன் செயற்படுகின்றனர்.

யாழ் பல்கலைக்கழகம், பாடசாலைக் கட்டிடங்கள் போன்றவற்றை புனருத்தாரனம் செய்ய மட்டும் அரசாங்கம் 8 கோடி ரூபாயை செலவிட தீர்மானித்துள்ளது.

யாழில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிசுக்கு இப்பொழுது 3,000 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மே 15 தினமின பத்திரிகை தலைப்புச்செய்தி வெளியிட்டது. இம்முறைப்பாடுகளுக்குள் அசாதாரண செயல்கள் பாலியல்வல்லுறவு, பிள்ளைகள் கடத்தப்படுதல், வீடுகள் சேதமாக்கப்படல், மற்றும் வெவ்வேறு முறையிலான பழிவாங்கல்களும் அடங்கும் எனக் கூறப்படுகின்றது. இது தினமின பத்திரிகையில் பெரிய செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் தெற்கிலும் இவ்வாறான செயல்கள் நடைபெறவே செய்கின்றன.

முழு யாழ்குடாநாடும் இலங்கைப் பாதுகாப்புப் படை வசமுள்ளது என 'லங்காதீப' மே 17ல் செய்தி வெளியிட்டதோடு மே 19 'லங்காதீப' 7 வருடங்களுக்குப் பின் யாழில் தேர்தல் ஒன்று நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் அத்தினத்திலேயே யாழ்குடாநாட்டில் மாகாண சபைகள் தேர்தல் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் கடைசியாக மாகாண சபைகள் தேர்தல் நடாத்தப்பட்டது 7 வருடங்களுக்கு முன்னராகும். அதாவது 1988ம் ஆண்டிலாகும்.

வடக்கில் மாகாண சபைகளது உத்தியோககாலம் அவசரகாலச்சட்டத்தின் கீழ் வருடாவருடம் பின்போடப்பட்டு வருகின்றது. இறுதியாக பின்போடப்பட்ட உத்தியோக காலம் முடிவடையும் நாள் 1997 ஜனவரி 3ஆகும்.

வடக்கில் தேர்தல் நடாத்துவதாயின் வாக்களிப்பு மத்திய நிலையம் தயார்படுத்தவும் தேர்தல் டாப்பு பதிவு மேற்கொள்ளவும் வேண்டி வரும். பிற இடங்களில் தேர்தல் நடாத்தப்படுவது போன்றல்லாது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே தேர்தல் தொடர்பான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென தேர்தல் அலுவலகம் லங்காதீபவுக்கு தெளிவுபடுத்தியுள்ளது. சில வேளைகளில் அரசாங்கம் வடக்கு பிரதேச மக்கள் சனத்தொகையை கணிப்பிடுவதும் இதற்காகவே எனலாம்.

எனினும், தமிழ் அரசியல் கட்சிகள் நான்கு வடக்கில் காரியாலயங்களை அமைப்பதற்கும் அங்கு பயணம் செய்யவும் அனுமதிகோரிய போதும் அரசாங்கம் அதை மறுத்துள்ளதாகவும் மே 17 ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டது. இக்கோரிக்கையை விடுத்தது புளொட், ஈபிஆர்எல்எவ், டெலோ, மற்றும் ஈபிடிபி போன்றனவாகும்.

இச்செய்தியோடு பாதுகாப்புப் பிரிவு பேச்சாளர் தெரிவித்த கருத்துக்களும் கலந்திருந்தது. அவரின் கருத்து யாதெனில் கொழும்பிலிருந்து செயற்படும் இக்காட்சிகள் அங்கு செல்வதன் மூலம் தமது அதிகாரத்தை பலப்படுத்தவே பார்க்கின்றன. இவர்களின் வருகையை தமிழ்மக்கள் அதிகம் விரும்பமாட்டார்கள் என்றும் அப்பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கின் குறிப்பிடத்தக்களவு நிலப்பிரதேசங்கள் பாதுகாப்புப்படையினரால் விடுவிக்கப்பட்ட பின்னர் அங்கு ஏற்படக் கூடிய நிர்வாகக் கெடுபிடிகளையே இச்செய்தி சுட்டிக்காட்டியது எனலாம்.

பாதுகாப்புப்படை நிர்வாக அதிகாரத்தை விட்டுக்கொடுக்க தயாராகுமா?

ஆனால், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்து யாதெனில், நிர்வாக ஆட்சிகள், அரச அதிகாரிகளினதும், மக்களால் ஆட்சிக்கு அமர்த்தப்படும் அதிகாரிகளினாலும் நடாத்தப்படவேண்டும் என்பதாகும் இராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகளைத் தவிர பிறநாடுகளில் இச் செயற்பாடே நடைபெறுகின்றது.

மற்றப்பக்கம் கொழும்பில் இருக்கும் தமிழ் கட்சிகள் தமது அதிகாரத்தை நிலைப்படுத்த யாழுக்கு வரும் என்பது உண்மையான விடயமாகும். அதைப்போலவே அரசாங்க அமைச்சர்கள் மற்றும் அரசியல் நண்பர்கள் வருகை தருவது தமது அரசியல் சுயநலங்களை வளர்த்துக் கொள்ளத்தான் என்பது யாவரும் அறிந்த விடயம். அதனால் முழு உலக அரசியலிலும் அனைவரும் அதிகாரத்துக்காகவே போராடுகின்றனர். வேற்றுமை இருப்பது அதிகாரத்தை நிலைப்படுத்த மேற்கொள்ளும் வித்தியாசமான அணுகுமுறைகளிலாகும்.

கடந்த நாட்களில் நடந்த இன்னொரு முக்கியமான நிகழ்வு யாதெனில், பொதுசனத்தொடர்பு அமைச்சின் செயலாளர் எட்மட்ன் ஜயசிங்க, அவர்களுக்கு எதிரான செய்திகள் சில பத்திரிகைகளில் வெளிவந்தமையாகும். ''யுக்திய'' மற்றும் ''ராவய'' போன்ற ''டெப்லொய்ட்'' பத்திரிகைகள் இதைமுக்கியத்துவப்படுத்தி செய்தி வெளியிட்டன. ''யுக்திய'' பத்திரிகையில் (மே-19) திகதி பிரதான தலையங்கமாக இச்செய்தி வெளியாகியது. எட்மண்ட்டை விலக்கு! சிறை வை!!

எட்மண்ட் ஜயசிங்க அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு யாதெனில், அவர் தனது பிறந்த வருடத்தை வேண்டுமென்றே மாற்றியிருக்கிறார் என்பதாகும். அது ''யுக்திய'' பத்திரிகையில் இவ்வாறு வெளியாகியது.

''பொதுசனத் தொடர்புத்துறை அமைச்சின் செயலாளர் எட்மண்ட் ஜயசிங்க அவர்கள் பொய்யான பிறந்த நாட்களை அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் காட்டியுள்ளமை, பாரிய சட்டவிரோத செயலாகும். அத்தோடு தண்டனைக்குரிய குற்றமாகும். குறிப்பாக பொதுசனத் துறைக்கும் நிர்வாகத்திற்கும் நெருங்கிய தொடர்புடைய உயர்பீடத்தில் இருக்கும் ஓர் அதிகாரி செய்திருக்கும் இவ்வாறான குற்றம் தொடர்பாக விசாரிக்க துரிதமான விசாரணைக் குழுவை அமைக்கவேண்டும். அவருக்கு தண்டனையும் வழங்க வேண்டும்'' என அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ராவய பத்திரிகை மே 19ல் வெளியிட்ட செய்தி இவ்வாறு அமைந்திருந்தது. ''... எட்மண்ட் ஜயசிங்க அவர்கள் சிங்கப்பூரில் உயர் ஸ்தானிகராக செயற்பட்டுள்ளார். அதற்காக வெளியிடப்படும் உயர் கடவுச்சீட்டு தொடர்பாக D0002426 பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு பிறந்த தினமாக இருப்பது 19-04-1944 ஆகும்.

பொ.ஐ.மு. ஆட்சியில் அமர்ந்தவுடன் எட்மண்ட் ஜயசிங்க அவர்கள் வெளிநாட்டு அமைச்சில் ஜெனரல் பதவிக்கு அமர்த்தப்பட்டதோடு, அதுவரை இருந்த பழைய கடவுச்சீட்டு செல்லுபடியாகாததால் இன்னுமொரு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பத்திற்கு பிறந்த திகதியாக குறிப்பிட்டு இருந்தது 19-04-1946 என்றாகும்.

அதன் பின் சமூக அபிவிருத்தி தொடர்பான உலக கருத்தரங்கில் கலந்துகொள்ளும் முகமாக டென்மார்க்குக்கு செல்ல வீசா பெற்றுக்கொள்ளும் முகமாக விண்ணப்பத்தில் பிறந்த திகதியாக 19-04-1946ஐப் பயன்படுத்தியுள்ளார். செய்திப்பிரிவின் செயலாளர் ஆனபின் உயர்பதவிக்காக பாராளுமன்றக் குழுவுக்கு விண்ணப்பித்தபோது அவர் 19-04-1944ஐ தனது பிறந்த தினமாக குறிப்பிட்டுள்ளார்.

ஜயசிங்க அவர்கள் பிறந்தது 1944லோ 1946லோ அல்ல 1940ல் ஆகும்.

இவ்வாறு தவறான முறையில் தமது பிறந்ததினத்தை மாற்றியுள்ளார். என்பதே இவர் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

இச்செய்தியை ''ராவய'', ''யுக்திய'' போன்ற ''டெப்லோயிட்'' பத்திரிகைகள் வெளியிட்ட சந்தர்ப்பத்தில் பொதுசனத் துறை அமைச்சின் செயலாளராக அவர் கடமையாற்றிய அதேவேளை அரசாங்க நிர்வாகத்தின்கீழ் இருக்கும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் செயலாளராகவும் எயார் லங்காவின் பணிப்பாளர் குழுவில் அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.

பத்திரிகைகளில் ஜயசிங்கவுக்கு எதிரான செய்திகள் வரத்தொடங்கியதும் அரசாங்கம் அவரை அவரது பதவியிலிருந்து விலக்கிவைத்தது. அதற்குப் பதிலாக அமைச்சின் செயலாளராக புத்தசாசன அமைச்சின் செயலாளர் டபிள்யு.பி.எஸ். ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். அவர் முதலில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்து பின்னர் தமது பதவியை இராஜினாமாச் செய்தவர்.

ஜயசிங்க அவர்களின் பிரச்சினையை ஐ.தே.கட்சி பெரிதுபடுத்த முனையும் சந்தர்ப்பத்தில் பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. குறிப்பாக அரசாங்கத்திற்கு எதிரான பிரிவினரும் இச்சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டு செயலாற்றினர் எனின், அரசாங்கம் பாரிய பிரச்சினைக்கும் முகம் கொடுத்திருக்கும். எனினும், அரசாங்கம் அப்பிரச்சினையை சூட்சுமமாகத் தீர்த்துவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 7

## நீங்கள் எவ்வாறு மோசமடைகின்றீர்கள்?

பெரும் பாலான குடும்பங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான சச்சரவுகள் ஒழுங்காக முன்கூட்டியே எதிர்பார்க்கக்கூடிய விதத்தில் நடந்து வருகின்றன. குழந்தை ஏதாவது ஒரு 'பிழையான' விடயத்தை செய்யும் போதோ சொல்லும் போதோ பெற்றோர்கள் இதற்குப் பதிலாக, அதை அவமதிக்கும் விதத்தில் ஏதாவது செய்கிறார்கள். குழந்தை இன்னும் மோசமான விதத்தில் பதிலளிக்கிறது. பெற்றோர்கள் இதற்கு உயர்ந்த ஸ்தாயியில் மிரட்டவோ, தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனை வழங்கவோ செய்கிறார்கள்.

ஒன்பது வயதான நத்தானியல் ஒரு வெற்றுத் தேனீர்க் கோப்பையுடன் விளையாடிக்கொண்டிருந்தான்.

தாய்: அதை உடைக்கப்போகிறாய்.. நீ எப்போதும் இப்படித்தான் பொருட்களை உடைக்கிறவன்...

நத்தானியல் : இல்லை நான் உடைக்க மாட்டேன்.

(அவன்சொல்லும்போதே கோப்பை கீழே விழுந்து உடைந்து நொருங்கியது.)



ஆங்கிலமூலம்:
டொக்டர் ஹெய்ம் ஜீ ஜினோல்ட்
தமிழில்: அருண்

தாய்: எத்தனை தடவை கத்திறது.. நீ ஒரு முட்டாள்.. வீட்டிலை உள்ள எல்லா சாமான்களையும் இப்படி உடைச்சுத் தள்ளினாய்

நத்தானியல்: நீயும் ஒரு முட்டாள்தானே நீ மட்டும் அப்பாவின் 'ஷேவிங் றேசரை' உடைக்கவில்லையா?

தாய் : நீ சரியான கெட்டவன்... அம்மாவையே முட்டாள் என்று சொல்கிறாயா..

நத்தானியல்: நீதான் கெட்டவள். நீதான் முதலில் என்னை முட்டாள் என்று சொன்னாய்.

தாய்: மூடுவாயை.. இனி ஒரு கதையும் கதைக்கப்படாது. போ உடனே உன்ர றூமுக்கு...

நத்தானியல்: மாட்டேன் ஏலுமெண்டால் என்னை அனுப்புபாப்பம்...

தனது அதிகாரத்திற்கு ஏற்பட்ட இந்த நேரடிச் சவாலினால் தாய்க்கு ஆத்திரம் பொங்கி வர வெறிபிடித்தவள் போல மகனை இழுத்து அவனுக்கு பளார் பளார் என்று அடி போட்டாள். தான் அவளது அடியிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காக தாயைப் பிடித்து தள்ளினான் மகன். அவன் தள்ளியதால் தடுமாறிய தாய் கண்ணாடிக் கதவொன்றில் இடிக்க அதன் கண்ணாடி உடைந்து அவள் கையை வெட்டி விட்டது.

தாயின் கையிலிருந்து இரத்தம் வருவதைக் கண்ட நத்தானியலுக்கு பயமாகப் போய்விட்டது. அவன் வீட்டை விட்டு ஓடிவிட்டான். அன்று இரவாகியும் கூட அவன் வீட்டுக்கு திரும்பவே இல்லை. வீடு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அன்று இரவு அந்த வீட்டில் யாருமே அமைதியாக உறங்கவில்லை.

வெற்றுத் தேனீர்க்கோப்பைகளுடன் விளையாடுவதை தவிர்த்துக்கொள்ள நத்தானியல் கற்றுக்கொண்டானா இல்லையா என்பது இப்போது இரண்டாம்பட்சப் பிரச்சினையாகிவிட்டது. இதை விட அவன் அன்றைய பொழுது தன்னைப்பற்றியும் தாயைப்பற்றியும் கற்றுக்கொண்டவை முக்கியமாகிவிட்டன. கேள்வி என்னவென்றால் இத்தகைய ஒரு சண்டை தேவைதானா? அதைத் தவிர்த்திருக்கமுடியாதா? அல்லது இத்தகைய சந்தர்ப்பங்களை இதைவிட புத்திசாலித்தனமாக கையாண்டிருக்க முடியாதா?

மகன் தேனீர்க்கோப்பைகளை உருட்டி விளையாடுவதைக் கண்டதும் தாய், அதை எடுத்துவிட்டு பதிலுக்கு ஒரு பந்தையோ அல்லது வேறெதையோ அவனுக்கு கொடுத்திருக்கலாம். அல்லது கோப்பை உடைந்ததும், அந்த உடைந்த துண்டுகளை அப்புறப்படுத்துவதில் மகனுக்கு உதவியிருக்கலாம். அப்படிச் செய்யும் போது தேனீர்க் கோப்பைகள் இலகுவில் உடையக்கூடியவை அது சின்னக் கோப்பையாக இருப்பினும் உடைந்தால் எல்லாவிடமும் ஒரே குப்பையாகி விடும் என்பது போன்ற விடயங்களைச் சொல்லியிருக்கலாம். இத்தகைய மெல்லிய தொனியிலான வார்த்தைகள் நத்தானியலை தனது தவறுக்காக வருத்தப்படச் செய்திருக்கும். ஏச்சுக்கள், அடிகள் என்பன இல்லாமலேயே தேனீர்க்கோப்பைகள் விளையாட உகந்தவையல்ல என்பதை அவன் புரிந்து கொண்டிருப்பான்.

சிறிய தவறுகளிலிருந்து குழந்தைகள் பெரிய பெறுமதியான பாடங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். குழந்தைகள் தங்களது பெற்றோர்கள் மூலமாக சந்தோஷமளிக்காத எரிச்சலூட்டுகிற செயல்களுக்கும், கவலைக்கிடமான கடுங்கோபம் கொள்ள வைக்கின்ற விடயங்களுக்குமிடையில் வித்தியாசம் காணப்பழகிக்கொள்ள வேண்டும். இதற்கு பெற்றோர்கள் உதவவேண்டும். சில பெற்றோர்கள் ஒரு முட்டை உடைந்த விடயத்தைக் கூட ஒரு கால் முறிந்து போன விடயத்துக்குரிய அழுத்தத்துடன் எதிர்கொள்வர். ஒரு கண்ணாடி ஜன்னல் உடைந்ததற்கு மனம் உடைந்து போன ஒருவரைப் போல உணர்வுகளை வெளிப்படுத்துவர். ஆனால், சிறிய தவறுகள் இவ்வாறு அணுகப்படக்கூடாது. உதாரணமாக இப்படிச் செய்யலாம்:

''அப்ப திரும்பவும் நீ உனது கையுறையைத் தொலைத்துவிட்டாய்.. இது எனக்கு எரிச்சலூட்டுகிறது. ஏனென்றால், கையுறைகள் சும்மாகிடைப்பதில்லை. அவற்றை வாங்கப் பணம் வேண்டும்.''

இது கவலைப்படுத்துகிற ஒரு விடயம் தான் ஆனால், பெரும் கேட்டை விளைவிக்கக்கூடிய ஒரு விடயம் அல்ல.

ஒரு தொலைந்து போன கையுறை ஆத்திரத்தில் தடுமாறும் நிலைக்கு காரணமாக இருக்கவேண்டியதில்லை. ஒரு கிழிக்கப்பட்ட ஷேட் ஒன்று, 'நீயே செய்து கொள்' என்று சொல்கிற கிரேக்க துன்பியற் கதைக்கொத்த நெருக்கடியைக் கொடுக்குமளவுக்கு முக்கியமான ஒன்றல்ல...

### *வசை அடை மொழிகள்:*

வசை கூறும் அடை மொழிகள், நஞ்சு தோய்க்கப்பட்ட அம்புகள் போன்றவை. அவை எதிரிகளை நோக்கி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியவை; பிள்ளைகளை நோக்கியல்ல. ஒருவன் 'இது ஒரு அசிங்கமான கதிரை' என்று சொல்லும் போது அந்தக் கதிரைக்கு எதுவும் நடந்துவிடுவதில்லை. கதிரை அவமதிக்கப்படப்போவதோ, தர்மசங்கடத்துக்குள்ளாகப் போவதோ கிடையாது. பாவிக்கப்பட்ட அடைமொழி பற்றிய எதுவித சலனமும் இல்லாமல் அது அப்படியே இருக்கும். ஆனால் குழந்தை அசிங்கம் என்றோ, முட்டாள் என்றோ அல்லது குப்பை என்றோ ஒரு அடைமொழியால் அழைக்கப்பட்டால் அந்தக் குழந்தைக்கு என்ன நடக்கிறது? அதன் உடம்பிலும் ஆத்மாவிலும் அது தாக்கங்களை ஏற்படுத்துகிறது. எதிர்ப்புணர்வு, கோபம், வெறுப்பு என்பனவற்றுக்கு அது உள்ளாகிறது. பழிவாங்கும் உணர்வுக்கு அது உந்தப்படுகிறது. இத்தகைய உந்துதல்களால் குற்ற உணர்வுக்கும், இக்குற்ற உணர்வு காரணமாக ஒரு ஏக்கம் கலந்த கவலை உணர்வுக்கும் அது உள்ளாகிறது. இது தவறான நடவடிக்கைகளும் அப்படிப்பட்ட அறிகுறிகளும் தோன்றும் நிலைக்கு இட்டுச்செல்கிறது. சுருக்கமாகச் சொன்னால், குழந்தையையும் அதன் பெற்றோர்களையும் பலத்த நெருக்கடிக்குள்ளாக்கும் பல பிரச்சினைகளுக்கு இது வழிவகுத்து விடுகிறது.

ஒரு குழந்தை 'குப்பை' என்று வசை கூறினால், முதலில் அது 'இல்லை நான் அப்படி இல்லை' என்று மறுத்துரைக்கக்கூடும். ஆனால், பெரும்பாலான நேரங்களில் அது தனது பெற்றோர்களை நம்புவதால் தான் 'குப்பை' யான ஒரு குழந்தைதான் என்று அது தனக்குள்ளேயே நினைக்கத்தொடங்குகிறது. எப்போதாவது அது நடக்கும் போதோ அல்லது விழும் போதோ அது தன்னைத் தானே உரத்து 'நீ ஒரு குப்பை' என்று சொல்லிக்கொள்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய தேவை வருகின்ற சந்தர்ப்பங்களையெல்லாம் தவிர்க்கத் தொடங்குகிறது, தான் குப்பைத்தனமான ஒன்றாக இருப்பதால் தன்னால் வெல்ல முடியாது என்று நம்பத்தொடங்கி விடுகிறது.

ஒரு குழந்தை திரும்பத் திரும்ப பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் முட்டாள் என்று சொல்லப்படும்போது, அது அதனை நம்பத்தொடங்கிவிடுகிறது. தான் உண்மையிலேயே முட்டாள் தான் என்று நினைக்கத் தொடங்குகிறது. இதனால், அது தனது கல்வி ஊக்கங்கள் எல்லாவற்றையும் விட்டு விடுகிறது. போட்டிகளிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமல் விலகிச் செல்வதன் மூலமாக தான் மோசமான ஒரு வசவை எதிர்கொள்ளாமல் தப்பிவிடலாம் என்று உணர்கிறது. எந்த முயற்சியும் எடுக்காமல் இருப்பதே தான் பாதுகாப்பாக இருக்க உகந்தது என்று கருதுகிறது. இதனால், அதன் வாழ்க்கை கோட்பாடு இவ்வாறு உருமாறிப்போய் விடுகிறது''

***எதையாவது செய்வதற்கு
முயலாவிட்டால்
நான் ஒரு போதும் தோற்றுப்
போய்விட மாட்டேன்***

(வரும்)



# கண்ணீரில் பேதமில்லை.

*வெலிஓயாவில்
தன் மகன் இழந்து துயர்தாளா
அழும் ஒரு யாழ்ப்பாணத்து தாயின்
கண்ணீரிலும்
பள்ளியகொடல்ல எல்லையோர
கிராமத்து படுகொலைகளில்
தன்மகன் இழந்த துயருக்காய்
அழும் ஒரு முஸ்லிம்தாயின்
கண்ணீரிலும்
சூரியக்கந்த புதைகுழிகளுக்குள்
புதையுண்ட தன் மகனின்
நினைவுகள் சுமந்து அழும்
ஒரு சிங்கள தாயின்
கண்ணீரிலும் எந்த பேதத்தையும் நான்
காணவில்லை.*

'இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வும் இன்றைய யதார்த்தமும்' என்ற தலைப்பில் இலங்கை மனித உரிமைகளுக்கான அமைப்புக்கூட்டு ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலில் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றிய வண.பட்டபொலநந்தா தேரர் கூறிய மனதைத் தொட்ட வரிகளே மேல் உள்ள வரிகள்.

அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளை மக்கள் முன் எடுத்துச் சென்று மக்களது அபிப்பிராயங்களையும் ஆதரவினையும், பெறும் நோக்கில் செயல்படும் தென்னிலங்கையின் முற்போக்குச் சக்திகளின் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாக இக்கலந்துரையாடல் அமைந்தது. இது குறிப்பாக, கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்களை மையப்படுத்தியதாக அமைந்தது.

எஸ். பாலகிருஷ்ணன் தலைமை வகித்த குறிப்பிட்டளவானவர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் சமாதானவாதிகளான வண.பட்டபொலநந்தா தேரர், லூசியன் ராஜகருண நாயக்க, சுனந்த தேசப்பிரிய, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உரையாற்றினர். வழமையான இவர்கள் இல்லாத சமூகவியலாளர் குமாரி ஜயவர்த்தனவினது பெயரும் உரையாற்றுபவர்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. வந்திருந்தார். இருந்தும் பேசாது இடையிலேயே சென்றுவிட்டார். இழப்புத்தான்.

தமிழ் பிரஜைகளின் கருத்துக்களை அறிந்து ஆயுதப்போராட்டம் அல்லாத ஓர் அரசியல் வழிமுறையினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருக்கும் இக்கூட்டத்தில் முறையற்ற கல்விமுறையால்தான் சிங்களத்தில் பேசும்நிர்ப்பந்தம் எனத் தொடங்கி லூசன் ராஜகரணநாயக்க சமாதானத்திற்கான மக்கள் அழுத்தத்தின் தேவைபற்றி பேசினார். அரசியல் வாதிகளே அனைத்தையும் தீர்மானிக்கிறார்கள். (குறிப்பு: இத்தீர்வு யோசனைகளும் அரசியல்வாதிகளாலேயே தீர்மானிக்கப்பட்டது) இத்தீர்வு யோசனைகள் வெகுஜன வாக்கெடுப்புக்கு உட்பட வேண்டிய ஒரு நெருக்கத்தை அனைவரும் எடுக்கவேண்டும். இது பற்றி தெரியாத மக்களும், தெரிந்தால் அவர்கள் ஏற்பார்களா? இவர்கள் ஏற்பார்களா? புலிகள் ஏற்பார்களா? என்று கேள்வி கேட்கிற மக்களும் இருக்கிறார்கள். இவைபற்றி தெளிவை ஏற்படுத்த எம் போன்ற வெகுஜனவாதிகளே செயற்படவேண்டும். எந்த அரசியல் தீர்வுகளுமே 100% முழுமையடைந்ததில்லை என்றெல்லாம் கூறிய அவர் அண்மையில் யாழ்ப்பாண விஜயத்தின் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

அங்குள்ள மக்களோடு சுதந்திரமாகப் பேசமுடிந்ததாகவும், அவர்களில் சிலர் 10 ஆண்டுகளுக்கு மேலாய் ஹிட்லரின் ஆட்சியின் கீழ் இருந்ததாகவும் இனிப்பயமில்லையென்று கூறியதாகவும் கூறிய அவர் 98 ஆயிரம் நூல் உங்களோடு எரிக்கப்பட்ட யாழ். நூலகமும் 5 லட்சத்துக்குமதிகமாய் புலிகளால் எரிக்கப்பட்ட பாடநூல்களும் எல்லாம் இழப்புத்தான் என்பதாகவும் இது சமாதானத்திற்கான தருணம் எனவும் உரையாற்றினார்.

வரலாற்றில் சேர் பொன். இராமநாதனின் சிங்கள அரசியல்வாதிகள் உடனான தொடர்பையும் ஒத்துழைப்பையும் நினைவுகூர்ந்து பேசிய தேரர் (இன்னொரு சிறுபான்மையினம் எவ்வளவு பாதிக்கப்பட்டதென்பதும் இவரது வரலாற்று துரோகங்களும் வேறுபலரால் பதியப்பட்டது என்பது வேறு விடயம்.) இருபக்கத் தீவிரவாதிகளுக்கு மத்தியில் (இவர்கண்ட அரசியல் தீவிரவாதிகள் சிறில் மத்தியூவும், அமிர்தலிங்கமும்) சமாதான முன்னெடுப்புக்களின் தேவைபற்றிய பிரச்சாரமாக அவரது உரை அமைந்தது.

''13 வருடங்களுக்கும் மேலான யுத்தத்தின் கொடுமைகளுக்கும் யாரும், எதற்கும் திராணியற்று 83 ஜூலை கலவரங்களில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காய் ஒரு சிங்களவனும், 40 ஆயிரத்துக்கும் மேலான முஸ்லிம்கள் புலிகளால் விரட்டப்பட்டபோது எதிர்த்துக்குரல் கொடுக்க இயலாத ஒரு தமிழனுமாய் எம் இருப்பு கடந்தது. இனி சமாதானத்தை நாம் தீர்வுகளூடாக வெல்வோம்'' என்று பேசினார் யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய.

அடுத்து நீண்டதொரு உரையையாற்றினார் வாசுதேவ நாணயக்கார; தமிழர்களுக்காய் பொதுவாக சிறுபான்மை இன உரிமைகளுக்காய் நீண்ட காலமாய் குரல் எழுப்பும் ஓர் அரசியல் வாதியான அவர் சமாதானம் என்பது பின்னடைவுகளுக்கான பாதை அல்ல அது நீதியை அடைந்து கொள்வதற்கான வழி நீதி கிடைக்கப்பெறுவதற்கான சந்தர்ப்பங்களை இந்த தீர்வுகள் அடிப்படையில் சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து பெற்றுக்கொள்ளத் துணிவோம் என்ற அடிப்டையில் பல விடயங்களை தொட்டுக்காட்டிப்பேசினார்.

கேள்விநேரத்தில் சமாதானம் ஜனநாயகம் சுதந்திரம் என்றெல்லாம் பேசுகின்ற நீங்கள், ஒரு பயந்த மனிதனாய் தேசிய அடையாள அட்டை, வேலை அலுவலக அட்டை, பொலிஸ் ரிப்போர்ட் என்றெல்லாம் காட்டித்தான் வாழ வேண்டியிருக்கிற நிலையை மாற்ற முயற்சிக்கலாமே. யாழ்ப்பாணத்திற்கு போக மக்கள் விரும்புகிறார்கள். ஹிட்லரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் என்றீர்கள் மக்கள் அங்கு சுதந்திரமாய் போய்வருவதற்காக ஆனையிறவு பாதையை திறக்கும் முயற்சியை நீங்கள் முயற்சிக்கலாமே என ஒருவயதானவர் ஆதங்கத்தோடு அல்ல ஆசையாக வினா எழுப்பினார். எனினும் அதற்கான பதிலில் தெளிவு இருக்கவில்லை. இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு இன்றைய யதார்த்தம் என்ற மூன்றும் வேவ்வெறானவையாக இருக்கின்றனவா என்ற சந்தேகம் எழுவதும் இன்னும் தவிர்க்க முடியதநே.

# யார் யார் வாய் தேடினும் மெய்ப்பொருள் காண்பது அரிது!

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் (யாழ்) விடுத்த அறிக்கை.

(இறுதிப்பகுதி)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 27பேர் ஒப்பமிட்டு 21.02.96 வீரகேசரியில் வெளியான அறிக்கைக்குப் பதிலளிக்கு முகமாக எழுதப்பட்ட இவ்வறிக்கையை வீரகேசரியோ வேறெந்தத்தமிழ்ப்பத்திரிகையோ பிரசுரிக்கவில்லை என்பதால் சரிநிகரில் பிரசுரிக்கக் கோரி மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) அனுப்பியிருந்தார்கள். அவ்வறிக்கையை முழுமையாகப் பிரசுரிக்க வேண்டியிருந்ததால் அதன் இரு பகுதிகளை கடந்த இரு இதழ்களில் சரிநிகர் பிரசுரித்தது. அதன் இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

**(ஆ-ர்).**

அடுத்ததாக இவ்விரிவுரையாளர்கள் வெளியிடப்பட்ட அறிக்கையில் காணப்படும் சில அபத்தமான விடயங்களுக்கு விளக்கம் கொடுப்பது அவசியமற்றது. எனினும், அவர்களுக்குத் தெரியாமலேயே சில உண்மைகளும் அவர்கள் எழுத்தின் மூலம் வெளிப்படுகின்றன. உதாரணமாக 30.10.95.இல் மக்கள் வலிகாமத்தையும் யாழ்ப்பாணத்தையும் விட்டு வெளியேற வேண்டுமென புலிகளின் அறிவிப்பு வெளியாகியது. ''புலிகள் கூறிவிட்டார்கள், இனி இங்கிருப்பது ஆபத்து'' என மக்கள் கருதியதாலேயே அநேகர் தமது வீடுகள், சொத்துக்களை விட்டு வெளியேறினர் என இவ்வறிக்கை கூறுகிறது. இதன் அர்த்தம் உண்மையில் என்னவென யாழ்ப்பாணத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ளூரத் தெரியும். புலிகளின் சொல்லை மீறி நின்றால், தமக்கு அதிகம் ஆபத்து யாரால் ஏற்படும் என்பதையும் தமிழ் மக்களின் உள்ளுணர்வுகள் சரியாக சுட்டிக்காட்டியிருக்கும்.

மேலும், மக்கள் வெளியேற்றப்படாமல் இருந்திருந்தால், 20,000க்கு மேல் உயிர்கள் பலியாகியிருக்கலாம் என முன்வைக்கும் வாதம் சரியானதா? இவ்வாறு மக்களை பெருந்தொகையாக வெளியேற்றுவது பற்றி சிறு குறிப்பை கூறுவதாயின், 1990ல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன ஒரு கருத்தை வெளியிட்டார். மடு ஆலயப்பகுதியிலிருந்து 40,000அகதிகளை வெளியேற்றி விட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளுவதாக கூறியபோது, அது மனித நாகரீகத்துக்கு ஒவ்வாத மிருக்கத்தனமான செயல் எனப் பல மனித உரிமை ஸ்தாபனங்களும், எமது கல்விமான்களும் கூட வன்மையாகக் கண்டித்தனர். ஆனால், இன்று லட்சக்கணக்கான மக்கள் கலைக்கப்பட்டதை நியாயப்படுத்த முயல்கின்றனர். புலிகளைப் பொறுத்த அளவில் இது ஒரு தற்காலிகமான வெளியேற்றமல்ல. இது யார் நலனிற்காக? மக்களை அவ்வாறு தமது மண்ணிலிருந்து வேரறுப்பதின் பாரதூரமான விளைவுகள் எப்படியானவை என்பதை இவ்விரிவுரையாளர்கள் அறியாமலில்லை. ஆனால், இவர்களின் எழுத்துக்கள் உண்மைகளை பார்க்க மறுத்துவிட்டன. இங்கு ஒரு சிறு விடயத்தைச் சுட்டிக்காட்டுவதாயின் இவ்வறிக்கையில் கையொப்பமிட்ட சிரேஷ்ட பேராசிரியரும் பல்கலைக்கழக அதிகாரியுமானவர். அன்றைய தினம் காலை 10 மணியளவில் கூட பல்கலைக்கழகத்தை விட்டு தாம் வெளியேறுவதில்லை என சக விரிவுரையாளர்களுக்கு உறுதி கொடுத்தவர். பின்னர் அன்றே மாலை 4மணிக்கு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே போகும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டார். இதனை இவ்வறிக்கையில் கையொப்பமிட்ட அனைவருமே அறிவர். பி.பி.சி. குறிப்பினைக் கேட்டு ஆத்திரமும் சோகமும் உற்ற இவர்கள் சரியாக ஐந்து வருடங்களுக்கு முன் 30.10.90இல் முஸ்லிம் மக்கள் இதேபோன்று வெளியேற்றப்பட்ட போது ஏன் சோகமும் ஆத்திரமும் அடையவில்லை? சின்னஞ்சிறார்களை மீண்டும் வேள்வித்தீயில் தள்ளும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது ஆத்திரமும் சோகமும் கொள்ள இவர்களால் ஏன் முடியவில்லை? கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் சாதாரண சிங்கள மக்கள் அநியாயமாக கொலை செய்யப்படுகின்றபோது இவர்களுக்கு இவ்வுணர்வு ஏற்படவில்லையா? இவ்கையான நிலைப்பாடு, இவர்கள் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையின் பின்னணியை தெளிவாக எமக்குப் புரியவைக்கின்றது. எமது சமூகத்தில் போதைப் பொருள் பாவனை போன்ற துர்ப்பழக்கங்கள் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஏன், பல்கலைக்கழகத்தில் 'பகிடிவதையும்' கூட நிறுத்தப்பட்டுவிட்டது என சொல்லாமல் விட்டார்களே அது போதும். சிறுவர்கள் 'சயனைட்' அருந்தி உயிரைப் போக்குவது இவ்வாறான அற்ப காரியங்களுக்காகவா? இத்தாலியில் மா·பியா இயக்கங்களிற் கூட போதைப் பொருள் கடத்துபவர்கள் அதனை பாவிக்கக்கூடாது என்னும் கடும் சட்டத்திட்டம் கடைபிடிக்கப்படுகின்றது. ஹிட்லரின் காலத்தின் ஜேர்மனியில் புகையிரதங்கள் நேரத்துக்கு ஓடியமையும் நிர்வாகம் சீராக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், சமூகப் பெறுமானங்கள் இவற்றைமட்டும் வைத்து கணிக்கப்படுவதில்லை என்பது சகல சமூகவியலாளர்களுக்கும் தெரிந்த விடயமாகும்.

1988ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மாகாண சபை தேர்தல்களை முன்னிட்டு ''மாயைகளை களைந்தெறிவோம்'' எனும் தலைப்பில் 50 விரிவுரையாளர்கள் கையொப்பமிட்டு வெளியிட்ட ஓர் அறிக்கையைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் வேண்டும். வீரகேசரியில் பிரசுரமான அறிக்கையில் கையொப்பமிட்ட பலர் அதிலும் கையொப்பமிட்டிருந்தனர். அன்றைய அறிக்கை, இந்திய அரசின் தேர்தல் முஸ்தீபுகளை கேள்விக்குட்படுத்தி பின்வரும் கருத்துக்களையும் கூறியிருந்தது:

''இன்றைய யதார்த்தம் என்ன? தனிநபர்களோ அல்லது சமூக அமைப்புக்களோ இன்று தொடர்ச்சியாக நடைபெறும் பல மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தங்களின் குரலை உயர்த்த முடியாத நிலையிலேயே உள்ளனர். இந்திய அமைதிப்படை மற்றும் பல்வேறு ஆயுதம் தாங்கிய குழுக்களின் புண்ணியத்தால் மக்கள் எதிர்காலம் குறித்து எந்த விதமான நிச்சயமும் இல்லாமல், பயங்கரத்தால் மௌனிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்...''

''....இலங்கை - இந்திய அரசுகளுடனான எமது உறவுகளை மட்டுமல்ல, எம்மையே நாம் பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டும். நம் சமூகத்துக்குள்ளேயே பயங்கரத்துக்கு நாம் வந்தனை செய்து நிற்பது, எமது சந்தர்ப்பவாதம், பெருவாரியான உட்கொலைகளின் போது நாம் கொள்கைகளை இழந்து நின்றது போன்ற எமது செயற்பாடுகளும் தான். ஆயுதங்களை வைத்து வெளிச்சக்திகள் எம்மை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை இலகுவாக்கியுள்ளது. எம் சமூகத்துக்குள்ளேயே ஜனநாயக விரோதப் போக்குகளை ஆட்சேபிக்காது ஏற்றுக்கொண்டதன்பின் ஜனநாயகத்துக்காக கூக்குரல் இடுவது அர்த்தமற்றது. அரசியல் சக்திகளுக்கு எதிராக விமர்சனக்குரல் எழுப்பிய பல தனிநபர்களும் இளைஞர்களும் பழிவாங்கப்பட்டனர். விரட்டப்பட்டனர் அல்லது எம் கண்முன்னாலேயே கொலை செய்யப்பட்டனர்....''

இத்தகையதொரு ஈடுபாடு இன்மைதான் மற்றவர்களின் பிள்ளைகள் கொல்லப்படும் போது, அக்கொலையுடன் நாம் சமரசம் செய்து கொண்டு விட்டு, பின்னர் அதே புற்றுநோய் வளர்ந்து எமது சொந்தக் குழந்தையையே அச்சுறுத்தியபோது பீதியோடு அநாதரவாக பார்த்துக்கொண்டு நிற்கும் நிலைக்கு எம்மைக் கொண்டுவந்துள்ளது. கடந்த காலங்களில் நாம் காட்டிய அக்கறையின்மைக்கான விலையே இப்போது செலுத்திக் கொண்டிருக்கிறோம்.....''

மேற்கூறியவை மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஓரளவு ஆரோக்கியமான சூழலில் ஆரம்பித்து இயங்கும் காலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இருந்தன. அன்று துப்பாக்முனையில் ஒருவரும் இதில் கையெழுத்திடவில்லை. இவ்வாறு எழுதுவது போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகவும் ஒருவரும் கருதவில்லை. ஆனால், இவ்வாறான சுதந்திரமாக விடயங்களைப் பார்க்கும் போக்கை தடுக்கும் நடவடிக்கையாகவே கலாநிதி ராஜனி திராணகமவின் படுகொலை நடைபெற்றது. மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் வெளிப்படையான செயற்பாட்டிற்கான தடையும் இவ்வகையானதே. ஆனாலும் அன்று நாம் வரித்துக்கொண்ட இலட்சிங்களை விட்டு இன்னும் தடம்புரளவில்லை ஆனால், எமக்கெதிரான அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில் அநேகமானோர் தமது மனச்சாட்சியை விற்றுவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். அது மட்டுமன்றி, தமது குறுகிய நலத்துக்கும் குடும்பங்களின் தற்காலிக பாதுகாப்புக்கும் முழுத் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலத்தையே பணயம் வைத்துள்ளதுடன் மாயைகளுக்குள் மீண்டும் அமிழ்ந்து போய் விட்டனர்.

இறுதியாக இவ்விமர்சனத்துக்குட்படுத்தப்பட்ட எமது அறிக்கையானது, யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த சாதாரண பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை மட்டும் கொண்டதல்ல. எமது பணிக்கு இன்றும் உயிராபத்தான நிலைமைகளையும் மீறி பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படும் சக்திகளாலும் தொகுக்கப்பட்டது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.



ஓவியம் : வீர சந்தானம்

## உள்ளதும் ஒரு நிலாப்போல மரம்போல

உம்மோய், என்ன அழகு குருவி!
யாரோ,
வெற்றிலை சப்பித் துப்பிய சாயம்
வர்லில்.

இந்த ஊரில் நிற்கின்ற ஆலமரம்போல
உள்ளதும் ஒரு குருவி இது!
இந்த ஊருக்கு வந்து வானத்தில் பால் வார்த்து
வாழைப் பாத்திக்கும் ஒழுகுகின்ற
அவள் முகம்போன்ற நிலவைப்போல்
உள்ளதும் ஒன்று. மெய்தான்-
எங்களூர்
ஓடாவி மாமா முதிரை மரம் கடைந்து
வடித்த சிறு உருவம்!

ஓடாவி மாமா..... ஓடாவி மாமா....
காற்றில் கத்துகிறேன் , கேட்கும் உனக்கு !
உன் கையை
மண்ணும் தின்னாது பார் !
நீ செய்த கதிரைகளே செழிப்பு !
தயிரை
வெட்டி வார்த்ததைப்போல் வனப்பு!
குருவி செய்தால் பிறகென்ன , உயிர் கூடிப் பறக்காதா,
கருங்காலி மரமெடுத்தா கண் வைத்தாய்,
புதுமை!

ஓடாவி மாமா..... ஓடாவி மாமா....
என்னைப் போன்றதொரு உருவம் செய்வாயா!
நான் பறக்க அதற்கு சிறகும் சில பொருத்தி

இப்போது எனக்கு
பறக்க முடிவதில்லை.
குதியைச் சிலர் வெட்டி
விலங்கினிலே போட்டுள்ளார்.
உம்மோய், என்ன அழகு நீ செய்த குருவி!
அப்படியாய் என்னை
மரத்தினிலே கடை மாமா!
நான் பறந்து வந்து முதல் வேலை என நினைத்து
உன் தோள்களிலே நிற்பேன்!
பின்னர்தான் அவளின்,
கண்முன்னால் சிறகடிப்பேன்.

ஓடாவி மாமா.. ஓடாவி மாமா..

வாலில் துப்பியதைப் போல் சாயம்
மழை வந்தால் கலங்காதா!

-13.05.1996

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




“குவார்னிக்கா” என்ற பிக்காசோவின் ஓவியம் உலக கட்புல மொழியில் எதிர்ப்பு மொழியாக பெரிதாகப் பேசப்படுகின்றதொன்று. போரினால் சின்னாபின்னமாகி சிதைந்த ஸ்பானிய நகரின் அவலத்தை சித்திரிப்பதன் மூலம் போரின் கொடுமைகளுக்கெதிரான மனிதத்தின் குரல் அப்படைப்பில் எழுப்பப்படுகிறது. இவ்வேளையில் தீவினைகளுக்கெதிராய் புரியப்படும் யுத்தத்தைச் சித்திரிக்கும் படைப்புக்களான மாமல்லபுரத்து மகிடாசுரமர்த்தனியையும், “எல்லோரா” சிற்பங்களையும் மறந்து விட முடியாது. பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்திய பாரம்பரியத்தில் இந்த எதிர்ப்பு மொழி கலைத்துவமாய்ப் பேசப்பட்டுள்ளது.

சமகால இந்திய ஓவிய மொழியிலும் சமூக அநீதிகளுக்கும், பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராக மனிதாபிமானம் வேண்டி பல குரல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒலித்து வருகின்றன. இன்றைய தமிழக ஓவிய மரபு தொன்மையான வரலாறும், வளமான பல்வகைத்தன்மையும் கொண்டது. இம்மொழி மரபினுள் எதிர்ப்போவியம் என்ற இன்னொரு வகையை பேசியவருள் வீரசந்தானமும் ஒருவர். இவருடைய “நாற்காலி வரிசையில்” இருந்து “ஈழப்படுகொலை” வரை, பின்னர் பெண்களுக்கெதிரான கொடுமைகளையும், சமூக அநீதிகளையும் சாடுகின்ற படைப்புக்கள் என்று எல்லாப் படைப்புக்களிலும் இவர் பாதிக்கப்பட்டோரின் வெளிப்பாடாய் அநீதிகளுக்கும், கொடுமைகளுக்கும் எதிரான மனிதத்தின் அடித்தளத்திலிருந்தான குரலை ஒலிக்க முயல்கிறார். இவற்றின் கலைப்பெறுமானங்கள் பற்றிய கேள்விகளும் விமர்சனங்களும் இருந்தாலும் கூட இந்த எதிர்ப்பு மொழி எமது பாரம்பரிய கிராமிய கலைவடிவங்களின் சாரமான கோடுகளினால் கறுப்பு, வெள்ளை நிறங்களில் பெரும்பாலும் பதிவு செய்யப்படுகிறது.

1947இல் பிறந்த சந்தானம் கும்பகோணம் ஓவியக்கல்லூரியிலும், பின்னர் சென்னை ஓவியக்கல்லூரியிலும் ஓவியத்துறையில் பயிற்சி பெற்றவர். தற்போது இந்திய மத்திய அரசின் நெசவாளர் பணி மையத்தில் உதவி இயக்குனராக பணியாற்றி வருகிறார். இத்தொழில் கூட தனது உள்ளார்ந்த வெளிப்படுத்தலுக்கு உதவுவதாய்க் குறிப்பிடுகிறார். பல கண்காட்சிகளிலும் ஓவிய முகாம்களிலும் பங்குபற்றிய அனுபவமுடையவர். இலக்கிய உலகுடனும் இடையறாத தொடர்புடைய சந்தானம் சிறுபத்திரிகைகளிலும் புத்தக, முகப்பு அட்டைகளிலும் தனது விளக்கப்படங்களினூடு எமக்கு அறிமுகமானவர். இவரது கோட்டுப்படங்களை மட்டும் கொண்டு “முகில்களின் மீது நெருப்பு” என்ற நூல் வெளியானது. இது ஓவியம் இதுவரை நம்மவரிடையில் எட்டாத சில தளங்களை எட்ட வழிவகுத்தது. பாலுமகேந்திராவின் “சந்தியாராகம்” என்ற திரைப்படம் மூலமும் அறிமுகமான வீரசந்தானத்துடனான செவ்வி இது.

# இன்னும் எங்கள் கோடுகளுக்கு நிகரான கவிதைகள் தமிழில் வரவில்லை

## - ஓவியர் வீர சந்தானம்



***நீங்கள் படைப்பதன் நோக்கம் என்ன?***

இந்தச் சமூகத்தில் இந்த மக்களில் ஒருவன் நான் என்பதை மறந்து விடாமல் இந்த மக்களுடனேயே இருந்துகொண்டு இந்த சூழலிலுள்ளதை எனக்காகவும் மக்களுக்காகவும் படைக்கிறேன். நான் பார்த்தவற்றில் உள்வாங்கியவற்றில் எது என்னை அவஸ்தைப்படுத்துகிறதோ அதை சிந்தித்து என்வழியில் வெளிப்படுத்துகிறேன். என்னைப் பொறுத்தவரையில் படைப்பாளி மக்களுடனும் அவர்களது பிரச்சினைகளுடனும் இணைந்திருக்கவேண்டியவன். அந்த வகையில் இந்த மக்களுக்கும் சமூகத்துக்கும் தொடர்பில்லாதவன் துரத்தியடிக்கப்பட வேண்டியவன்.

நான் எனது தூரிகையைத் தொடும்போது சாதாரண பார்வையாளன் பற்றியே எண்ணுகிறேன். எனது படைப்புக்கள் சாதாரண மனிதனைச் சென்றடைவதையே குறிக்கோளாய்க் கொண்டுள்ளேன். அது அவ்வாறு சென்றடையும் வரை தொடர்ந்து போராடுவேன். எனது ஓவியங்களின் நோக்கம் பிரச்சாரமல்ல நான் எனது கலைப்படைப்பின் ஒவ்வொரு பகுதியையும் ஓர் கலைப்படைப்பாயே விட்டு விட ஆசைப்படுகிறேன். எனது சமூக கடமைப்பாடு காரணமாக இவை கலைப்படைப்புக்களாக கணிப்பிடப்படாமல் போகுமானால் அது பற்றி கவலைப்படப் போவதில்லை. ஓவியத்தில் எனது குறிக்கோள் என்பது எனது அந்தரங்கத்தைப் பெரியளவில் சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளலே.

***உங்கள் இளமைக்கால ஓவிய ஆர்வம் பற்றிக் குறிப்பிட முடியுமா?***

நான் பிறந்து வளர்ந்தது விவசாயக் குடும்பத்தில், தஞ்சையில் ஒப்பிலியப்பன் கோயில் என்ற இடத்தில் பெரிய விஷ்ணு தலமும் சிவன் கோயிலுமுண்டு. கோயிலில் அடிக்கடி சித்திரம் வரைவார்கள். தேர் பழுதுபார்ப்பார்கள். தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருப்பேன். நாள் ஆக, ஆக மெதுவாக முன்னேறிப் போய் பக்கத்தில் நின்று கொண்டேன். ஆரம்பத்தில் என்னை யாரும் கவனிக்கவில்லை. வேடிக்கை பார்ப்பதே அன்று எனக்கு வேலையாக இருந்தது. கொஞ்ச நாட்களில் அந்த சித்திரக்காரருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் தங்களின் ஓர் ஆளாக என்னையும் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். அதனால், வர்ணம் பூச, வெள்ளையடிக்க எல்லாம் முடிந்தது. இதைவிட ஓய்வு நேரங்களில் கோயிலிலுள்ள சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்த்து அப்படியே வரைய முயல்வேன். இரவில் சித்திரக் காரர்கள் இதைத் திருத்திக்கொடுப்பார்கள்.

எழுதவும் வரையவும் கற்றுக்கொண்டபின் எனது கவனம் சினிமா பக்கம் சென்றது. கண்ணில் படும் சினிமா விளம்பரங்களைப் பிரதிபண்ணிக் கற்றுக்கொண்டேன். பின் ஓவியாசிரியராகலாம் என்ற எண்ணத்துடன் கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் சேர்ந்தேன்.

***ஓவியக்கல்லூரியில் வரை முறையான ஓவியக்கற்கை என்பது எந்தளவிற்கு ஓர் ஓவியனின் உருவாக்கத்தில் பங்கெடுக்கிறது? உங்களின் கல்லூரி அனுபவம் பற்றிக் குறிப்பிட முடியுமா?***

ஓவியக்கல்லூரியே எனது பலத்தை எனக்குக் காட்டியது. எனக்குள் இருந்த ஆர்வத்தைப் பாதுகாத்து என்னிடமுள்ள திறமையை வெளிப்படுத்த எல்லாவித உந்துதலையும், பாதுகாப்பையும் வழங்கியது. ஓர் நவீன பார்வையைத் தந்தது. இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திராவிடின் நான் வேறு திசைக்கு அடித்துச் செல்லப் பட்டிருப்பேன். வழிகாட்டல் என்ற வகையில் அதன் முக்கியத்துவம் குறிப்பிடப்பட வேண்டியது.

எனது கல்லூரிக்காலத்தில் அன்றைய முதல்வர்களான கிருஷ்ணராவ், தனபால் மற்றும் ஆசிரியர் அல்போன்சோ ஆகியவர்களின் உதவியையும் ஊக்கத்தையும் மறக்க முடியாது. எனது கல்லூரிக்கால படைப்புக்களில் எனது இளமைக்கால் ஒப்பிலியப்பன் கோயிலின் பதிப்பு இருந்தது.

***உங்களின் ஆரம்ப படைப்புக்கள் பற்றி குறிப்பிட முடியுமா?***

சந்தோஷ் போன்ற ஓவியர்களின் படைப்புக்கள் கோயில்களிலுள்ள தாந்திரிக் குறியீடுகள் என்பவற்றால் பாதிப்புற்று தாந்திரிக் ஓவியங்கள் செய்தேன். தாந்திரிக் என்பவற்றின் கருத்துப் புரியாமலேயே என்னுள் ஓர் சிந்தனையை வைத்துக்கொண்டு ஓவியத்தைப் படைத்தேன். அதன் சதுர வடிவத் தன்மையும் அதிலிருந்த வண்ணங்களின் கட்டுப்பாடும் சமச்சீர் தன்மையும் எனது சிந்தனையை தடை செய்வதாய் பின்னாளில் உணர்ந்தேன். இதன் பின் தடைகள் என்ற கருப் பொருளில் ஓவியங்கள் செய்தேன். இவற்றில் நிலை பெறாத விடயங்களை வெளிப்படுத்த முயன்றேன்.

***உங்களுக்கு ஓர் முகத்தைத்தந்த “நாற்காலியை” மையமாகக் கொண்ட படைப்புக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

நாற்காலி அதிகாரத்தின் சின்னம். தமிழக அரசு பங்களா ஒன்றில் ஓர் ஓவியமுகாம் நடந்து கொண்டிருந்தது. தேர்தல் பிரசாரத்திற்காக அங்கு வரும் அமைச்சரும் பரிவாரங்களும் தங்க அதை திடீர் என காலி செய்யுமாறு நிர்ப்பந்தித்தார்கள். இவ்வாறு ஓவியர்கள் மீது அதிகார வர்க்கம் மேற்கொண்ட அணுகுமுறை என்னைச் சீற்றம் கொள்ளச் செய்தது. அதுவே என்னை நாற்காலியை மையமாகக்கொண்டு படைக்கத் தூண்டியது.

நாற்காலியை உயிராகவும் மனித வடிவின் அடையாளமாகவும் நான் நினைத்தேன். நாற்காலியுடன் நான் உரையாடத் தொடங்கியதன் விளைவே இன்றைய எனது படைப்புக்கள்.

இது பொருளைப் பார்ப்பதற்கும் சிந்திப்பதற்கும் வழிவகுத்தது. இது ஓர் முக்கிய தூண்டலாயும் திருப்ப முனையாகவும் அமைந்தது. நாற்காலியின் வேறுபட்ட நிலைகளினூடு கருத்துக்களையும் உணர்வுகளையும் பரிமாற முயன்றேன். இது தனிப்பட்ட மன உளைச்சலின் வெளிப்பாடு எனலாம்.

இதைத் தொடர்ந்து துணிகள், திரைச் சேலைகள் போன்றவற்றை மையமாக கொண்டு படைத்தேன்.

***1984இல் இலங்கைத் தமிழர் படுகொலையையும் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு படைத்துள்ளீர்கள். இதற்குக் காரணம் என்ன? இதில் எந்தளவிற்கு வெற்றி பெற்றீர்கள்?***

அப்போது நான் கேரளாவில் இருந்தேன். அந்த வனப்பில் மூழ்கி இருந்த போது ஈழத்தில் அப்பாவித்தமிழர்களின் படுகொலை பற்றிய செய்திகள் வரத்தொடங்கின. அவற்றைத் தேடித்தேடிப் படித்தேன். பின் அதன் உந்துதலால் படைத்தேன் இதைப் புரிந்து கொள்ள எனது இளமைக்காலத் துன்பங்களும் நான் சந்தித்த அநீதிகளும் உதவின. இவற்றுக்கு எனது ஆழ்ந்த தமிழ்ப்பற்றும் காரணம் எனலாம்.

பின் இவற்றைக்கொண்டு சென்னை லலித கலா அகடமியிலும் பிற இடங்களிலும் சாம் அடைக்கலசாமி என்ற ஓவியருடன் இணைந்து “ஈழத்தமிழர் படுகொலை” என்ற தலைப்பில் கண்காட்சி வைத்தேன். இது இந்திய இலங்கைப் படைப்பாளிகளிடம் இருந்தும் பார்வையாளரிடம் இருந்தும் அமோக வரவேற்பைப் பெற்றது. இக் கண்காட்சியில் மக்கள் பெரியளவில் பங்கேற்றனர்.

***இதற்கு பிந்திய படைப்புக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

இவை அடிப்படையில் ஒன்றுதான். பின் இயற்கைக்கு எதிராக மனிதன் செய்யும் கொடுமைகள், இன்றைய சமூகத்தில் பெண்கள் பற்றிய பார்வை, போபால் விஷவாயுக் கசிவு, பகல்பூர் சிறைப்படுகொலை, மனித உரிமைகள் என்று எனது படைப்புகள் தொடர்கின்றன.

***அடிப்படையில் உங்கள் படைப்புக்கள் “எதிர்ப்போவியங்கள்” அந்த வகையில் இந்தியாவில் எதிர்ப்போவியத்தின் நிலைபற்றிச் சொல்ல முடியுமா?***

அவ்வப்போது குறிப்பிடும்படியான படைப்புகள் வந்துள்ளன. மனுபாரக், பகல்பூர், சிறைப்படுகொலை பற்றிச் செய்த படைப்புக்கள் குறிப்பிடத் தக்கவை. இதே போல் விவான் சுந்தரத்தின் படைப்புக்களையும் குறிப்பிடலாம்.

***நீங்கள் உங்கள் படைத்தல் செயற்பாட்டில் திருப்தி அடைகிறீர்களா?***


படைத்தலின் போது எனது பூரண ஈடுபாடு இருந்த போதிலும் எனக்குரிய பூரணத்துவத்தை அல்லது திருப்தியை அந்தப்படைப்பு ஏற்படுத்தாமல் போன சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. என்னை எனது உணர்வுடன் ஒவ்வொரு படைப்பிலும் வெளிப்படுத்த முயல்கிறேன். இதே வேளை என் கருத்தை நேரடியாக சொல்ல முடியவில்லையே என்ற தவிப்பும் நிறைய உண்டு. ஆனால், வெளிப்படுத்தலுக்கான முயற்சிகள் தொடர்கின்றன.

***கறுப்பு வெள்ளையிலா அல்லது நிறத்தில் வரையும் போதா கூடிய திருப்தியைப் பெறுகிறீர்கள்?***

என்னைப் பொறுத்தவரை வெளிப்பாடு தான் முக்கியம். ஊடகத்தை தேவைக்கேற்றவாறு தெரிவு செய்து கொள்கிறேன்.

***உங்கள் பார்வையாளரின் நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

பார்வையாளனுக்கு முழுச் சுதந்திரமும் சிந்திக்க இடமும் தருவது இந்த நவீன ஓவியம். இது எல்லாத் தளங்களிலும் வளர்ச்சி கண்டுள்ளது. மக்களிடையில் ஆர்வம் ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஓவியர்களின் தொடந்த செயற்பாடே காரணம். படைப்பு தரம் என்ற நிலையிலும் நல்ல நிலையிலுள்ளோம். இன்னும் எங்கள் கோடுகளுக்கு நிகரான கவிதைகள் தமிழில் வரவில்லை.



யாழ் நூலகம்

**சந்திப்பு: தா. சனாதனன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த இரவுகளை மறப்பது கடினம். கதைகேட்ட இரவுகள். தங்கம் அத்தைதான் கதை சொல்வாள். காக்கா -நரி, முயல் - ஆமை, கதைகள் இல்லை. அவளே இட்டுக்கட்டியவை. கவிதைத் துண்டுகள் போல சில. முடிவில்லா பாட்டுக்கள் போல சில. ஆரம்பம், நடு, முடிவு என்றில்லாமல் பலவாறு விரியும் கதைகள். சில சமயம், இரவுகளில் பல தோற்றங்களை மனதில் உண்டாக்கி விடுவாள். அசுரர்கள் கடவுளர்கள் கூட அவள் கதைகளில் மாறி விடுவார்கள். மந்தரையைப்பற்றி உருக்கமாகச் சொல்வாள். சூர்ப்பனகை, தாடகை எல்லோரும் அரக்கிகளாக இல்லாமல் உணர்ச்சிகளும் உத்வேகங்களும் கொண்டவர்களாக உருமாறுவார்கள். காப்பியங்களின் பக்கங்களில் ஒண்டிக்கொண்டவர்களை வெளியே கொண்டு வருவாள். சிற கொடிந்த பறவையை வருடும் இதத்தோடு அவர்களை வரைவாள், வார்த்தைகளில் .இரவு நேரமா அந்தப் பழைய வீட்டுக் கூடமா, கூடப் படுத்த சித்தி மாமா குழந்தைகளின் நெருக்கமா என்னவென்று தெரியவில்லை. அந்தக் கதைகள் வண்டின் ரீங்கா



ரமாய் மனதின் ஒரு மூலையில் ஒலியுடன் சுழன்றவாறிருக்கின்றன.

தங்கம் அத்தை அந்தப் பழைய தூண்களும் நடுக் கூடமும் உள்ள வீட்டில் பல பிம்பங்களில் தெரிகிறாள். பெரிய மரக்கதவின்மேல் சாய்ந்தவாறு. அகல் விளக்கை புடவைத்தலைப்பால் மறைத்தபடி ஏந்திவந்து புறையில் வைத்தபடி தன்கணவன் ஏகாம்பரத்துக்குச் சோறிட்டவாறு. கிணற்றுச் சுவரில் ஒரு காலை வைத்து, கயிற்றை இழுத்துக் கொண்டு செடிகளுக்கு உரமிட்டவாறு.

தங்கம் அத்தை அழகுக் கறுப்பு. நீவிவிட்டாற்போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம். முடியில் நிறைய வெள்ளி. அத்தை வீட்டில் காலால் அழுத்தி இயக்கும் அந்தக் கால ஹார்மோனியம் உண்டு. அத்தைதான் வாசிப்பாள். தேவாரப் பாடல்களிலிருந்து வதனமே சந்திர பிம்பமோ, வண்ணான் வந்தானே வரை மெல்லப் பாடியவாறு வாசிப்பாள். கறுப்பு அலகுகள் போலநீள் விரல்கள் ஹார்மோனியக் கட்டைகளின் மேல்கறுத்தப் பட்டாம்பூச்சிகள் மாதிரிப் பறக்கும்.

தங்கம் அத்தையைச் சுற்றி ஒரு மர்ம ஒடு இருந்தது. மற்றவர்கள் அவளைப்பார்க்கும் கனிவிலும் அவளைத் தடவித்தருவதிலும் ஈரம் கசியும் கண்களிலும் அனுதாபம் இருந்தது. ஏகாம்பர மாமாவுக்கு இன்னொரு மனைவியும் இருந்தாள். அத்தையை அவர் பூ மாதிரி அணுகுவார். அவர் அத்தையை டீ போட்டு விளித்து யாரும் கேட்டதில்லை. தங்கம்மா என்று கூப்பிடுவார். அப்படியும் அத்தை ஒரு புகைத்திரைக்குப் பின் தூர நிற்பவள் போல் தென்பட்டாள். முத்து மாமாவின் பெண் வள்ளிதான் இந்த மர்மத்தை உடைத்தாள். அவள் கண்டு பிடித்தது புரிந்தும் புரியாமலும் இருந்தது. வள்ளியின் அம்மாவின் கூற்றுப்படி அத்தை பூக்கவே இல்லையாம்.

''அப்படீன்னா என்று எங்களில் பலர் கேட்டோம்.''

வள்ளி தாவணி போட்டவள். ''அப்படீன்னா பெரியவளே ஆகலை'' என்றாள்.

''முடியெல்லாம் நெறய வெளுத்திருக்கே?''

''அது வேற''

அதன் பின் அத்தையின் உடம்பை உற்றுக் கவனித்தோம். ''பூக்காத'' உடம்பு எப்படியிருக்கும் என்று ஆராய்ந்தோம். அவள் உடம்பு எவ்வகையில் பூரணமடையவில்லை என்று தெரியவில்லை. ஈரத்துணியுடன் அத்தை குளித்துவிட்டு வரும்போது அவள் எல்லோரையும் போலத்தான் தெரிந்தாள். முடிச்சிட்ட சிவப்பு ரவிக்கையும், பச்சைப் புடவையும், முடிந்த தலையுமாய் அவள் நிற்கும் போது அவள் தோற்றம் வித்தியாசமாகத் தெரியவில்லை. வள்ளியின் அம்மா வள்ளியிடம் ''அது வெறும் பொக்கை உடம்பு' என்றிருந்தாள். பொக்கை எங்கே என்று தெரியவில்லை. பறவையின் உடைந்த சிறகு போல், அது வெளிப்படையாகத் தெரியாத பொக்கையா என்று புரியவில்லை.

ஒரு மாலை பட்டுப்போன பெரிய மரத்தைத் தோட்டத்தில் வெட்டினார்கள். கோடாரியின் கடைசி வெட்டில் அது சரசரவென்று இலைகளின் ஒலியோடு மளுக்கென்று சாய்ந்தது. குறுக்கேவெட்டியபோது உள்ளே வெறும் ஓட்டை. வள்ளி இடுப்பில் இடித்து ''அது தான் பொக்கை'' என்றாள். பிளவுபட்டு, தன்னை முழுவதுமாய் வெளிப்படுத்திக்கொண்டு, உள்ளே ஒன்றுமில்லாமல் வான் நோக்கிக் கிடந்த மரத்துடன் அத்தையின் மினுக்கும் கரியமேனியை ஒப்பிட முடியவில்லை.

எந்த ரகசியத்தை அந்த மேனி ஒளித்திருந்தது? அவள் உடம்பு எவ்வகையில் வித்தியாசப்பட்டது. வெய்யில் காலத்தில் அத்தை, மத்தியான வேளைகளில் ரவிக்கையை கழற்றிவிட்டு, சாமான்கள் வைக்கும் அறையில்படுப்பாள். அவள் அருகில் போய்படுத்து, ரவிக்கையின் இறுக்கத்தின் நின்றும் விடுபட்ட மார்பில்தலையை வைத்து ஒண்டிக்கொள்ளும்போது அவள் மென்மையாக அணைத்துக் கொள்வாள். மார்பு, இடை கரங்களில் பத்திரப்பட்டுப் போகும் போது எது பொக்கை என்று புரியவில்லை. மிதமான சூட்டுடம்பு அவளுடையது. ரசங்கள் ஊறும் உடம்புடையவளாகப் பட்டாள். சாறுகனியும் பழத்தைப்போல் ஒரு ஜீவ ஊற்று ஓடியது அவள் உடம்பில், அதன் உயிர்ப்பிக்கும் துளிகள் எங்கள் மேனியில் பல முறை சொட்டியது. தொடலில், வருடலில், எண்ணெய் தேய்க்கும் போது படும் அழுத்தத்தில், அவள் உடம்பில்இருந்து கரை புரண்டு வரும் ஆற்றைப்போல் உயிர் வேகம் தாக்கியது. அவள் கைபட்டால்தான் மாட்டுக்குப் பால் சுரந்தது. அவள் நட்டவிதைகள் முளைவிட்டன. அவளுடைய கை ராசியானது என்பாள் அம்மா. தங்கச்சி பிறந்தபோது அத்தை வந்திருந்தாள். ''அக்கா, என் பக்கத்துல இருக்கா. என்னைத் தொட்டுக்கிட்டே இரு. அப்பத்தான் எனக்கு வலி தெரியாது'' என்று அம்மா முனகினாள். அறையை விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபோது. கதவருகே வந்து திரும்பிப் பார்த்தபோது தங்கமத்தை அம்மாவின் உப்பிய வயிற்றை மெல்ல வருடியபடி இருந்தாள்.

''ஒன்றும் ஆகாது. பயப்படாதே'' என்று மெல்லக் கூறினாள்.

''அடியக்கா, ஒனக்கொரு...'' என்று முடிக்காமல் விம்மினாள் அம்மா.

''எனக்கென்ன? ராசாத்தியாட்டம். என் வீடெல்லாம் புள்ளைங்க'' என்றாள் அத்தை. ஏகாம்பர மாமாவின் இளைய மனைவிக்கு ஏழு குழந்தைகள்.

''இப்படி ஒடம்பு திறக்காம...'' என்று மேலும் விசும்பினாள் அம்மா.

''ஏன், என் ஒடம்புக்கு என்ன? வேளா வேளைக்குப் பசியில்லையா? தூக்கமில்லையா? எல்லா ஒடம்புக்கும் உள்ள சீரு இதுக்கும் இருக்குது. அடிபட்டா வலிக்குது. ரத்தம் கட்டுது. புண்ணு பழுத்தா சீ வடியுது. சோறு தின்னா செரிக்குது. வேற என்ன வேணும்?'' என்றாள் அத்தை.

அம்மா அவள் கையைறப் பற்றிக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.



''ஒன் ஒடம்பைப் போட்டு ரணகளமாக்கி...'' என்று அந்தக் கையைப் பற்றியவாறு அரற்றினாள்.

அத்தையின் உடம்பில் ஏற்றாத மருந்தில்லை என்று வள்ளியின் அம்மா வள்ளியிடம் சொல்லியிருந்தாள். ஊரில் எந்தப் புது வைத்தியன் வந்தாலும் அவன் குழைத்த மருந்து அத்தைக்கு உண்டு. இங்கிலீஸ் வைத்தியமும் அத்தைக்கு செய்தார்களாம். சில சமயம் மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு அத்தை அப்படி ஒரு தூக்கம் தூங்குவாளாம். வேப்பிலையும் உடுக்குமாய் சில மாதங்கள் பூசைகள் செய்தார்களாம். திடீரென பயந்தால் ஏதாவது நேரலாம் என்று ஒரு முன்னிரவு நேரம் அத்தை பின்பக்கம் போனபோது கரிய போர்வையை போர்த்திய உருவம் ஒன்று அவள் மேல் பாய்ந்ததாம். வீரிட்ட அத்தை துணி துவைக்கும் கல்லில் தலை இடிக்க விழுந்து விட்டாளாம். அவள் நெற்றி முனையில் இன்னமும் அதன் வடு இருந்தது. அடுத்த வைத்தியன் வந்த போது, ''என்னை விட்டுடுங்க, என்னை விட்டுடுங்க'' என்று கதறினாளாம் அத்தை. ஏகாம்பர மாமாவுக்கு வேறு பெண் பார்த்தபோது அத்தை அன்றிரவு அரளி விதைகளை அரைத்துக் குடித்து விட்டாளாம். முறி



மருந்து தந்து எப்படியோ பிழைக்கவைத்தார்களாம். ''உன் மனசு நோக எனக்கெதுவும் வேண்டாம்'' என்று மாமா கண்கலங்கினாராம். அதன்பின் அத்தையே அவருக்கு ஒரு பெண்ணைப் பார்த்தாள். அப்படித்தான் செங்கமலம் அந்த வீட்டுக்கு வந்தாள். எல்லாம் வள்ளி சேகரித்தத் தகவல்கள்.

அத்தை தன் கையை அம்மாவின் பிடியிலிருந்து விலக்காமல் இன்னொரு கையால் அம்மாவின் தலையை வருடினாள். ''வுடு. வுடு எல்லாத்தையும் வுடு. புள்ள பொறக்கற நேரத்துல ஏன் என் கதையை எடுக்கற?'' என்றாள். அன்றிரவுதான் தங்கச்சி பிறந்தாள். அதன் பின் ஊருக்கு ஒரு முறை போனபோது அத்தை அந்தக்கதையைச் சொன்னாள்.

மழைக்காலம். இரவு நேரம். கூடத்தின் ஒரு பக்கம் ஜமக்காளத்தை விரித்து, எண்ணைத் தலை பட்டு, கறை படிந்த தலையணை உறைகளோடு இருந்த சில தலையணைகளைப் போட்டாகி விட்டது. சில தலையணைகளுக்கு உறையில்லை. அழுத்தமான வண்ணங்கள் கூடிய கெட்டித் துணியில் பஞ்சு பட்சிங்களே சுடுறது. ஓடுற பன்னியை அடிக்கிறது அதெல்லாம் இல்லாம இல்ல. இருந்தாலும் அங்க இருந்த மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் பழகிப் போன காடு அது. ஆந்தை எந்த மரத்துல உக்காரும், ராத்திரி சத்தமே இல்லாம காடு கெடக்கறபோது எப்படி அது கத்தும், எந்தக் கல்லுமேல உக்காந்துக்கிட்டுத் தவளை திடீன்னுட்டுக் களகளன்னு தண்ணி குடிக்கிற மாதிரி சத்தம் போடும், எந்த இடத்துல மயில் ஆடும் எல்லாம் தெரிஞ்சு போன காடு.

இப்படி இருக்கிறப்போ ஒரு மான் கூட்டம் ஒரு நா, தண்ணி குடிக்கப் போச்சுது. அதுல ஒரு மான் தண்ணி வழியா போனப்போ விலகிப் போயிடுச்சு. திடீர்னு அது வேற காட்டுல இருந்திச்சு. பாதை எல்லாம் இல்லாத காடு. மரங்கள்ல எல்லாம் அம்பு பாய்ஞ்ச குறி இருந்தது. அந்தக் காட்டுல ஒரு அருவி ஜோன்னு கொட்டிச்சு. யாருமே இல்லாத காடுமாதிரி விறிச் சோன்னுட்டு இருந்திச்சு. மானுக்கு ஒடம்பு வெடவெடன்னுட்டு நடுங்கிச்சு. இங்கயும் அங்கயும் அது ஓடிச்சு. அந்தப் பழகின காடு மாதிரி இது இல்லயேன்னுட்டு அலறிட்டே துள்ளித் துள்ளி காடெல்லாம் திரிஞ்சிச்சி. ராத்திரி ஆச்சுது. மானுக்குப் பயம் தாங்கல. அருவிச்சத்தம் அதைப் பயமுறுத்திச்சு. தூரத்துல ஒரு வேடன் நெருப்பை மூட்டி அவன் அடிச்ச மிருகத்தைச் சுட்டுத் தின்னுட்டிருந்தான். அந்த நெருப்புப் பொறி மான் கண்ணுக்குப் பட்டுது. அது ஒளிஞ்சுக்கிட்டுது. தனியா காட்டைச் சுத்திச் சுத்தி வந்து களைச்சுப் போயி அது உக்காந்துகிட்டது.

இப்படி நெறய நாளு அது திரிஞ்சுது. ஒரு நா ராத்திரி பௌர்ணமி. நெலா வெளிச்சம் காட்டுல அடிச்சது. அருவி நெலா வெளிச்சத்தைப் பூசிக்கிட்டு வேற மாதிரி ரூபத்துல இருந்திச்சு. பயமுறுத்தாத ரூபம். நெலா வெளிச்சம் மெத்து மெத்துனுட்டு எல்லாத்தையும் தொட்டுது. திடீர்னுட்டு மந்திரக்கோல் பட்டமாதிரி அந்த மானுக்குப் பயமெல்லாம் போயிடுச்சு. அந்தக் காடு அதுக்குப் பிடிச்சுப் போயிடுச்சு. காட்டோடு மூலை முடுக்கெல்லாம் அதுக்குப் புரிஞ்சு போயிட்டுது. வேற காடா இருந்தாலும் இந்தக் காட்டுலயும் எல்லாம் இருந்திச்சு. அருவி இருந்திச்சு. மரம், செடி, கொடி, எல்லாம் இருந்திச்சு. மொள்ள, மொள்ள மிருகங்க, பட்சிக எல்லாம் அது கண்ணுல பட்டுது. தேன் கூடு மரத்துல தொங்குறது தெரிஞ்சிச்சு. நல்ல பச்சப் பசேல்னுட்டு அடைத்திருந்தது. அங்கங்கே பஞ்சு முடிச்சுட்டுக் கொண்டிருந்தது. அவை நிதம் உபயோகத்திலிருக்கும் தலையணைகள் அல்ல. விருந்தினர் வந்தால், குழந்தைகளுக்குத் தர அவை. நாள் முழுவதும் விளையாடிவிட்டு, வயிறு முட்ட சாப்பிட்டு விட்டுப் படுத்தவுடன் உறங்கி விடும் குழந்தைகளுக்கு முடிச்சுக்கள் உறைக்கவா போகிறது?

சமையலறை அலம்பி விடும் ஓசை கேட்டது. சொம்பின் ணங்கென்ற சத்தமும் கதவின் கிரீச்சும், தென்னந் துடைப்பம் அதன் பின் வைக்கப்படும் சொத்தென்ற ஒலியும் கேட்டது. தகர டப்பா கிரீச்சிட்டது. கோலப்பொடி டப்பா. அடுப்பில் கோலம் ஏறும். அதன் பின் சமையலறைக் கதவை அடைத்துவிட்டுக்கூடத்தின் வழியாகத்தான் அத்தை வருவாள். யாரும் தூங்கவில்லை. காத்திருந்தனர்.

அத்தை அருகில் வந்ததும், சோமுதான் ஆரம்பித்தான்.

''அத்தை, கதை சொல்லேன்.... அத்தை''

''தூங்கல நீங்க எல்லாம்?''

நின்றுபார்த்து விட்டு அருகில் வந்து அமர்ந்தாள். காமாட்சியும் சோமுவும் மெல்ல ஊர்ந்து வந்து அவளின் இரு தொடைகளிலும் தலை வைத்துப் படுத்து அண்ணாந்து அவளைப் பார்த்தனர். மற்றவர்கள் தலையணைகளில் கைகளை ஊன்றிக் கொண்டனர்.

அத்தை களைத்திருந்தாள். நெற்றியில் வியர்வை மின்னியது. கண்களை மூடிக்கொண்டு யோசித்தாள்.

''அது ஒரு பெரிய காடு...' என்று ஆரம்பித்தாள்.

''அந்தக் காட்டுல எல்லா மிருகங்களும் சந்தோஷமாக இருந்தது. காட்டுல பழ மரமெல்லாம் நெறய இருந்தது. ஒரு சின்ன ஆறு ஓடிச்சு ஒரு பக்கம். தாகம் எடுத்திச்சின்னா அங்க போய் எல்லாம் தண்ணி குடிக்கும். மிருகங்களுக்கு எல்லாம் என்னவெல்லாம் வேணுமோ எல்லாம் அந்தக் காட்டுல சரியாக இருந்தது. அந்தக் காட்டுல வேடன் பயமே இல்லை. திடீர்னுட்டு அம்பு குத்துமோ, உசிரு போகுமோன்ன பயமே இல்லாம திரிந்திச்சுங்க அந்த மிருகங்க எல்லாம். எல்லாக் காடுமாதிரியும் அங்கயும் காட்டுத்தீ, வெளி மனுசங்க வந்து மரம் வெட்டுறது, பழம் பறிக்கிறது, திடீர்னு ஒரு ஆளு வந்து புல்லு தெரிஞ்சுச்சு. அந்தப் புதுக்காட்டோட ரகசியம் எல்லாம் அந்த மானுக்குப் புரிஞ்சிடுச்சி. அதுக்கப்புறமா பயமில்லாம அந்த மானு அந்தக் காடெல்லாம் சுத்திச்சு. பயமெல்லாம் போயி சாந்தமா போயிடுச்சு.''

கதையை முடித்தாள் அத்தை. கூடத்தின் மற்றப்பகுதிகள் இருண்டிருந்தன. இந்தப்பகுதியில் மட்டும்தான் வெளிச்சம். இருண்ட பகுதியைக் காடாய்க் கற்பனை செய்து, கதை கேட்ட குழந்தைகள், அந்த மானுடன் தோழமை பூண்டு, முடிவில் சாந்தப்பட்டுப் போயினர். தலையணைகளை அணைத்து உறங்கிப் போயினர். நீலமும், மஞ்சளும், கறுப்பும் கலந்து முரட்டுத் துணித் தலையணையில் சாய்ந்து ஒற்றைக் கண்ணைத் திறந்து, உறக்கக்கலக்கத்தில் பார்த்தபோது எங்கள் நடுவே இரு கைகளையும் மார்பின்மேல் குறுக்காகப் போட்டுத் தன் தோள்களை அணைத்தவாறு, முட்டியின் மேல் சாய்ந்து கொண்டு தங்கம் அத்தை உட்கார்ந்திருந்தாள்.




நன்றி: உன்னதம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




1951 வெனிஸ் திரைப்படவிழாவில் திரையிடப்பட்ட ''ரஷோமானி''ன் வெற்றி, ஜப்பானியத் திரைப்படங்களின் மகிமையை மேற்கின் கண்களுக்குக் காட்டியது. உலகின் அதிசிறந்த திரைப்பட இயக்குனராக அகிரா குரோசவை இத்திரைப்படம் அறிமுகப் படுத்தியது. 1943முதல் 1992வரை மொத்தம் 25 படங்களை இயக்கி (சில படங்களில் இணை இயக்குனராகப் பணியாற்றியுள்ளார்) ஜப்பானியத் திரைப்படங்களுக்கான உலகளாவிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திய அகிரா குரோசாவினை கௌரவிக்குமுகமான திரைப்படவிழா ஒன்று மே.21 முதல் கொழும்பில் நடைபெறுகின்றது.

'டொஹொ' நிறுவனத்திலேயே மிகவும் உன்னதமான இயக்குனர், ஜப்பானிலேயே தலைசிறந்த திரைக்கதையாசிரியர்; உலகில் மிகச் சிறந்த படத் தொகுப்பாளர்...'' என வர்ணிக்கப்படுகின்ற அகிரா குரோசாவா 1910ம் ஆண்டு மார்ச் 23ம் திகதி டோக்கியோவில் பிறந்தார். ஜப்பானில் பிரபலமான ''சமுராய்'' (கட்டுப்பாடான மறவர்) குலத்தைச் சார்ந்தவர். இராணுவ அதிகாரியாக இருந்து உடற்பயிற்சி ஆசிரியராக மாறிப் பணியாற்றிய தந்தைக்குப் பிறந்த ஏழு பிள்ளைகளில் இளையவர். ஜப்பானியப் பாரம்பரியக் கல்விகளைக் கற்ற இவர் ஓவிய நாட்டம் கொண்டு தனது 17 வயதிலேயே மேற்கத்தேய ஓவியக்கல்லூரியில் சேர்ந்து கற்றார். மரபு வழி ஓவியங்களுக்கு அப்பால் தேடிய இவர், படைப்பாக்க அனுபவங்களை சுயமாகப் பெற்றுக்கொண்டார்.

1936ல் Kajiro Yamamota என்கிற புகழ் பெற்ற இயக்குனரின் கீழ் உதவி நெறியாளராகப் பணியாற்ற கடும் போட்டியின் மத்தியில் தெரிவானார். இதுவே திரைப்படத்துறைக்கான அவரது ஆரம்ப அனுபவமாகவும் அமைகிறது.

சூழலியல் தாக்கங்களுக்கும், யதார்த்தங்களை நோக்கிய தேடல்களுக்கும் உட்பட்ட இவர் திரைப்படத் துறையின் பல பரிமணாங்களையும் தொட்டுச் செல்லும் வாய்ப்பைப் பெறுகிறார்.

1960ஆம்ஆண்டில் தனியான படத்தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கிய இவரின் படத்தயாரிப்பு முறை வழமையான தயாரிப்பு முறையை விட வேறுவிதமாக அணுகப்பட்டதாகக் கூறப்படுகிறது. தயாரிப்பு, படப்பிடிப்பு, படத்தொகுப்பு என்ற வழமையொழுங்கில் ஏனையவற்றைவிட படத்தொகுப்புக்கே முக்கியத்துவம் அளித்தார். எனினும்'' படத்தொகுப்பே முதன்மையான கட்டமாயினும் நல்ல திரைக்கதை இல்லாமல் மிகச்சிறந்த படத்தொகுப்பாக இருந்தாலும் கூட ஒரு திரைப்படம் வெற்றிபெற முடியாது.'' என்றும் கூறியிருக்கிறார், அகிரா குரோசாவா.

திரைக்கதையை அதிகமாகத் தாமாகவே அமைத்துக்கொள்ளும் இவர் இருவர் மூவரையும் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டார்.

குரோசாவா சொல்கிறார்.. ''எந்த ஒன்றையும் படம் பிடிக்கும் போது முதலில் நான் எண்ணிப்பார்ப்பது, படமாக்கும் பொருள், நிகழ்ச்சி, சூழ்நிலை ஆகியவற்றை எப்படி சிறந்த முறையில் பின்னால் தொகுத்துக் கொள்ள முடியும், அதற்கேற்ப எப்படி எந்தக் கோணத்திலிருந்து சிறந்த முறையில் படம்பிடித்துக்கொள்வது என்பதையும் மட்டும்தான். என் படப்பிடிப்பு உத்தியின் அடிப்படை இதிலிருந்தே உருவாகத்தொடங்கும். எனக்கு என்ன தேவை என்பதை நான் படப்பிடிப்பாளருக்கு மட்டுமல்லாமல் குழுவிலுள்ள அனைவருக்கும் விளக்கமாக எடுத்துச் சொல்வேன். எனக்கு வேண்டியவற்றைப் பெற நான் அறிந்தவற்றை அவர்களும் அறிய அனைத்தையும் பகிர்ந்து கொள்வேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து உழைப்போம். எப்போதும் படத்தின் கட்டங்களையும் அசைவுகளையும் இறுதியாகத் தீர்மானிப்பவன் நானே. ஆனாலும் அருகிலிருக்கும் யாராவது என்னைக் காட்டிலும் சிறந்த கருத்தைக் கூறினால் அதையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன்...''

மேற்கூறியவற்றிலிருந்து குரோசாவா பற்றியதும், அவர் படங்கள் பற்றியதும் பல தெளிவுகளைப் பெறலாம்.

குரோசாவாவின் மொத்தப் படைப்புக்கள் அத்தனையும், உள்ளடக்கம் - உத்திகளில் பெருமளவு வேறு வேறான தன்மைகளைக் கொண்டவை. இவர் ஒரே மாதிரியான உள்ளடக்கம் உத்திக்கு தன்னை வலுக்கட்டாயமாக ஆட்படுத்திக் கொள்ளவில்லை. எனினும், இவருடைய படைப்புக்களெல்லாம் ஒரு தனிச்சிறப்புள்ள தனியொருவரின் வளர்ச்சியென்று அடையாளம் காணக்கூடிய அளவுக்கு ஒரு உள்ளார்ந்த ஒற்றையிழையில் கட்டப்பட்டவை போலிருக்கும்'' எனப்படுகிறது. மற்றவர்களையும் பங்கேற்று ஒரு சினிமாவை உருவாக்கும் இவரின் நோக்கம் எப்போதும் யதார்த்தத்தை பதிவு செய்வதாகவே உள்ளது. இந்த யதார்த்த உருவாக்கலுக்காக படப்பிடிப்புக்களில் கடும் உழைப்பினையும், செலவினையும் கூட மேற்கொண்டுள்ளார். பல கெமராக்களைப் பயன்படுத்தும் உத்தியும் இவரின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகக் கொள்ளப் படுகிறது.

இவரின் படங்களில் இன்னொரு முக்கிய அம்சமாக குறிப்பிடப்படுவது, நடிக நடிகையர் தெரிவும் அவர்களுக்கேற்ப திரைக்கதையை உருவாக்குவதுமாகும். இவரது அநேக படங்களில் குறிப்பிட்ட சில நடிக, நடிகையரே தொடர்ந்தும் பங்கேற்றுள்ளனர். இருந்தும் இவர் படங்களில் அதன் காரணமாகவே எந்தத் தொய்வும் ஏற்பட்டதில்லை. இவரின் அநேக படங்களில் கதாநாயகனாக நடித்த 'மிஃபுனே'' - இவர் சில படங்களை இயக்கியுமிருக்கிறார். - இவ்வாறு சொல்கிறார்...'' எனக்குத் தெரிந்திருக்கும் எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்ததே அவர்தான்... எனக்குத் தெரியும் குரோசாவின் படங்களைத் தவிர வேறெந்தப் படங்களிலுமே நான் பெருமைப்பட்டுக்கொள்ளும் படியான நடிப்பை வெளிப்படுத்த முடிந்ததில்லை'' என்று ... இன்னொரு புகழ் பெற்ற நடிகையான 'ஹருகோ ஸுகிமுரா' இவ்வாறு சொல்கிறார்....'' ''நடிகர்களின் தனித்துவமான நடிப்பின் ஆழத்தை அளந்து, அவர்களது நடிப்பாற்றலின் உண்மையான வடிவத்தை எப்படியோ கிளறி திறமையுடன் வெளிக்கொணரும் கலை அவருக்கே கைவந்த ஒன்றாகும்...''

''உலகின் வெளித்தோற்றங்களை நகல் படுத்துவதன் மூலம் உண்மை (மெய்மை) வெளிப்பட்டு தெளிவாகிவிடும் என்று நான் நம்புவதில்லை. நகல் நகலேதான் அதுவே உண்மையாகி விடுவதில்லை...'' என்று கூறும் இவரின் படங்கள் எல்லாம் வெற்றிபெற்றனவா? ஓரளவினதான முழுமையினைத் தந்தனவா என்று கேட்டால் அதற்கு இவ்வாறுதான் விமர்சனரீதியாக பதிலளித்து அதற்கான காரணத்தையும் அறியலாம்.

''சமகால வாழ்க்கையின் பற்றி எரியும் பிரச்சினைகளில் தீவிர அக்கறை காட்டிய அவரது படங்கள் ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று தோற்றுப் போனதுதான் வியப்பளிக்கக்கூடிய விஷயம். மர உச்சிக்கேறியும் பழம் பறிக்க முடியவில்லை என்பதைப்போல் தன்னையே நேரிடையாக பாதித்த பிரச்சினையொன்றை வெளிப் படுத்துவதற்காக கொதித்தெழுந்து புறப்பட்ட ''ஸ்கேண்டல்'' படம் மிகவும் வலுவிழந்து தோற்றுப்போயிற்று. உள்ளடக்கத்தில் நிறைய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றெண்ணும் படியான ''குடிகாரத் தேவதை'' (டிரங்கன் ஏஞ்சல்) அந்த முழு சாத்தியக் கூறுகளையும் நிறைவேற்றிக்கொள்ள இயலாமையால் சரிந்து விழுகின்றது. ''நோ ரெக்ரெட்ஸ் ஃபார் அவர்யூத்'' எளிமைப்படுத்தப்பட்ட பிரச்சாரப் படத்தின் தன்மையை பிறப்பித்து விடுகின்றது. ஜப்பானில் பரவலாகவே தலைவிரித்தாடிய ஊழலை வெளிப் படுத்துகிறேன் என்று சபதம் பூண்டு புறப்பட்ட ''த பேட் ஸ்லீப் வெல்'' வர்க்க மோதலை பரிசீலிக்க அலைந்த ''உயர்வும் தாழ்வும்'' (ஹை அண்ட் லோ) போன்றவை முழுமையை எட்ட முடியாமல் தோற்றன. ''த கொயட் டூயல்'', ''ஸ்ட்ரே டாக்'', மற்றும் அவரே தயாரித்த ''ஒன் ஒண்டர்புல் சண்டே'' ஆகியவை தோற்றுப்போனதை அவரே மனதார ஒப்புக்கொண்டார்.

ஜப்பான் அனுபவித்த அணுகுண்டின் கொடுமையான விளைவுகளின் பின்னணியில் எடுத்த ''த ரெகார்ட் ஆஃப் எ லிவிங் பீயிங்'' அவருடைய சிறந்த படைப்பாக வேண்டியது, ஒரு அறிவு பூர்வமான படமாக மட்டுமேயாகி பின்தங்கிவிட்டது. அவருடைய மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றென கருதக் கூடிய ''இகிரு'' விலும் கூட முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் இடையில் சமநிலை தவறியதைப் போலவும் இரண்டாம் பாகத்தில் படம் திசை தவறிப் போனதைப் போலவும் உணர வைக்கின்றது.''

''மற்றொரு வியப்புதரும் செய்தி, அவர் மிகவும் மதித்துப்போற்றிவந்த தாஸ்த்தாவ்ஸ்கி, கார்க்கி ஆகியோரின் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த 'த இடியட்' மற்றும் 'லோயர் டெப்த்ஸ்'திரைப்படங்கள் வெற்றிபெறாமல் போயின என்பது. ஆனால் அவருக்குப் பிடித்தவனாகயிருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவ்வளவு நெருக்கமானவன் என்று கருதமுடியாத ஷேக்ஸ்பியரின் ''மக்பெத்தை'' அடிப்படையாகக் கொண்ட, ''த்ரோன் ஆஃப் பிளட்'' வெற்றிப்படமாகி திரைப்படமாக வந்த ஷேக்ஸ்பியரின் படைப்புக்களிலேயே மிகவும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது.''

அதேபோல் அவர் தயாரித்த வரலாற்றுப் படங்களில் குறிப்பிடத் தக்கவைகளான ''ரஷோமான்'', ''செவன் சாமுராய்'', ''யொஜிம்போ'', சன்ஜுரொ'', ரெட்பியர்ட்'' போன்றபல படங்கள் படைப்பாற்றல் மற்றும் வடிவழகு ஆகியவற்றில் மிகவும் அபூர்வமான சாதனைகளைப் புரிந்துள்ளன.

இதற்கான காரணத்தை திடமாக இப்படிச் சொல்லிவிட முடியும்: தீவிரமான பிரச்சினைகளை வெளிப் படுத்தும் வகையில் செயலாற்றிய போதெல்லாம் அவருடைய உணர்வு சிதைபட்டுப் போனது; அப்படைப்புக்களின் கட்டு உடைந்துள்ளது. வடிவழகு குலைந்து போயுள்ளது. ஆனால் வெளிப்படையான தீவிரத்தன்மைகளில் ஈடுபடாது, இயல்பாக முழுமன நிறைவோடு, உணர்வு, அறிவு ஆகியவற்றோடு தனித்தன்மையுடன் படைத்தளித்த படைப்புக்கள் மகத்தானவையாக மாறியுள்ளன.''

'திரைப்படமே எனது சகலமும்' என்று கூறும் குரோசாவா ''ஒரு இயக்குனர் திரைப்படம் தயாரிப்பது உண்மையில் தனக்காகவேதான். அவருடைய படத்தைப் பாராட்டினால், அது மக்களுக்காகவே படைத்தது போல் இருந்தால் அதற்குக் காரணம் இயக்குனரின் பட்டறிவும், மக்களின் பட்டறிவுகளும் ஒன்றுபோல் இருப்பது தான்: இயக்குனர் மக்களின் பட்டறிவுகளை மெய்யாக்குகின்றார் என்பதல்ல இயக்குனர் தனதல்லாத உணர்வு, சிந்தனை பட்டறிவுகளை உள்ளடக்கி அவ்வறினடிப்படையில் படம் தயாரிக்க முடியாது; மக்களின் இரசனைக்கு ஏற்ற படம் தயாரிக்க முடியாது. படம் எந்த மட்டத்திலிருக்கிறதோ அதுதான் உண்மையில் இயக்குனரின் தத்துவ, பௌதீக, உணர், கலைத்தன்மையின் மட்டமாகவும் இருக்கும்...'' என்னும் உறுதியே அவரை தலைசிறந்த இயக்குனராக இனங் காட்டியுள்ளது.

தமிழ்ச் சினிமாக்களின் தோல்வியின் இருப்பு எங்கிருக்கின்றதென்பதையும் எங்களால் அறிய முடிகிறது அல்லவா?

**உதவியவை:**

*தி.சு.சதாசிவம் தமிழ்ப்படுத்திய 'ரசோமான்'*

Tribute to a living Genius' by Ashly rathnavibushana -Sunday obsever

**எம். கே. எம். ஷகீப்**

## குறியீட்டு மொழியில் நச்சுக் கருத்து ?

குறியீட்டு மொழியில் பேச முற்படுகின்ற படைப்புக்களை புரிந்து கொள்ள முற்படும் எந்த மனிதனிற்கும் ஏற்படுகின்ற முக்கிய பிரச்சினை அது, எதனைப்பற்றி பேசுகின்றது என்பதை இனங்காண்பதே. அதாவது குறியீட்டு தொடர்புகளிற்கிடையில் ''தொடர்பினை பெறுதல்'' என்பது பார்வையாளரின் (பங்காளி) பக்குவத்தை முதிர்ச்சியைப் பொறுத்தது. எனவே, படைப்பாளி (பங்காளி) சொல்ல முயற்சிக்கிற செய்தியைத் தவிர (தளம்) வேறு தளத்தையும் ஒரு பார்வையாளர் காணமுடியும் என்பதே குறியீட்டு மொழியின் பலமும் பலகீனமும்.

சரிநிகர் 96 இல் வினவப்பட்ட சரிநிகர் 97 இல் குழப்பப்பட்ட நச்சுக்கருத்து பற்றிய விவாதத்தில் இக்கட்டுரையும் தவிர்க்கமுடியாமல் பங்குகொள்கிறது..

சரிநிகர் 96 இல் மேற்கோள் காட்டப்பட்டவாறு குறியீட்டு நாடகங்களிற்கு பல தளங்களில் நின்று விளக்கம் கூறமுடியும். எனவே ஒரு தளத்தில் நின்று கேள்வி கேட்கும் போது நெறியாளர் மற்றைய தளத்தில் வசதியாக ஒளிந்து கொள்ள முடியும். அப்படியென்றால் ஒரு தவறான செய்தியை பார்வையாளருக்கு வேறோர் தளத்தில் நின்று அதை நியாயப்படுத்திக்கொண்டே வழங்கமுடிகிறது என்றால் நச்சு இலக்கிய நாடகங்களை இனங்காணுவது எப்படி?

சரிநிகர் 97 இல் -1 பங்காளிகள் முன்வைத்த தர்க்கம்.

தர்க்கம் 1. அடக்கு முறையாளரிற்கு அடக்கு முறைகளுக்கு எதிரான கருத்து நஞ்சு. அரங்கப் பங்காளியின் சுதந்திர நிலையில் இருந்து சொந்தக் கருத்து உருவாக்கம் நிகழ்வதும், அதனை தேட முற்பட வைப்பதுமான அரங்க அளிக்கை, எசமானத்தை கைவிட முடியாத விமர்சகர்களுக்கு சங்கடம். இது அவர்கள் பார்வையில் நஞ்சுதான்.

தர்க்கம் 2. ஒரு கருத்து எவ்வளவு பிழையாயினும் (நச்சுக்கருத்தாயினும்) கருத்துச் சந்தையில் அனுமதிக்க வேண்டும்.

தர்க்கம் 3. நச்சுக் கருத்தாயின் அதை ஏற்க பங்காளிகள் (பார்வையாளர்) மந்தைகள் அல்ல.

(-1)பங்காளிகள் மேற்கண்ட தர்க்கத்திற்கு மேலதிக புதிய அரங்கைப்பற்றிய தமது நிலைப்பாட்டைஉணர்ச்சி வசப்பட்டு எழுதியுள்ளனர். நச்சுக் கருத்தினை சந்தையில் அனுமதிப்பதில் எனக்கும் ஆட்சேபனை இல்லை. நச்சுக் கருத்து எசமானின் பூச்சாண்டி என எழுதுவதில் தான் முரண்பாடு தோன்றுகின்றது.

நச்சுக் கருத்தினை மிகக் குறுகிய அர்த்தத்தில் உள்வாங்கி எசமானத்துவத்தை கைவிடமுடியாத விமர்சனம்'' எனும் பழைய துருப்பிடித்துள்ள ஆயுதத்தை வீசியுள்ளனர். (அல்லது நச்சுக்கருத்திற்கு குறுகிய அர்த்தம் கற்பித்தல் மூலம் தான் விமர்சனத்தை எதிர்கொள்ளமுடியும் என நம்பினார்களோ தெரியவில்லை)

மேற்கண்ட வினா (-1) நாடகத்திற்கானது என, அவசரமாக புரிந்து கொண்டு ஆத்திரத்தில் நிதானமிழந்து தமக்குள் முரண்படுகின்றனர். உதாரணமாக ஆரம்பத்தில் எசமானரின் பூச்சாண்டிதான் நச்சுக்கருத்து என எழுதிவிட்டு பிற்பகுதியில் நச்சுக்கருத்து சாத்தியம் என்பதை தர்க்கம் (2), தர்க்கம்(3) ஏற்றுக்கொள்கின்றனர்.

வாழ்க்கையில் அடிபட்ட நாலுபேரிடம் கதைத்தால் போதும், நச்சுக்கருத்தினை பெரிய அளவில் உணர்ந்து கொள்ள பெரிய கலந்துரையாடல் தேவையில்லை. குழப்பம் நீங்கிவிடும்.

காலத்திற்குக் காலம் பழையதின் வளங்களை ஈர்த்துக்கொண்டு புதிய கலைக்கோட்பாடுகள் முன்னெழுகின்றன. ஆனால், தேர்ந்த படைப்பாளி வேண்டுமென்றே நச்சுக்கருத்தினை விதைக்கும் சாத்தியத்தை மறுக்க முடியாது. படைப்பாளி எண்ணியிராத தளத்தில் விமர்சகன் இயங்க முடியும். என்பதைப் படைப்பாளி மறந்துவிடக்கூடாது. அதுவே படைப்பின் பலமும் பலகீனமும் ஆகும். ஆனால், எவரையும் நீண்ட காலத்திற்கு மேய்க்க முடியாது எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

-கதிர்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ராஜன் ஹூலின் ஞான திருஷ்டி மற்றும் வேத வாக்குகள் குறித்த ஒரு எதிர்வினை!

-சரிநிகர் ஆசிரிய பீடம்

சரிநிகர் பற்றியும் அதன் ஆசிரிய பீடம் பற்றியும் இதுவரை நடத்தப்பட்டு வந்த தாக்குதல்கள் இப்போது ஆங்கிலப் பத்திரிகை உலகிலும் நடக்கத் தொடங்கியுள்ளன. 'தமிழ் இனவாதத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள், புலிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள்' போன்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே சரிநிகர் மீது வைக்கப்பட்டுள்ளதும், அவை தொடர்பாக பல்வேறு வாதப் பிரதிவாத கடிதங்கள் சரிநிகரில் தொடர்ந்து பிரசுரமாகி வருவதும் வாசகர்கள் அறிந்ததே. இப்போது, ஆங்கிலம் வழியாக, தமிழ் வாசிக்க முடியாத வாசகர்கள் மத்தியிலும் சரிநிகர் மீதான தாக்குதல்கள் எடுத்துச் செல்லப்படத் தொடங்கியுள்ளன. ஏற்கெனவே தமிழில் வாசிக்காத சிங்களப் புத்திஜீவிகள் மற்றும் ஜனநாயக சக்திகள் மத்தியில் இத்தகைய விமர்சனங்கள் சிலரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. சரிநிகர் பீடத்தின் அரசியல் பார்வையை மேர்ஜ் நிறுவனத்தின் அரசியற் குறிக்கோள்கட்கு முரண்பட்டதாக, அதற்கு எதிரானதாக காட்டும் விசமத்தனமான ஆதாரமற்ற பிரச்சாரங்களில் ஈடுபட்ட இவர்களின் உள்நோக்கம் தமது அரசியற் சார்பு நிலைக்கு ஏற்ப சரிநிகர் செயற்பட வேண்டும் என்பதைத் தவிர வேறல்ல. ஆனால் இந்த முயற்சியில் நேர்மையாக இறங்கி விவாதங்களில் பங்கு கொள்ளும் திராணி இவர்களிடம் இல்லாததால் ஸ்தாபனரீதியில் சரிநிகரின் கைகளைக் கட்டிப் போடும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். தமது நோக்கத்திற்கு பலம் சேர்க்கவே சரிநிகரை வாசிக்காதவர்கள் மத்தியில் சரிநிகருக்கு எதிரான அவதூறுகளைக் கிளப்பிப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அந்த வரிசையில் இப்பொழுது ஆங்கிலப் பத்திரிகை உலகில் அச்செயலை நோக்கமாகக் கொண்டு இறங்கியிருப்பவர் தான் திரு ராஜன் ஹூல் அவர்கள். மனித உரிமைகட்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR/J) என்ற அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தரான இவர், இதுவரைகாலத்தில் ஒருநாள் கூட சரிநிகருடன் தொடர்பு கொண்டதோ, பேசியதோ கிடையாது. சரிநிகரில் ஒரு வரி எழுதியதும் கிடையாது; சரிநிகரின் கருத்துக்கள் தொடர்பாக அதை விமர்சித்து சரிநிகரிலல்லாவிடினும், வேறேதாவது தமிழ்ப் பத்திரிகையிலாவது ஒரு எழுத்தைத்தானும் எழுதியதும் கிடையாது. இப்போது முதன் முதலாக ராவய பத்திரிகையின் வெளியீடாக வரும் Counter Point என்ற ஆங்கில சஞ்சிகையில் அது தொடர்பாக எழுதியதன் மூலம் சரிநிகரின் போக்கு தொடர்பான சர்ச்சையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

Counter Point பத்திரிகையில் (தொகுதி-3 இதழ் 4) ராஜன் ஹூல் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் (The Control of the Tamil land and the road to self Anihilation) தமிழ் தொடர்பு சாதனங்கள் தொடர்பான அவரது குறிப்பொன்றில், போகிற போக்கில் சரிநிகர் தொடர்பாக சில வரிகளை எழுதிவிட்டிருக்கின்றார் அவர். சரிநிகரின் போக்கு தென்னிலங்கையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றகரமான வளர்ச்சிகளை உதாசீனம் செய்வதாகவே அமைந்துள்ளது என்றும், சரிநிகர், யுக்திய பத்திரிகையின் பார்வையை விட வேறுபட்ட பார்வையை கொண்டிருக்கிறது என்றும் கூறி, மேர்ஜ் நோக்கங்களை சரிநிகர் பிரதிபலிக்கவில்லை என்று பூடகமாகத் தெரிவித்திருக்கிறார். 'சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்' என்ற இயக்கத்தினால் சிங்கள கிராமப் புறங்களில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் பற்றியோ அவற்றுக்கு கிடைத்த பெரும் வரவேற்புகள் குறித்தோ சரிநிகர் ஒன்றுமே எழுதியதில்லை. குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் பத்திரிகைகள் எழுதிய அளவுக்குக் கூட சரிநிகர் எழுதவில்லை. ஒருமுறை சரிநிகர் இந்த சமாதானம், ஆம் ஜனநாயகத்துடன் என்ற அமைப்புடன் கலந்துகொண்டு வவுனியாவுக்கு சென்றபோதும் கூட அங்கு பேசப்பட்ட விடயங்களைப் பற்றி எழுதுவதை விடுத்து வாசுதேவ நாணயக்கார மற்றவர்களுடன் ரெயிலில் வராமல் தனிப்பட்ட வாகனத்தில் போனார் என்பது போன்ற வெற்று அரட்டைகளைப் பற்றியே எழுதியிருந்தது. தமிழ் மக்களின் உரிமைகளுக்கான வாசுதேவாவின் தொடர்ச்சியான நீண்டகாலப் போராட்டங்கள் பற்றி -அவை கட்டாயம் சொல்லப்பட வேண்டியவை- ஒருபோதுமே சொல்லப்பட்டதில்லை. மொத்தத்தில் சரிநிகரின் பொதுவான போக்காக இருப்பதெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிகளை நிராகரிப்பதேயாகும்... போன்ற குற்றச்சாட்டுக்களை அக்கட்டுரை அடுக்கியிருந்தது.

இக்கட்டுரையில் சரிநிகர் தொடர்பாக எழுதியிருந்த விடயங்கள் குறித்து இப்பத்திரிகைக்கு சிவசேகரம் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்றில் சிலவிடயங்களை குறிப்பிட்டிருந்தார். அக்கடிதத்தில் அவர் சரிநிகர் கடைப்பிடித்துவரும் பத்திரிகா தர்மம் பற்றியும், மாற்றுக் கருத்துக்களுக்கு அது களமமைத்து வருவது பற்றியும் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் இக்கடிதத்தில், ஹூலே அவர்களது கட்டுரை தமிழ் வாசிக்காத வாசகர்கள் மத்தியில் நெருக்கடிமிக்க காலங்களில் சிறப்பாக இயங்கிவந்த பத்திரிகைகள் தொடர்பாக தவறான வியாக்கியானங்களை கொடுக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டி, சரிநிகர் மீதான அவரது தாக்குதல் ஒப்புக்கொள்ளப்பட முடியாதது (Objectionable) என்றும் குறிப்பிட்டிருந்தார். இப்பத்திரிகை மட்டுமே தீவிலுள்ள தமிழில் வெளிவரும் ஒரே திறந்த களமாக உள்ள பத்திரிகை என்றும் அப்பத்திரிகை பரவலான பல்வேறு அபிப்பிராயங்களுக்கும் களமமைத்து தருகின்றது என்றும், சரிநிகருக்கு எழுதப்படும் எந்தக் கட்டுரைகட்கும் அது ஒரு தணிக்கை முறையை அமுல் செய்வதாக தான் கருதவில்லை என்றும் எழுதிய சிவசேகரம் அவர்கள் அக்கடிதத்தில் சரிநிகர் உலகத்தின் மிகச்சிறந்த ஒரு பத்திரிகையாக ஒருவேளை இல்லாமல் இருக்கலாம். ஆனால், மற்றைய அரசசார்பு தொடர்பு சாதனங்களைவிட அது எவ்வளவோ நியாயமாகவே நடந்து கொண்டு வருகிறது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதம் Counter Point பத்திரிகையின் தொகுதி 3 இதழ் 6இல் வெளிவந்தது. இதற்கான எதிர்வினையையும் கூடவே ஹூல் அவர்களிடம் வாங்கிப் பிரசுரித்திருந்தது இப்பத்திரிகை. இப்பத்திரிகைக்கும் ஹூலே அவர்களுக்கும் இடையிலான நெருக்கம் பற்றியோ, விவாதத்துக்குரிய ஒரு விடயத்தில் ஒரு பத்திரிகை இவ்வாறு வாசகர் ஒருவரின் கடிதத்துக்குரிய பதிலையும் சேர்த்தே பிரசுரிப்பது நியாயமானதா என்பது குறித்தோ பேசுவதை விட, இப் பதிலில் ஹூல் அவர்கள் என்ன சொல்லியுள்ளார்கள் என்பது பற்றி கவனிப்பது முக்கியமானதாகும். (திரு விக்டர் ஐவன் போன்ற தேர்ந்த பத்திரிகையாளர் ஒருவரது முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் Counter point பத்திரிகை இவ்வாறான ஒரு பத்திரிகா தர்மத்தை பேணுவது கொஞ்சம் விசித்திரமாகத்தான் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை!)

இந்தப் பதிலில், ராஜன் ஹூல் அவர்கள் இன்னும் அதிக ஆவேசத்துடன் சரிநிகரைச் சாடிவிட்டிருக்கிறார். அவரது ஆவேசத்தின் ஆழம் எவ்வளவு என்பதற்கு அவர் அக்கடிதத்தின் இறுதிப்பகுதியில் எழுதியிருந்த சிலவரிகள் நல்ல உதாரணங்களாகும். சரிநிகர், வீரகேசரி ஆகிய இரு பத்திரிகைகள் தொடர்பாகவும் அவர் இப்பதிலில் இவ்வாறு எழுதுகின்றார்: 'இந்தப் பத்திரிகைகளின் நிலைப்பாடுகளை நான் பலவருடங்களாக அவதானித்து வருகிறேன். அவர்கள் எதைப் பிரசுரிப்பார்கள் எதைப்பிரசுரிக்க மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது ஆசிரியபீட அலுவலக அறைகட்குள் என்ன நடந்துவருகிறது என்பது தொடர்பாகவும் எனக்குக்கொஞ்சம்தெரியும்.'

ஒரு பத்திரிகையின் ஆசிரிய பீட அறைக்குள் நடப்பதையும் ஒரு பத்திரிகை எதையெல்லாம் செய்யும் என்பதையும் அறிந்து கொள்ளும் ஞானதிருஷ்டி கைவரப்பெற்ற ராஜன்ஹூல் அவர்கள் இந்தக் கடிதத்தில் அவற்றில் ஒன்றிரண்டு விடயங்களையாவது எழுதியிருந்தால் வாசகர்களுக்கும் பயன்மிக்கதாக இருந்திருக்கும். மைபோட்டுப் பார்த்தல் அல்லது நினைத்த காரியம் கூறல் போன்ற அமானுஷ்ய சக்திகளில் ராஜன் ஹூல் அவர்களுக்கு இருக்கும் சித்தி குறித்து அப்போது Counter Point வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவர் அவை பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை.

ஒரு பத்திரிகை அலுவலகத்தில் என்ன நடக்கும் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாத இரகசியமான விடயம் அல்ல. அங்கே ஒன்றும் மாயமந்திரமோ சதியோ நடப்பதில்லை. பத்திரிகையில் வரும் விடயங்கள் தொடர்பான விவாதங்களும் எழுத்துக்களும் தான் நடக்கும். ஆனால் ராஜன் ஹூல் அவர்கள் எழுதியிருப்பதைப் பார்த்தால் அதுவும் தமிழ் வாசிக்காத வாசகர்கள் மத்தியில் செல்லுபடியாகும் விதத்தில் அவர் எழுதியிருப்பதைப் பார்த்தால், பத்திரிகையின் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் புலிகளுக்கு இரகசியமாக அனுப்பப்பட்டு அவர்களின் அங்கீகாரத்தின் பின் வெளியிடப்படுகிறது என்று பூடகமாகத் தெரிவிக்க முயல்வது போலத்தான் தோன்றுகிறது. ஒருவேளை அவரது நோக்கமும் அதுதானோ என்னவோ தெரியவில்லை! இந்த விடயத்தை தான் எழுதியது அது சில தாக்கங்களையாவது ஏற்படுத்தும் என்பதால் தான் என்று அவர் குறிப்பிடுவதும் கூட இதனால் தானோ என்னவோ? (இலங்கை அரசின் இரகசியப் பொலிசாருக்கு ஒரு அறிவிப்பு: புலனாய்வுக்காகவும் பொலிஸ் நாய்களுக்காகவும் அதிகம் செலவு செய்யத் தேவையில்லை. நீங்கள் ஹூல் அவர்களுடன் தொடர்பு கொண்டால் போதும். பல இரகசியங்களை அவர் தனது அமானுஷ்ய சக்தியால் கண்டு பிடித்து விடுவார்.)

பார்ப்போம். சிவசேகரம் அவர்களுக்கு எழுதிய பதிலில் ஹூல் எழுதுகிறார்;

"...ஆனால், யதார்த்தத்தில், தெற்கில் பல தன்மை ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், பாராட்டப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் பெருமளவுக்கு நடந்தும் வருகின்றன. இவற்றில் மேர்ஜ்ஜின் பங்கு கூட இருக்கிறது. இவைகூட சரிநிகர் வாசகர்கட்கு மறைக்கப்பட்டுள்ளன. வாசுதேவ நாணயக்கார போன்றவர்களையே பொய்யர்களாகவும் போலிகளாகவும் நாம் எண்ணத் தொடங்கி விட்டோமென்றால், நாம் தெற்கில் எந்த நம்பிக்கையும் இல்லை என்ற நிலைக்கே தள்ளப்படுவோம். அதிர்ஷ்டவசமாக வாசுதேவ எப்போதும் போலவே அதே உறுதியுடன் இருந்து வருகிறார்.

ஆனால், சரிநிகரோ வாசுதேவவை ஒரு எதிர்மறையான நபராக காட்டுவதற்கே திட்டமிட்டு முயன்று வருகிறது. ஆக, தமிழ் மக்களுக்கு சரிநிகர் என்ன செய்தியைத்தான் தெரிவிக்க முயல்கிறது. நான் இங்கே புலி எதிர்ப்பாளர்களாக மாறுவது பற்றிப் பேசவில்லை. ஆனால் எமது துரதிர்ஷ்டமான சகோதரர்கள் குறித்த எமது பொறுப்புணர்வு என்ன என்பது குறித்தே பேசுகிறேன்.

நான் நினைக்கிறேன், ஒருவர் சரிநிகரின் போக்கை ஒரு திறந்த போக்காக, அதை ஒரு திறந்த களமாக, பல்வேறு அபிப்பிராயங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதாக கூறி விவாதிக்கக் கூடும். அது மிகவும் நேர்த்தியான விடயங்களைக் கையாளக்கூடிய ஒரு பத்திரிகையாக இருக்கும் அதேவேளை இத்தகைய ஒன்றாகவும் ஒருவர் கருதக்கூடும். அது, தான் சொல்வதை சொல்லுகிற விதத்தினாலும், சிலவற்றைச் சொல்லாமல் தவிர்க்கும் விதத்தினாலும் தமிழர்களை அழிவுக்குள்ளாக்கும் அரசியலுக்கு நியாயத்தன்மையை வழங்கும் அதேவேளை, ஒரு புலிசார்புப் பத்திரிகை அல்ல என்ற பெயரைக் கூட பேணவும் முடியும்.

சரிநிகர் சிங்கள பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்ததன் மூலம் அரசியல் ரீதியில் சரியாக இருந்திருப்பதாக வாதிக்கவும் கூடும். ஆனால் ஒருவர் நேர்மையானவராகவும் பொறுப்புணர்வுள்ளவராகவும் இருக்க வேண்டுமானால், அவர் இத்தகைய கண்டனங்களுக்கும் அப்பால் போய் இப்படுகொலைகளை தனது ஒரு அங்கமாகக் கொண்ட தமிழ்தேசிய அரசியலின் நியாயத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். ஆனால் நடைமுறை என்னவென்றால், இந்த அரசியலை நியாயப்படுத்தியபடியே இந்தப் படுகொலைகள் எல்லாம் நடைமுறைத் தவறுகள் என்று காட்டிக்கொள்ளவே இங்குள்ள தமிழ் மேலோங்கிகள் முனைகின்றனர்.

இப் பத்திரிகைகளது குழப்பகரமான அணுகுமுறையினையும் அவர்களது புலிகளுக்கு சாதகமான சொந்தத் தணிக்கை முறையையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறது, அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து பொதுமக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட சம்பவம். இச்சம்பவத்தில் மக்கள் தாம் முற்று முழுதாக அழிந்து போனதாக உணர்ந்தார்கள் தமது சமூகமும் சமூக நிறுவனங்களும் இரவோடிரவாக இயங்காமல் நின்று போய்விட்டதாக உணர்ந்தார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன் முஸ்லிம்களுக்கு என்ன நடந்ததோ அதே தமக்கும் இன்று நடந்திருப்பதாக அவர்களது மனதின் நல்லுணர்வுகள் கூறின. ஆனால் இந்த இரு பத்திரிகைகளும் (வீரகேசரி, சரிநிகர்) பி.பி.சி. தமிழ் சேவையும் ஒன்றில் மக்களது இந்த முக்கியமான நெருக்கடி பற்றிய விடயங்களை குழப்பின அல்லது வெளியிடாமல் தவிர்த்தன. இதற்கு காரணம் அவர்களது காதுகள் செவிடு என்பதல்ல.."

இக்கடிதத்தின் இன்னுமோரிடத்தில் ஹூல் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்..

".. இந்தப் பத்திரிகைகள் தொடர்ச்சியாக தவறுகள் என்ற மட்டத்துக்கு அப்பால் போய் தீங்கிழைப்பனவாகி வருகின்றன. (அதாவது, தமது தேசியவாத நம்பிக்கைகளை வாசகர்களுக்கு தொற்ற வைப்பதற்காக எதிரிகளை விட துரோகிகள் ஆபத்தானவர்கள் போன்ற வாசகங்களை வெளிப்படுத்துதல்) எழுதுபவருக்கு இது ஒரு விளையாட்டு. ஆனால் சமூகத்திற்கோ? இளைஞர்கள் தூண்டப்படுகிறார்கள், இதனால் பயங்கர நிலைமைகள் தோன்றுகின்றன. நிச்சயமாக இவை கேள்விக்குள்ளாக்கப்படுதல் வேண்டும்.."

இங்கே ஹூல் தெரிவித்துள்ள விடயங்கள் எவ்வளவுக்கு உண்மையானவை, எவ்வளவுக்கு திரிக்கப்பட்டவை அல்லது அரைகுறையான புரிதலுடன் கூறப்பட்டவை என்பதை விளக்குவது வீண். சரிநிகர் பத்திரிகையில் அவர் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்துமே எழுத்திலேயே உள்ளன. அவற்றை திருப்பி வேண்டுமானால் ஒருதடவை வாசிக்கும்படி அவரைக் கோருவதைத் தவிர வேறெதுவும் அவசியமில்லை. உதாரணமாக வாசுதேவ மீது திட்டமிட்ட சேறுபூசும் நடவடிக்கை எதையும் சரிநிகர் செய்ததோ அவரைப் போலி என்று ஒதுக்கியதோ கிடையாது. இவை ஆதாரமற்ற வெற்றுக்கதைகள்.

வாசுதேவ அவர்கள் தொடர்பாக, அவரது பேட்டி ஒன்று வெளிவந்த போது அதில் எழுதப்பட்ட ஆசிரியர் குறிப்பு ஒன்று, ஒரு குறிப்பிட்ட சம்பவத்தின் போது அவர் எடுத்த நிலைப்பாடு பற்றி ஒரு கேள்வி எழுப்பியுள்ளது. இது பலருக்குப் பிடிக்கவில்லை. வாசுதேவ அவர்கள் தமிழ் மக்களின் உரிமை தொடர்பாக பேசிய, போராடிய வரலாற்றை ஒன்றும் இருட்டடிப்பு செய்யும் நோக்கம் சரிநிகருக்கு கிடையாது. ஆனால் அவரது அந்தப் பங்களிப்புக்காக அவரைக் கேள்விக்கப்பாற்பட்ட ஒருவராக கருதுவதோ, இவ்வாறான கேள்விகள் கேட்கப்படும் போதெல்லாம் கேட்கப்படுபவரை சரிநிகர் முற்றாக அவரது எல்லா பங்களிப்புகளையும் நிராகரித்து விட்டதாக கருதுவதோ அபத்தமானது. இத்தகைய முடிவை பத்திரிகையை உள்நோக்கங்களுக்காகப் படிக்கும் நபர்களால் மட்டும்தான் எடுக்க முடியும்.

உதாரணத்திற்கு ராஜன் ஹூல் அவர்களும், அவர் சார்ந்துள்ள மனித உரிமைகட்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற அமைப்பும் இன்றைய அரசாங்கத்தின் போக்குக்கு சார்பாக இருக்கிறார்கள், அதன் நடவடிக்கைகளை தவறுகளாக இனங்காண்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் எந்தவிதமான பங்களிப்புமே செய்யாத வெறும் பிழைப்புவாதிகளாகவே இருந்துள்ளார்கள் என்று சரிநிகர் ஒருபோதும் எழுதப் போவதில்லை. சரிநிகருக்கு தெரியும், யுத்தத்தை வைத்து பிழைப்பு நடத்திய பலர் போலவே, சமாதானத்தை வைத்தும் பலர் பிழைப்பு நடாத்தி வருகிறார்கள் என்பது. இந்தப் பிழைப்பு வாதிகள் குறித்தும், தவறு விடுபவர்கள் குறித்தும் சரிநிகர் எப்போதும் தெளிவாகவே இருந்துவந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஹூல் அவர்களது கண்ணாடியில் இப்போது பூசப்பட்டிருக்கும் அரச சார்பு -புலி எதிர்ப்புச் சாயத்தில் உலகம் அவரது கண்ணுக்கு வேறுவிதமாகத் தெரிகிறது. சரிநிகரும் அப்படித் தோன்றுகிறது. சமாதான ரயிலின் சாதனைகள் பற்றிய சரிநிகரின் எழுத்தினை புரிந்து கொள்ளக்கூட அவருக்கு முடியவில்லை. அதிலே வெளியிடப்பட்ட அரட்டையின் சொந்தக்காரர் அவரது மதிப்பிற்குரிய ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தான் என்பதை சரிநிகர் எழுதாதது அன்றைய யாத்திரையின் 'மகத்துவத்தை' மேலும் மோசமாக்கிவிடக் கூடாது என்பதால் தான் என்பது ஹூலுக்கு தெரியாமல் இருக்கலாம். தகுதிக்கு மீறிய பிரபல்யம் கொடுக்க ஹூல் அவர்கள் விரும்பினால் தாராளமாக செய்யட்டும். ஆனால் அன்றைய சமாதான ரெயிலுக்கு அதைவிட சிறப்பாக எழுத சரிநிகருக்கு மனச்சாட்சி இல்லாமல் போய்விடவில்லை. அதுவே அதிகம்!

இவையெல்லாம் வெறும் அவதூறுகளா அல்லது உண்மையா என்பதை காலம் நிச்சயமாகக் காட்டும். ஆனால், இந்த விடயங்களை ஆங்கிலப் பத்திரிகை உலகுக்கு எடுத்துச் சென்ற ஹூல் அவர்களுடைய நோக்கம் சரிநிகரின் பேனாவை ஸ்தாபன ரீதியாக பிடுங்கி விடுவது அல்ல என்றால், அவரது குற்றச்சாட்டுக்கள் ஆதாரமானவை என்று அவர் கருதினால் அவற்றை சரிநிகரிலேயே முன்வைக்குமாறு ஆசிரியபீடம் கேட்டுக்கொள்கிறது. அதற்கு முடியாவிட்டால் வேறேதாவது தமிழ் பத்திரிகையிலாவது எழுதுமாறு சரிநிகர் கேட்டுக்கொள்கிறது.

ராஜன் ஹூல் அவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வரும் பத்திரிகைகளையும் கூட கவனமாகப் படித்து வருகிறார் என்பதை அவரது கட்டுரையும் கடிதமும் காட்டுகின்றன. எனவே சரிநிகரை ஒப்பீட்டு ரீதியாக கேள்விக்குள்ளாக்கும் தகுதி அவருக்கு நிச்சயமாக இருக்க வேண்டும் என்பதால் அவரை சரிநிகரிலேயே இந்த விவாதத்தைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சரிநிகரைப் பொறுத்தவரை, சிங்கள மக்கள் மத்தியில் புலி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து கைதட்டல் வாங்குவதும், தமிழல்லாத பிற மொழியில் சரிநிகர் பற்றி விமர்சித்து சரிநிகரை இனவாதப் பத்திரிகையாக காட்டுவதும், இன்னமும் இதுபோன்ற நடவடிக்கைகளும் உள்நோக்கம் கருதிய நடவடிக்கைகளேயன்றி வேறல்ல. தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை என்ற ஒன்று இந்த நாட்டில் இருந்ததே இல்லை என்ற எடுகோளுடன் பேசுவதானால், சரிநிகரும் ஹூல் அவர்களின் கருத்துக்களுடன் உடன்படத் தயாராகவே உள்ளது. அவரது ஞான திருஷ்டி மூலமாக அறைக்குள் நடப்பது என்ன என்பதை அறியும் ஒரேயொரு விடயத்தில் மட்டும் உடன்பட முடியாது என்பதைத் தவிர மற்றப்படி சரிநிகர் ஹூல் அவர்களின் பக்கமே தான்!

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

SARINIHAR

சரிநிகர்

# வடக்கின் கிலுகிலுப்பை!

ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு, 'ரிவிரச' க்கள் முடிந்து மூன்றாவது நடந்துகொண்டிருக்கிறது.

சிங்கள மொழியில் ரிவிரச என்றால் சூரியக்கதிர் என்று அர்த்தம்.

குடாநாட்டில் சூரியக்கதிர் ஏற்படுத்திய தாக்கம், இலங்கை அரசுக்கும் படைகளுக்கும் இராணுவ ரீதியான வெற்றியை அளித்துள்ளது.

'இது அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான வெற்றியும் கூட, இவ்வளவு கால ஐ.தே.க. ஆட்சிக்காலத்திய தலைமைகளால் சாதிக்கப்பட முடியாதது என்று கருதப்பட்ட வெற்றியை பொ.ஐ.மு. அரசாங்கம் சாதித்திருக்கிறது. குடாநாட்டு மக்களை புலிகளிடமிருந்து விடுவித்துள்ளது. எனவே இது அரசியல் ரீதியான வெற்றியும் கூடத்தான்' என்று கூறுகின்றனர் அரசு தரப்பு புத்திஜீவிகள்.

ஒரு வெற்றி தற்காலிகமான வெற்றியா அல்லது அது நிரந்தரமான ஒன்றா என்பதை யுத்தத்தை அடுத்து வரும் ஓரிரு பொழுதுகளின் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணிப்பிட்டுக்கூறுவது சாத்தியமில்லை. ஏனென்றால், வெற்றிக்கு காரணமாக அமைந்த காரணிகள் என்றென்றைக்கும் நிலையான மாறிலிகளாக இருப்பதில்லை. அவைகளும் மாறிக்கொண்டுதான் இருக்கின்றன என்பதால், வெற்றியின் நிச்சயமின்மை எப்போதும் முக்கிய கவனிப்புக்குரிய ஒன்றாகவே உள்ளது.

யுத்தத்தில் இலங்கை இராணுவம் வெற்றிபெறக்காரணமாக இருந்தவைகள் என்ன என்பதை இந்த இனப்பிரச்சினை தொடர்பான யுத்தத்தின் வரலாற்றை கூர்ந்து நோக்கும் ஒருவரால் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியம். அவ்வாறு முடியாவிட்டாலும் கூட இந்த வெற்றிக்காக இலங்கை அரசாங்கம் தன்தரப்பில் புதிதாக சேர்த்துக்கொண்ட பலங்கள் என்ன என்று பார்க்கும் ஒருவருக்கு உண்மை விளங்கிவிடும்.

ஆம், யுத்தத்தில் விடுதலைப் புலிகள் தோல்வியடைந்ததற்கு காரணம் பலர் நினைப்பது போல அரசாங்கத்தின் ஆயுத பலமோ அல்லது புலிகளின் இராணுவ சக்திகள் பலவீனமடைந்தமையோ அல்ல. அவற்றிற்கு முக்கிய பங்கு இருந்தபோதிலும் அவைகளைவிட முக்கிய காரணம் விடுதலைப்புலிகளின் தலைமையிலான இந்தப் போராட்டம் அதன், தவறுகள் காரணமாக சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியிலும் அரசியல் ரீதியில் பலவீனமடைந்தமையேயாகும்.

கடந்த பொதுத்தேர்தலில் ஆட்சியினைக் கைப்பற்றும் வாய்ப்பு இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டது எவ்வாறு முன்னைய ஆட்சியின் பலவீனங்களின் அடிப்படையில் உருவானதோ, அவ்வாறே இன்றைய வெற்றியும் கூட அரசாங்கத்தின் சொந்தப் பலத்தை விட புலிகளின் பலவீனத்தின் மீதே பிறந்துள்ளது.

எதிராளியின் பலவீனம் காரணமாக பெறுகின்ற வெற்றி தமது சொந்த பலத்தின் விளைவாக உருவாகாத ஒரு வெற்றி, ஆகக்குறைந்த பட்சம் அவ்வெற்றிக்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளவாவது வெற்றிபெற்றவர் முயலாவிட்டால் நீண்டநாள் தாக்குப் பிடிக்க முடியாத ஒரு நிச்சயமற்ற வெற்றியாகவே இருக்க முடியும்.

அரசினாலும் அதன் சகாக்களினாலும் இன்று பெரிதும் சிலாகிக்கப்படும் குடாநாட்டு வெற்றி இந்த அரசின் அரசியற் பலத்தின் மீது கட்டி எழுப்பப்பட்ட ஒன்றாக இல்லாத பட்சத்தில் அது வெறும் தற்காலிக வெற்றியாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

ரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் அதுவும் யுத்த வெற்றியின் பின்னான நடவடிக்கைகள் அதன் ஆரம்பகால சமாதானம், ஐக்கியம், சுதந்திரம், ஜனநாயகம் என்ற முழக்கங்களை விற்று விடுகின்ற விதத்தில் நடைபெற்று வருகின்றன. வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை புறக்கணித்து விட வாய்ப்பளிக்கக் கூடிய ஒரு வெற்றியாகவே இது அரசு தரப்பினால் விளங்கிக்கொள்ளப்படுவது போலப் படுகிறது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கொண்டு வரப்பட்ட தீர்வுப் பொதி யுத்த களேபரத்தில் காணாமற் போய் விட்டது. தமிழ் அரசியற் கட்சிகளிற் சில இன்னமும் அரசாங்கத்தை நம்பிக்கொண்டும் அதன் படைகளுடன் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கின்ற போதும் அவற்றிற்கு முழங்கையைக் காட்டும் போக்கையே அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது.

தொடர்ந்து செய்தித் தணிக்கையை வைத்திருத்தல், வடக்கிற்கு செய்தியாளர்கள் சுதந்திரமாக செல்ல அனுமதி மறுத்தல், அவசரகால சட்டத்தை நாடுபூராவும் நடைமுறையில் வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தபடியே வடக்கிலுள்ள மக்கள் சந்தோஷமாக, விடுதலைப் பெற்ற உணர்வுடன் உள்ளனர் என்று கூறிவருகிறது அரசு. அரசாங்கம் சொல்வதை மட்டும் நம்பவேண்டிய நிலையிலுள்ள மக்கள் எத்தனை நாளைக்குத்தான் தாம் சுதந்திரமாக ஜனநாயக பூர்வமாக நடாத்தப்படுவதாக நம்பிக்கொண்டிருக்க முடியும்?

வடக்கிலே 'சுதுநெலும்' போன்ற அமைப்புக்களை நிறுவி இராணுவ நிர்வாகத்தின் கீழ் தேர்தல் (மாகாண சபை/ உள்ளூராட்சி சபை) களை நடாத்தி தாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று காட்டுவதும் அங்குள்ள மக்கள் தமது அரசியல் தீர்வை எதுவாக இருந்தாலும் சரி - ஏற்றுக்கொள்ளத் தயார் என்றும் காட்டுவதுமே அரசாங்கத்தின் யுத்தத்தின் பின்னான நடவடிக்கைகளாக உள்ளன. தெற்கில் ஏற்பட்டு வரும் அரசியல் நெருக்கடிகளை சமாளிக்க வடக்கின் யுத்த வெற்றியை ஒரு 'கிலுகிலுப்பை' யாக காட்டி வருகிறது இந்த அரசாங்கம் என்ற சந்தேகம் மெல்ல மெல்ல வலுத்து வருகிறது.

ஆக; அரசாங்கத்தின் இந்தப்போக்கு, அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துகிற தமிழ்க் கட்சிகளாவது அங்கீகரிக்கிற விதத்திலான ஒரு தீர்வை நடைமுறைப்படுத்துகிற செயலில் இறங்காமல் தொடருமானால் எந்தக் காரணிகள் இன்று இந்த அரசாங்கம் வெற்றிபெறக்காரணமாக இருந்ததோ அவையே அதனை மண்கவ்வச்செய்யும் போக்கில் வளர்ந்துவிடும்.

அதன் பிறகு திரும்பவும் பழைய நிலைக்கு நாட்டு நிலைமைகள் திரும்பும்.

விளைவுகளாக பொ.ஐ.முயின் சந்திரிகா அரசு சாதித்த சாதனைகளாக முற்றாக அழிக்கப்பட்ட ஒரு குடாநாடு, கொல்லப்பட்ட மக்கள், கரியாய்ப் போன செல்வங்களும் அவமாகப் போன நேரமும் மட்டுமே எஞ்சும். நேரத்தை மிச்சம் பிடித்த கடிகார முள்ளை முன்னோக்கித் தள்ளுவதில் பெரிய சாதனை ஒன்றும் இல்லை. இதில் தான் சாதனை தங்கியிருக்கிறது.

அரசியல் தீர்வு கைவிடப்பட்டு, மக்களை ஏமாற்றுவதற்கு எடுக்கிற ஒவ்வொரு முயற்சியும் பலமிக்க எதிர்ப்புகளை புதிதாக உருவாக்கும்.

போராடிக்கொண்டிருந்த புலிகளை விட, இன்று வெற்றிகொண்டு விட்டதாக சொல்லப்படும் புலிகளை விடப் பலமான பல புலிகளை, அது தோற்றுவிக்கும்.

தமிழ்மக்கள் அரசியல் விடுதலைதான், அதை அங்கீகரிக்கும் மனோநிலைக்கு இந்தஅரசாங்கம் தன்னை மாற்றியமைத்துக்கொள்வதுதான், நிரந்தரமான வெற்றிக்கு வாய்ப்பளிக்கும்.

இந்த நிரந்தரமான வெற்றியின் போது யாரும் தோற்றுப்போவதில்லை.

ஆக, இந்தக் கணத்தில் அரசாங்கம் நினைவில் வைத்திருக்கவேண்டியது இதுதான்:

போர்க்கள வெற்றிகள் புதுயுகத்தைப் படைப்பதில்லை!

சமாதானத்தின் மடியில் இருந்துதான் புதுயுகம் பிறக்கிறது!

# மட்டக்களப்பில் மண்டையன் குழு!

இப்போதெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியினர் அப்பாவித்தமிழ்மக்கள் மீது தமது கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. 1990ல் விடுதலைப் புலிகள் மீது ஸ்ரீலங்கா அரசு தாக்குதலைத் தொடங்கிய காலம் முதல் இக்கட்சி தன்னை ஒரு நடுநிலையான இயக்கமாகவே காட்டிவந்துள்ளது. ஆயினும், இப்போது இவர்கள் நடந்து கொள்ளும் நடவடிக்கைகள் பலர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அமைதிப்படை காலத்தின் போது ''மண்டையன் குழு'' என்ற பெயரில் பல பயங்கரமான கொலைகளைச் செய்ததாக சந்தேகிக்கப்படும் ராஷிக்குழுவினர் தற்போது மீண்டும் அரங்கத்திற்கு வந்துள்ளனர். மட்டக்களப்பு லேக்வீதியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். இன் அலுவலகத்தினை இன்று அனைவரும் அச்சத்துடனேயே நோக்குகின்றனர்.

கடந்த காலங்களில் டெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய இயக்கங்கள் ஸ்ரீலங்கா அரசின் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவதாகக் கூக்குரல் எழுப்பிய ஈ.பி.ஆர்.எல்.எப். அதே ஸ்ரீலங்கா அரசின் படைகளுடன் தமது அணியும் இன்று இரண்டறக் கலந்துவிட்டது குறித்து ஈ.பி.ஆர். எல்.எப். என்ன சொல்லப்போகிறது? ஈ.பி.ஆர்.எல்.எப். இன் ராஷிக்குழு எந்த ஒரு எஸ் .டி. எப். முகாமிற்குள்ளும் சுதந்திரமாகச் சென்று வர முழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல இன்னுமொரு படிமேலே சென்று புலிகள் என சந்தேகிப்போரை கைது செய்யவும் அவர்களை விசாரிக்கவும் கூட அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இருமாதங்களுக்கு முன்பு புலி ஆதரவாளர் எனக் கைதுசெய்யப்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் இவர்களால் மோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

தற்போதும் அப்பாவிகளான மூன்று இளம்பெண்கள் கிராமப்புறங்களிலிருந்து நகருக்கு வந்தபோது அவர்களின் தோற்றத்தில் சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்டு லேக்வீதி முகாமிலேயே பல நாட்களாக அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் என்று தெரியவருகிறது.

ராஷிக்குழுவினர் இப்போது இரு பகுதிகளாகப் பிரிந்து வெல்லாவெளி, மண்டூர் ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள எஸ். டி. எப்புடன் நடமாடி வருகின்றனர். இவர்கள் தற்போது புலிகளுக்கு எதிரான தாக்குதலில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவ்வாறான தாக்குதல் ஒன்றின்போது ஈ.பி.ஆர்.எல்.எப். இன் முக்கிய நபரான மேகநாதன் என்பவர் மண்டூரில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்பு புலிகள் மட்டக்களப்பில் வாகனச் சொந்தக்காரர்களிடம் வரி அறவிட்டது போல இவர்களும் தற்போது வரிவிதிப்பில் இறங்கியுள்ளனர். செங்கல் ஏற்றுவதற்காக செல்லும் ஒவ்வொரு லொறியும் ஒவ்வொரு டிரக்ரரும் மாதாந்த வரியாக ரூபா ஆயிரம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் 20ம் திகதி இவர்களது வரி அறவிடும் நாளாகும். அன்றைய தினம் இவர்களுடைய முகாமிலிருந்து நெடுந்தூரம் வரை லொரிகளும் டிரக்டர்களும் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணலாம். தவிரவும் மட்டக்களப்பில் கட்டிட ஒப்பந்த வேலைசெய்யும் ஒவ்வொருவரும் அவர்களிடம் கேட்கப்படும் தொகையை செலுத்தியாகவேண்டும். செலுத்த தவறும் பட்சத்தில் அவர் உடனடியாக புலி ஆதரவாளராக கருதப்பட்டு அவர் மீது 'நடவடிக்கைகள்' ஆரம்பிக்கப்பட்டு விடும். இவ்வாறான வரிவிதிப்பு ரூபா 5இலட்சத்தை சேகரிக்கும் வரைதான் செய்யப்படும் எனவும் இவர்களில் ஒருசிலர் கூறுகின்றனர். தற்போது ராஷிக்குழுவினர் லேக்வீதியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். இன் காரியாலயத்தில் தான் தங்கியிருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது அங்கிருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் சில அரசியல் பீட உறுப்பினர்களுக்கு பிடிக்கவில்லை. இதனால் ராஷிக் குழுவினரை அங்கிருந்து வேறு இடத்துக்கு செல்லும்படி கேட்டுள்ளனர். தற்போது ராஷிக்குழுவினர் தமது இருப்பிடத்தை முன்னைய எம்பியான சாம் தம்பிமுத்துவின் வீட்டிற்கு மாறவுள்ளனர். இதற்கு அவர்களுக்கு ரூபா 5இலட்சம் தேவைப்படுவதாயும் அது சேர்ந்ததும் வரிவிதிப்பை நிறுத்தி விடுவோம் என்றும் கூறுகின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைமைப்பீடத்தின் கட்டுப்பாட்டை மீறியே இக்குழு இயங்கி வருகிறதென்ற ஒரு கருத்தும் பரவலாக பேசப்படுகின்றது. இது எந்தளவுக்கு உண்மையோ தெரியாது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இதற்கு பதில் சொல்லுமா?

ராஜன்

# திருமலை:

# மயானங்களும் அபகரிக்கப்படுகின்றன!

நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி ஒரு மையவாடி பெரும்பான்மை மக்களால் கபளீகரம் செய்யப்பட்டிருக்கிறது. 1 ஏக்கர் 1 றூட் 5பேர்ச் அளவிலான திருக்கோணமலை மத்திய வீதி ஜும்மாப் பள்ளிக்குரிய மையவாடி குடியேற்றத்தினால் சுருங்கிப் போய் 26 பேர்ச்சில் வந்து நிற்கிறது.

1964ம் ஆண்டு புயலால் பாதிக்கப்பட்டதன் விளைவாகத் தற்காலிகக் கொட்டில்கள் போட ஒன்பது குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அப்போதிருந்த தலைவர் அனுமதி வழங்கினாராம். அந்த அனுமதி இன்று மையவாடியையே விழுங்கி விட்டதால் அந்தப் பள்ளியைச் சேர்ந்த முஸ்லிம்கள் நொந்து போயிருக்கிறார்கள்.

மனிதாபிமானம் மதச்சுதந்திரத்துக்கே ஆப்பு வைத்து விடும் நிலைமை எழுந்த போது பள்ளி நிர்வாகம் நீதிமன்றத்தை நாடியிருக்கின்றது. ஆனால், குடியிருந்தோரோ இது முஸ்லிம் மையவாடிக்குச் சொந்தமேயில்லாத காணி என்று உறுதியாகக் கூறி எழும்ப மறுத்து விட்டார்களாம்.

இது நகரசபைக் காணி என்பது அவர்களது வாதம். இந்த வாதத்தை வளர்ப்பதில் கச்சேரியில் பணிபுரியும் சில உத்தியோகத்தர்களும் துணை நிற்கின்றனர். 'பயப்படாதீர்கள்... இந்தக் காணியை உங்களுக்கே சொந்தமாக்கித்தருகிறோம்' என்று உறுதி மொழிகள் கூட கொடுத்திருக்கிறார்கள்.

நகரசபையை விசாரித்ததில் இது தங்களுக்குச் சொந்தமான காணியல்ல என்றும் மத்திய ஜும்மாப் பள்ளிக்குரிய மையவாடியே என்றும் ஆதாரபூர்வமாகக் கூறியது. நகர சபைத் தரவுகளின்படி 1867 பங்குனி மாதம் 2ந்திகதி வீரபத்திரர் முருகப்பரும் அவர் மனைவி அபிராமிப் பிள்ளையும் தங்கள் பேரப்பிள்ளையான கந்தப்பர் இராமலிங்கம் என்பவரைக் கொண்டு நன்கொடையாக வழங்கியிருக்கின்றார்.

கந்தப்பர் இராமலிங்கம் 1898 மாசி 9ந்திகதி நொத்தாயிசு ம.மு.சுப்பிரமணியம் என்பவரைக்கொண்டு எழுதி மதனா சாய்பு ரீபு என்பவருக்கு 450/=க்கு கைமாற்றியுள்ளார்.

மதனா சாய்பு ரீபு தனது மரணத்தறுவாயில் 1901 ஆவணி 20ந்திகதி நொத்தாயிசு ம.மு.சுப்பிரமணியத்தின் மூலம் தனது சந்ததி 44பேரும் அவர்களது வாரிசுகளும் சவக்காலையா உபயோகிக்க இதனை எழுதியுள்ளார். அதனைத்தொடர்ந்து அரசாங்கச் சட்டத்துக்கமைய இந்நிலம் மையவாடியாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிநிர்வாகம் தொடுத்த வழக்கு 1981, 1982 காலப் பகுதிகளில் சாதகமான தீர்ப்பைப் பெற்றது. எனினும் 1983ஆம் ஆண்டு கலவரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் பலகுடும்பங்கள் மையவாடியில் குடியேற்றப்பட்டன.

தொடர்ந்து வந்த நாட்டு நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்ட பெரும்பான்மையினரின் (அடாத்தைத்) தட்டிக்கேட்க முடியாத சூழலில் இருந்த நிர்வாகம் 1994ம் ஆண்டு ஆனி மாதமளவில் நிதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் இவர்கள் குடி எழுப்ப நடவடிக்கை எடுத்தது. இந் நடவடிக்கைக்காகச் சென்ற பொலிசாரும் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் அங்கிருந்தோரால் பயமுறுத்தப் (?)பட்டதனால் நீதிமன்றத் தீர்ப்பு இன்றுவரையில் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளது.

தற்போது மையவாடியில் 23 குடும்பங்கள் குடியிருக்கின்றன. பொலிஸார் கடமையைச் செய்ய முடியாது திரும்பினார்கள் என்பதில் எந்த முஸ்லிம் மகனுக்கும் நம்பிக்கையில்லை. கடமையைச் செய்ய விரும்பாது திரும்பினார்கள் என்பதே உண்மை என்று கூறுகிறார்கள்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் பலரிடம் நியாயம் கேட்கத் தொடர்பு கொண்டிருகிறார்கள் பள்ளி நிர்வாகத்தினர். பதில் இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்புக்குக் கூட நம்பிக்கையோடு கடிதம் போட்டார்கள். பதிலே இல்லை என்பதை வேதனையுடன் கூறுகிறார்கள்.

இதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள இன்னொரு மையவாடி ஜமாலியப் பகுதி மக்களுக்குச் சொந்தமானது. அதில் கூட ஒரு பெரும்பான்மையின சைக்கிள் திருத்தும் கடை போட்டுத் தொழில் நடத்துக்கிறார். நாளை கடையை அடுத்து கட்டம் தோன்றி வீடாகாது என்பதற்கு உத்தர்வாதம் இல்லை.

இந்து மயானம் மட்டும் என்ன வாழ்கிறது? அங்கும் கூடப் பெரும்பான்மையோர் குடியேற்றம்தான். மெல்ல மெல்லப் பிடித்து மயானக்காணிக்குள்ளும் பூமரங்கள் வளர்க்கத் தொடங்கி விட்டார்கள். உடலைப் புதைப்பதற்கு செல்பவரிடம் தள்ளிப் புதையுங்கள் இங்கே ஆட்கள் இருப்பது தெரிவதில்லையா? என்று வேறு கேட்கிறார்கள் அந்தச் சிறுவர்களுக்கு மயானம்தான் கிரிக்கெட் மைதானம்.

தாமரைக்கு வெண்மை இயற்கையாக அமைய வேண்டும். சுடலைச்சாம்பலைப் பூசி வெண்மை காட்டுவ்தால் யாருக்கு என்ன லாபம்?

நந்தன

பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615

வெளியீட்டாசிரியர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ ச... கொழும்பு 03. அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல. 334, காலி வீதி, இரத்மலானை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

960528